நடைபெறுகிறது!
A/L 87 Day Class
பிரிவு II
8.00 - 9.00 PHYSICS
9.00 - 10.00 CHEMISTRY
10.00 - 11.00 ZOOLOGY
11.00 - 12.00 BOTANY
10.00 - 12.00 (PURE & APP. MATHS
New Master Institute
B.M.C. Lane, Jaffna.

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

Day Class
Physics: திரு. [illegible]
Chemistry: திரு. [illegible]
Zoology: திரு. [illegible]
Botany: திரு. [illegible]
Pure & Applied Maths: திரு. [illegible]
New Master Institute
B.M.C. Lane, Jaffna

மலை:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய வருஷ ஐப்பசி மீ 8 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 20 (25-10 1986) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம் :40

# குடாநாட்டில் புதிதாக கிராம நீதிமன்றங்கள்

## புலிகளால் ஸ்தாபிதம்

### வழக்கு தாக்கல் இலவசம்

யாழ்ப்பாணம். அக்டோபர். 25

தமிழீழ கிராம நீதிமன்றங்கள் உதயமாகியிருக்கின்றன.

குடாநாட்டில் உள்ள 116 கிராமசேவகர் பிரிவுகள் தோறும் இந்த நீதிமன்றங்கள் இயங்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இந் நீதிமன்ற அமைப்புகளை ஸ்தாபித்துள்ளது.

தமிழீழ தேச சட்டத்தையும், நீதியையும் தமிழீழ பிராந்தியங்களில் இந்தக் கிராம நீதிமன்றங்கள் நிர்வகிக்கும்.

தமிழ் இனம் சட்டம், ஒழுங்குடன் கூடிய ஒரு சமுதாயமாகத் திகழ்வதை நோக்காகக் கொண்டு இந்த நீதிமன்றங்கள் இயங்கும்.

ஒவ்வொரு பிரசையும் தமது கிராமசேவையாளர்பிரிவு எல்லைக்குட்பட்ட கிராம நீதிமன்றத்தில் தங்களுடைய வழக்கைத் தரக்கல் செய்து பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என புலிகள் இயக்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வழக்குத் தாக்கல்செய்வதற்கு கட்டணம் எதுவும் இல்லை.

வழக்கு சம்பந்தப்பட்ட மேன்முறையீடுகளை பிரதேச பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்கலாம் என்றும் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்த நீதிமன்றங்கள் நீதி, நேர்மை, கட்டுப்பாடு, ஒழுக்கம் என்ற அடிப்படையில் இயங்கும். சமூக நீதிக்கு அமைய நடுநிலையுடன் தீர்ப்பு வழங்கப்படும்

விசாரணைகள், விசாரணைசெய்வோர் சம்பந்தமான ஒழுங்கு விதிகள், நீதிமன்ற அமைப்பு, அதிகாரம் ஆகியவை சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களும் விடுதலைப் புலிகளினால் நேரடியாகக் கண்காணிக்கப்படும் என்றும் —

சட்டவிரோத செயற்பாடுகள் போன்றவை புலிகள் இயக்கத்தினால் நேரடியாகக்கண்காணிக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் விவரிக்கப்பட்டது.

(அ-உ)

## மன்னார் மோதல் நேற்றுடன் முடிவு

யாழ்ப்பாணம், அக். 25

மன்னார் அடம்பன் பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்று வந்த இருதரப்பு மோதல்களும் நேற்று முடிவுக்கு வந்தன.

விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களினால் இராணுவம் பின்வாங்கிச் சென்றதைத் தொடர்ந்து மன்னார்ப் பகுதி நேற்று அமைதியானது.

காயமடைந்தவர்களை வைத்தியசாலைகளில்சேர்ப்பதில் இப்பகுதி மக்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

காடுகளிலும், ஆலயங்களிலும் அகதிகளாகத் தஞ்சம் அடைந்திருந்த மக்கள் தமது இருப்பிடங்களை நோக்கித் திரும்பிக் கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

(உ-10)

## தாய் தந்தையரும் 4 உடன்பிறப்புக்களும் யுவதிகண்முன்னால் கொலை

### அடம்பனில் நடந்த கண்ணீர்க்கதை

யாழ்ப்பாணம், அக்டோபர் 25

இளம் யுவதி ஒருவரின் கண்முன்னால் அவரின் தாய், தந்தையரையும் நான்கு உடன்பிறப்புக்களையும் துடிக்கத் துடிக்கச் சுட்டுக்கொன்றனர் படைவீரர்.

இந்தக் கண்ணீர்ச்சம்பவம் கடந்த புதன் கிழமையன்று மன்னார் அடம்பன் மாதா கோவிலடியில் நடந்திருக்கிறது

படையினரின் இந்தக்கொடூரச் செயலில் சூட்டுக்காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பிய இளம்பெண் தம்பிராசா ஞானசிலி (வயது 19)

ஒரு கணநேர வெறியாட்டத்தில் குடும்பத்தவர்களை கூண்டோடு இழந்து தனித்துப் போன ஞானசிலியின் கதை உள்ளத்தை உருக்குவதாக உள்ளது.

இரண்டு காலிலும் சூட்டுக்காயங்களுடன் இவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

தமது குடும்பத்துக்கு நடந்த பரிதாப முடிவு குறித்து அவர் தெரிவித்ததாவது:

கடந்த புதன்கிழமை நண்பகல் 12 மணி அளவில் ஐம்பதிற்கும் மேற்பட்ட சிப்பாய்கள் மாந்தைப்பக்கமாக வந்து மாதா கோவிலடிப் பகுதியில் நிற்பதாக அறிந்தேன். (8 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டிற்கு மின்சாரம் வழங்குவதா?

### நாடாளுமன்றில் சுவையான விவாதம்

கொழும்பு, அக். 25

போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ் குடாநாட்டுக்கு மின்சார விநியோகத்தைத் துண்டித்து விடுவது நல்லதா? கூடாதா?

இது பற்றி சுவையான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலிக்கும் மத்துகம எம்.பி. அனில்முனசிங்காவுக்கும் இடையே நடந்தது.

நேற்று அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணை விவாதம் நடந்தது. அப்போது இவ்வாக்குவாதம் இடம் பெற்றது.

அனில்முனசிங்க: யாழ் குடா நாடு போராளிகளின் கட்டுப் பாட்டில் உள்ளது.

மின்சார விநியோகம் போன்ற வசதிகளை அரசாங்கம் அங்கு தொடர்ந்து வழங்கி வருகிறதே!

அமைச்சர் லலித்: யாழ் குடாநாட்டுக்கான மின் விநியோகத்தைத் துண்டிக்கும் படி உறுப்பினர் ஆலோசனை கூறுகின்றாரா?

அனில்முனசிங்க: இல்லை. இல்லை.

அமைச்சர் லலித்: சமரசப் பேச்சுக்கள் மூலம் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட (8-ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான தினத்தன்று தாக்குதல் இல்லை

### புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், அக். 25

உலக சமாதான தினமான திங்கட்கிழமையன்று அத்தினத்திற்கு மதிப்பளிக்கும் விதத்தில் சிறிலங்கா ஆயுதப்படையினரின் தாக்குதலை முறியடிக்கும் முகமாகவன்றி வேறு எந்தத் தாக்குதலிலும் ஈடுபட மாட்டோம் எனப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உயரிய இலட்சியத்தை சர்வதேச ரீதியில் பறைசாற்றும் முகமாகவே இந்த நடவடிக்கை.

தமிழீழ விடுதலைப் போராட்டம் இன ஒழிப்பின் தீவிரத்துக்கு மத்தியிலும் வளர்ந்து இராணுவ ரீதியில் வெற்றி பெற்று இன்று தமிழீழ நிர்மாணத்திற்குரிய காலகட்டத்திலிருக்கிறது

இன்று விடுதலைப் போராட்டம் தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரையும் பாதுகாத்து (8 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் அட்டகாசம்; 12 க்கும் அதிகமானோர் படுகொலை

யாழ்ப்பாணம், அக். 25

மன்னார் அடம்பன் பகுதியில் கடந்த புதன், வியாழன் ஆகிய தினங்களில் நடைபெற்ற இராணுவத் தாக்குதல்களினால் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பதினைந்துக்கும் அதிகமான வீடுகள் எரித்தும், குண்டு வைத்தும் நாசமாக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவத்தின் போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேர் உட்பட பலர் கொல்லப்பட்டனர். அவர்களில் சிலர் உயிருடன் எரிக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

ஒரு வீட்டில் இருந்த இரண்டு வயோதிபர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பெருந்தெருக்கள் திணைக்களத்தினுள் நான்குபேர் உயிருடன் எரிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

மேலும் பலர் சிப்பாய்களினால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அடம்பன் மாந்தை பகுதிகளில் உள்ள பல கடைகள், பல-நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள், வீடுகள் உடைக்கப்பட்டு பெறுமதி மிக்க பொருள்கள் படையினரால் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

பல கடைகள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது.

கிராமசபை பெருந்தெருக்கள் திணைக்களம் என்பனவும் பலத்த சேதம் அடைந்துள்ளன.

ஏராளமான மக்கள் பறையங்குளம் பள்ளிவாசலிலும், வியாகுல மாதா தேவாலயத்திலும் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மரணமடைந்த பல தமிழர்களின் சடலங் (8 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் தாக்குதல்

பருத்தித்துறை, அக். 25

பருத்தித்துறையில் நேற்றும் புலிகள்- சிப்பாய்கள் மோதல் நடந்தது.

முகாமிலிருந்து வெளியேறிய சிப்பாய்களை நேற்றுக்காலை 5.30 மணியளவில் விநாயகமுதலியார் வீதியில் வைத்துப் புலிகள் தாக்கித் திருப்பியனுப்பினர்.

பின்னர் சிப்பாய்கள் புலிகளின் பாதுகாப்பு அரணை நோக்கி ஷெல் தாக்குதல்களை நிகழ்த்தினர். புலிகளும் திருப்பி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

காலை 9 மணியளவில் படையினரால் ஏவபட்ட ஷெல் குண்டு ஒன்று வட இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் விழுந்தது. கல்லூரியில் இருந்து 4 ஆயிரம் மாணவிகள் இதனால் கிலி கொண்டு ஓடினார்கள். (உ-117)

## விமான நிலையத்தில் இரு தமிழர் கைது

கொழும்பு, அக். 25

அவுஸ்திரேலியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட இரண்டு தமிழர்களைக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இரகசிய பொலீஸார் கைது செய்தனர்.

இவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்புக் கோட்டை நீதிவான் குயின்டஸ் பெரேரா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இரண்டு தமிழர்கள் குறித்து யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா பொலீஸாரிடம் இருந்து அறிக்கை வரும்வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இரண்டு தமிழரின் விவ (8-ம் பக்கம் பார்க்க)

## கருத்துக் கலசம்

### கால்நடை வளர்ப்போம்

வீட்டுக்கு ஒரு பசு வளர்க்க வேண்டும் என்பது எமது முன்னோரின் புத்திமதி.

பசு வளர்ப்பதால் வீட்டுக்கும் நன்மை, நாட்டுக்கும் நன்மை. வீட்டின் பொருளாதாரம் மட்டுமல்ல, நாட்டின் பொருளாதாரமும் பலம் அடையும். போஷாக்கு நிறைந்த ஆவின்பால் நியாய விலையில் கிடைத்தால் திடகாத்திரமான மக்கள் - சமூகத்தினர் உருவாகுவர்.

இவ்வாறான பலநன்மைகளைக் கருத்திற் கொண்டே பசுவளர்ப்பது வீட்டுக்குச் செல்வம் என்று கூறப்படுகிறது. சமய ரீதியில் மட்டுமன்றிப் பொருளாதார வகையிலும் பசு கோமாதா என்று போற்றப்படுகிறது.

பசுவை மட்டுமன்றி ஏனைய கால்நடைகளையும் தமது பிள்ளைகள் போலப் பேணிப் பராமரித்து வளர்க்கும் பழக்கம் தமிழ் மக்கள் வாழ்க்கையோடு ஒன்றிவிட்டதாகும். பட்டிகளை வளர்த்துப் பட்டிப் பொங்கல் கொண்டாடும் வழக்கமும் தமிழர்கள் மத்தியில் பாரம்பரியமானதாகும்.

இன்றைய காலகட்டத்தில் கால்நடை வளர்ப்பில் அதிக அக்கறை செலுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. திட்டமிட்ட முறையில் தமிழ்ப் பிரதேசங்களில் கால்நடை வளர்ப்பைஅபிவிருத்தி செய்ய வேண்டியது அவசியம்.

இது விஞ்ஞான யுகம். குறைந்த செலவுடன், சிறந்த பராமரிப்பில் நிறைந்த பயன் பெறக்கூடியதாகப் பல நாடுகளில் கால்நடை வளர்ப்பு முறைகள் முன்னேற்றம் கண்டுள்ளன. கால்நடை நோய்களைத் தடுத்தல், அவற்றுக்குச் சத்தான உணவுவகைகளை ஊட்டுதல், பால் வளத்தைப் பெருக்குதல் ஆகிய துறைகளில் புதிய நடைமுறைகள், உத்திகள் என்பன அறிமுகமாகி உள்ளன.

அவற்றை எமது மண்ணிலும் வேரூன்றச் செய்யவேண்டும். பால்வளம் பெருக்கக் கூடிய பயன்தரு திட்டங்களை அறிமுகப் படுத்த வேண்டும். அவை குறித்து மக்களுக்கு பரந்த அளவில் புகட்டப்பட வேண்டும்.

மேல்நாட்டு வழிமுறைகளை மட்டும் கைக்கொள்வது புத்திசாலித்தனமானதல்ல. எமது சீதோஷ்ணத்துக்கும், சூழ்நிலைக்கும், வாய்ப்புகளுக்கும், வளங்களுக்கும் ஏற்ற புதிய வழிமுறைகளைக் கண்டறிவதும் அவசியமாகும்.

இந்தத் தேவையை உணர்ந்து ஆய்வு நிறுவனம் அண்மையில் கால்நடை பற்றிய கருத்தரங்கை நடத்தியது. அவ்வாறான கருத்தரங்குகள்கிராம மட்டத்திலும் பரவ (8 ம் பக்கம் பார்க்க)

அரச அதிபர் கூறுகிறார்:

## பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு நான் பொறுப்பல்ல

### ஆகவே அவற்றை என்னிடம் கொண்டுவராதீர்கள்!

யாழ்ப்பாணம்,அக். 25

அரச செயலக சிவில் நிர்வாக பொறுப்பு மட்டும் தான் என்னிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

வடபகுதி மக்களின் பாதுகாப்பு சம்பந்தமான எந்தவிதமான பொறுப்பையும் ஜனாதிபதி எனக்கு வழங்க மாட்டார். வழங்கவில்லை. ஆகையினால் பாதுகாப்பு சம்பந்தமான பிரச்சினை எதையும் என்னிடம் கொண்டு வராதீர்கள்.

நேற்று யாழ் - செயலகத்தில் அரசஅதிபரைச் சந்தித்த அரச ஊழியர்கள், அதிகாரிகள், வெகுஜன அமைப்புக்கள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், ஆசியோர் முன்னிலையில் யாழ்.அரச அதிபர் திரு மு. பஞ்சலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்- ஆஸ்பத்திரி நோயாளர் நலன்புரிச் சங்கப் பிரதிநிதிகளும், வங்கிகள், மாநகரசபை, பாடசாலைகள், ஆஸ்பத்திரி, தொலைத் தொடர்பு திணைக்களம், நீதிமன்றம் உட்பட ஏனைய பொது (8 ஆம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக கல்விமான்கள் வற்புறுத்து

## நாவலர் சிலை மீண்டும் மணிமண்டபத்திற்கே மாற்றப்பட வேண்டும்

யாழ்ப்பாணம், அக். 25

அகற்றப்பட்ட நாவலர் சிலையை மீண்டும் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் உள்ள மணிமண்டபத்துக்கு மாற்றவேண்டும்.

யாழ் பல்கலைக்கழக கல்விமான்கள் 94 பேர் கூட்டாக இப்படி வலியுறுத்தியிருக்கிறார்கள்.

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்கு அனுப்பிய மகஜர் ஒன்றிலேயே பல்கலைக்கழகக் கல்விமான்கள் இப்படி வலியுறுத்தி யுள்ளனர்.

தீர்க்கமான ஆலோசனையின் பின்னரே ஆலயத்துக்கு அருகில் மணிமண்டபம் நிறுவப்பட்டது. 16 ஆண்டுகளின் பின்னர் அவசர அவசரமாக தீர்க்கதரிசனமற்ற முறையில், முறையான கலந்தாலோசனையும் சைவப் பெருமக்களின் விருப்பமுமின்றி இங்கிருந்து மிக மர்மமான முறையில் இச் சிலை அரச கட்டடமாகிய நாவலர் மண்டபத்திற்கு அகற்றப்பட்டது.

இதையிட்டு நாம் மிகுந்த வேதனையும்,கவலையும் அடைகிறோம் - இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மகஜரில் கையெழுத்திட்டிருக்கும் கல்விமான்களில் பெயர்ப்பட்டியல் வருமாறு:-

செ. இராசரத்தினம் (பேராசிரியர் பொருளியல் துறை), ப. சந்திரசேகரம், (பேராசிரியர் கல்வியியற்துறை),வி. க. கணேசலிங்கம் (பேராசிரியர் விலங்கியல் துறை) ஆ. வேலுப்பிள்ளை (பேராசிரியர் தமிழ் துறை), நா. பாலகிருஷ்ணன் (கலைப் பீடாதிபதி) (2-ஆம் பக்கம் பார்க்க)

## விஜேயின் விஜயம் குறித்து சபையில் சர்ச்சை

கொழும்பு, அக். 25

விஜயகுமாரணதுங்காவின் யாழ் விஜயம் பற்றி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

பிரதமர்: விஜே யாழ் நகர் சென்ற துணிச்சலைப் பாராட்ட வேண்டும். அங்கு அவர் தீவிர வாதிகளுடன் பேசினார். சில சுதந்திரக் கட்சிக் காரர்கள் போல் அவரைத் தாக்கக் கூடாது.

மத்துகம எம். பி. அனில்முனசிங்க: விஜயகுமாரணதுங்க நாட்டை விற்கிறார்.

பிரதமர்: நீரும்நானும் இருக்கும்போது அவர் எப்படி நாட்டை விற்க முடியும்? தாம் மட்டும் தான் தேசப்பற்றுள்ளவர் என்று மத்துகம எம். பி. நினைக்கக் கூடாது. கலவான எம். பி. யின் கொள்கையைத் தான் விஜேயும் பின்பற்றுகிறார். விஜேயும் நாட்டிற்காகப் பாடுபடுகிறார்.

அமைச்சர் லலித் அத் (8 ஆம் பக்கம் பார்க்க)

## ரயிலைத் தவறவிட்ட அறுநூறு பயணிகள்

### வவுனியாவில் இரவைக் கழித்தனர்

வவுனியா, அக். 25

நேற்று முன்தினம் வியாழக்கிழமையன்று யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கு கொழும்பு ரயில் பிடிக்கச் சென்ற சுமார் 600 பயணிகள் ரயிலைத் தவறவிட்டனர்.

அன்று இரவு வவுனியாவில் தங்கி நேற்றுத் தான் ரயிலில் கொழும்பு சென்றனர்.

மாங்குளத்தில் இருந்து நடந்துசென்ற இராணுவத்துக்குப் பின்னாலேயே பயணிகள் சென்ற பஸ்கள் வரவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டதாம்.

அதனால் நண்பகல் அளவில் வவுனியா செல்ல வேண்டிய பஸ்கள் இரவு 7-30 மணிஅளவில்தான் அங்கு சென்றடைந்தன.

இவற்றில் 9 தனியார் பஸ்கள் 8 அரச பஸ்கள் பயணிகள் வியாழன் இரவை இந்து இளைஞர் மன்றக் கட்டடத்திலும் தேவாலயத்திலும் சிரமத்தின் மத்தியில் கழித் (8 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

25-10-1986
சனிக்கிழமை

சுபநேரம்:
3. 02 முதல் 4. 32 வரை
ராகுகாலம்:
9.02 முதல் 10.32 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

புதுமையும் எழிலும் பெருமையும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிகளின் கோட்டைக்குள் துணிவுடன் வந்துசென்ற விஜே

விஜேயின் யாழ் விஜயம் யாழ் குடா நாட்டுக்கு மட்டுமல்ல, ஸ்ரீலங்காவிலும் இவ்வாரத்தின் முக்கிய நிகழ்ச்சியாகிவிட்டது.
அது பற்றிய ஒரு கண்ணோட்டமே இக் கட்டுரை-

யாழ்குடா நாடு இன்று தமிழ் விடுதலைப் போராளிகளின் கோட்டை.

அந்தக் கோட்டைக்குள் பிரவேசிக்க யாழ். கோட்டை முகாமிற்கு கடந்த திங்கள் மாலை 'ஹெலி'யில் வந்திறங்கினார் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் விஜே குமாரணதுங்க.

யாழ்ப்பாணம் செல்ல முடியுமா? சென்று உயிருடன் திரும்பி வர முடியுமா?

—இப்படிக் கொழும்பில்சிங்கள அரசியல் தலைவர்கள் ஆளுக்கு ஆள் மாறி மாறி சவால் விட்டுக் கொண்டிருந்த காலத்தில் துணிந்து வந்தவர் விஜே.

போராளிகளை அழித்து விட்டு வா! இப்படி 6 மாத காலக் கெடுவுடன் தர்மிஷ்டரால் வட பகுதிக்கு 1979 இல் அனுப்பப்பட்டது இராணுவம்.

அதன் பின்னர் நடந்த அக்கிரமங்களை நாடே அறியும்.

அழிக்கப்படவேண்டியவர்கள் என்று தர்மிஷ்டரால் கணக்குப் போடப்பட்டவர்கள், கடந்த



செவ்வாய்க்கிழமை (21-10-1986) காலை யாழ் கோட்டை நுழைவாயிலில் விஜே குழுவினரை அழைத்துக் கொண்டு போக திரண்டு நின்றார்கள். 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'என்பது அனுபவ மொழி அல்லவா!

ஆம். தமிழீழ விடுதலைப் புலிகள் விஜே குழுவினரை இராணுவத்திடமிருந்து பொறுப்பேற்று அழைத்துச் சென்ற காட்சியைத் தான் இங்கு குறிப்பிடுகின்றோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இடம் பெற்று வரும் வரலாற்றுச் சம்பவங்களில் இதுவும் ஒன்று.

புலிகள் சூழ்ந்து வர விஜேயின் யாழ் விஜயம் தொடங்கியது.

ஆயுதபாணிகளான புலிகளுடன் யாழ் நகர் எங்கும் சென்று பார்த்தார் விஜே.

புலிகளின் பயிற்சி முகாமுக்கும் விஜே சென்றார்.

### நல்லூர் ராஜதானியில்

கடைசித் தமிழ் மன்னன் சங்கிலியனின் தலைநகரம் நல்லூர். அந்தப் பகுதியில் புலிகளின் விமான எதிர்ப்புப் பீரங்கி பொருத்தப்பட்ட வாகனத்தில் ஏறி நின்று விஜே பேசினார்.

சிப்பாய்களைச் சிறை மீட்கும் பணியில் ஈடுபட்டு வந்த விஜே, யாழ் குடா நாடு பற்றி தப்புக் கணக்கு போடவில்லை.

'யாழ்குடா நாடு தனி நாடாகத்தான் இயங்குகின்றது. அரசு நிர்வாகமே ஸ்தாம்பித்து விட்டது. போராளிகளின் கட்டுப்பாட்டுல் தான் யாழ் குடா நாடு உள்ளது'— இப்படி செய்தியாளர் மத்தியில் மனந்திறந்து சொன்னார்.

தற்போதைய இனப்பிரச்சினைச் சிக்கலில் இருந்து தப்பிக் கொள்வதற்கு ஜனாதிபதிக்கு உதவுவதுதான் உங்கள் நோக்கம் என்று கூறப்படுகிறதே!

இப்படி கேட்ட போது விஜே கொஞ்சம் உஷாரானார்.

ஜனாதிபதிக்கு உதவுவது எமது நோக்கம் அல்ல. இன்றைய அரசாங்கம் தான் எமது எதிரி— என்று பதிலளித்தார் விஜே.

மாகாண சபை யோசனைகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவுமா? போராளிகளை இந்த யோசனைகள் திருப்திப்படுத்துமா?— இப்படி கேட்டபோது;

எல்லா விஷயங்களையும் நேரடியாக போராளிகளுடன் பேசித்தான் தீர்க்க வேண்டும்! என்று திருப்பித் திருப்பிச் சொன்னார் விஜே.

வடக்கு- கிழக்கு இணைப்புடனான தீர்வுக்கு சிங்கள மக்களை இணங்க வைக்க முடியாது என்று நீங்கள் கூறியிருந்தீர்களே?

தமிழ் மொழி பிராந்தியம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை பற்றி உங்கள் நிலை என்ன?

இக் கேள்விகளுக்கு எல்லாம் விஜேயின் பதில்கள் 'கழுவுகின்ற மீனில் நழுவுகின்ற மீன்' மாதிரியாக இருந்தன.

### அரசின் நிலை

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுகின்ற விஷயத்தில் அரசாங்கம் உண்மையான விருப்பம் கொண்டுள்ளதா?

'அரசாங்கக் கட்சியினுள் பதவிப் போட்டி தான் இப்போது நடைபெறுகிறது. ஜனாதிபதி பதவி காலியாகி விட்டால் ஆளை ஆள் பிய்த்துக் கொண்டு போய் விடும் நிலைதான் அரசாங்கக் கட்சியினுள் நிலவுகின்றது.

மாகாண சபைத்திட்டம் அமுலுக்கு வரும் முன்னர், பதவிப் போட்டியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய நிலையில் அரசாங்கக் கட்சியினர் உள்ளனர்'' —இப்படி விளக்கினார் விஜே.

யாழ் நிலை பற்றி மனந்திறந்து சொன்ன விஜேயினால், இனப்பிரச்சினைத் தீர்வில் தனது நிலை, தனது கட்சி நிலை பற்றி துணிந்து சொல்ல முடியவில்லை.

இதை அவரின் செய்தியாளர் மாநாடு தெட்டத் தெளிவாக்கியது.

யாழ்ப்பாணத்துக்குத் துணிந்து வந்தவர், தமிழர் பிரச்சினைத் தீர்வு பற்றிய தனது நிலைப்பாட்டைத் துணிந்து கூறத் தவறியது ஏனோ?

சிப்பாய்களை நிபந்தனை இன்றி விடுவித்தால் அவர்களை நான் பொறுப்பேற்றுக்கொண்டு போவேன். அதன் மூலம் எனது கட்சி, தென் இலங்கையில் செல்வாக்கு பெறும். அச் செல்வாக்கைப் பயன்படுதி உங்களுக்கு உதவுவேன்!

இப்படித்தான் விஜே, புலிகள் பிரமுகர்களிடம் தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாட்டிலும் அதைத் தான் வெளியிட்டார்.

விஜே சினிமாவில் தான் 'ஹீரோ', அரசிலிலும் ஹீரோ ஆவாரா?

## அவரது விஜயம் குடாநாட்டில் ஏற்படுத்திய பெரும் பரபரப்பு

## இதய நாடி

## தேவை

கிளிநொச்சியிலுள்ள கருணா நிலையத்துக்கு மிஷனரி சேவையில் நாட்டமுள்ள கிறீஸ்தவப் பெண் அதிபர் தேவை. குடும்பப் பொறுப்பற்றவராகவும் அனாதை இல்லம், மனையியல், தையல் நிலையங்களைப் பொறுப்புடன் நிர்வகிக்கும் திறமையும் ஆங்கிலத்தில் கடிதத் தொடர்பு செய்யும் ஆற்றலுடையவராகவும் இருத்தல் அவசியம், இளைப்பாறிய ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். நவம்பர் 10-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். ஆர்ச்டீக்கன், சென்யேம்ஸ் தேவாலயம், நல்லூர், யாழ்ப்பாணம்.


## யாழ் - கொழும்பு

பஸ் சேவை 26—10—86

உங்கள் ஆசனங்களுக்கு:

நிப்பொன் - 23364
2G, ஸ்ரான்லி வீதி,

கிறீவ் ஸ்ரோர்ஸ்
தெல்லிப்பளை.



## பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி
● குவைத்
● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்,

குவைத்தில் கீழ்க்காணும் வெற்றிடங்கள் உண்டு.

Cleaners, House Boys, Gardeners, House Drivers, House Cook, Sales Boys & Girls.

செல்ல விரும்புவோர் உடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

சவூதி Labourersஆக செல்ல விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

டென்மார்க், ஜேர்மனி ஆகியவற்றிற்கு அடுத்த மாதம் 10ஆம் திகதி செல்லவுள்ளோம்.

குவைத்திற்கு செல்ல விரும்புவோர் 1ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

பஸ் இல: 764
பலாலி வீதி,
கோண்டாவில்
கிழக்கு.

தொடர்பு:
N. பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில்
கிழக்கு,

* உங்கள் நன்மை கருதி தீவுப் பகுதியில் ஓமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது.
* குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஓமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


# ஐக்கிய நாடுகள் சபையும் அதன் பல்வேறு உறுப்பு*ளும்

இரண்டு உலக யுத்தங்களும் உலகில் விளைவித்த கொடிய விளைவுகள் மனித வரலாற்றிலே கறைபடிந்த நிகழ்வுகளாகும். மீண்டும் ஒரு உலக யுத்தம் நடைபெறின் அதில் வெறன்வர் கரியாவார் தோற்றவர் சாம்பராவார். இவ்வாறான ஒரு நிகழ்வு நடைபெறக் கூடாது எனும் நோக்கோடு நிறுவப்பட்டதே ஐக்கியநாடுகள் ஸ்தாபனம்.

இது உலகத் தலைவர்களாகிய ரூஸ்வெல்ட், சேர்ச்சில், ஸ்ராலின் சியாங்கை ஷெக்ஆகியோரது அயராத உழைப்பினால் 1945ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ஆம் திகதி உருவானது.

ஐக்கிய நாடுகள் ஸ்தானம் எனும் பெயரை வழங்கியவர் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்.

அன்று 52நாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட ஐ. நா. ஸ்தாபனத்தில் இன்று 159 நாடுகள் அங்கம் வகிக்கின்றன, சகல சுதந்திர நாடுகளுக்கும் அங்கத்துவம் வகிக்கும் உரிமை உண்டு.

நாடுகளுக்கிடையே உள்ள நட்புறவை வளர்த்து சர்வதேச சமாதானத்தை ஓங்கச் செய்யவும்—

சர்வதேச சமூகப் பொருளாதார மனிதப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும்—

அடிப்படை மனித சுதந்திரங்களை பேணிக் காக்கவும்—

பெரும் பங்காற்றும் ஸ்தாபனம் இதுவாகும்.

### பொதுச்சபை

எல்லா நாட்டுப் பிரதிநிதிகளையும் கொண்டது இப்பொதுச் சபை. ஆண்டுக்கொரு முறைகூட்டப்படுகிறது.

அங்கத்தவரின் விருப்பத்திற்கிணங்க 24மணித்தியாலத்திற்குள் விசேட கூட்டம் கூடலாம்.

சாதாரண தீர்மானங்களுக்கு பெரும்பான்மை வாக்குகளும், விசேட தீர்மானங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் வேண்டும்.

எந்த ஒரு நாட்டினதும் கோரிக்கையை நிராகரிக்கும் உரிமை நிரந்தர உறுப்பு நாடுகளான (வீட்டோ) அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

### பாதுகாப்புச் சபை

நிரந்தர உறுப்பு நாடுகளுடன் வேறு 10 நாடுகள் சேர்ந்து 15 உறுப்பினர்களைக் கொண்ட விஷேட அதிகாரம் உடைய சபை இது.

நடைமுறை சம்பந்தமான முடிவுகள் எடுக்க வீட்டோ நாடு ஒன்று உட்பட 9நாடுகளின்வாக்குகள்தேவை.

பெரும்பாலும் வல்லரசுகள் தங்கள் வீட்டோ உரிமையால் கோரிக்கைகளை நிராகரிக்கின்றன.

### பொருளாதார சமூக நலச்சபை

பொதுச்சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட 54 உறுப்பினர்களைக் கொண்டது சமூக நலச் சபையாகும்.

அபிவிருத்திப் பிரச்சனைகள், உலக வர்த்தகம், கைத்தொழில் மயமாக்கல் இயற்கை வளங்கள், மனித உரிமைகள், மகளிர் அந்தஸ்து, விஞ்ஞானம், தொழில் நுட்பம் மற்றும் பல சமூக பிரச்சனைகளையிட்டு சிபார்சு செய்யவும் நடவடிக்கைகளை தொடக்கி வைக்கவும் இச் சபைக்கு அதிகாரம் உண்டு.

### சர்வதேச நீதிமன்றம்

பொதுச்சபையாலும், பாதுகாப்புச் சபையாலும் தெரிவுசெய்யப்படும் 15 நீதிபதிகளைக் கொண்டது. இது.

ஹேக் நகரில் அமைந்துள்ள இந்த நீதிமன்றத்தை எந்த ஒரு நாடும் தமது பிணக்குகளை தீர்த்துக் கொள்ள நாடலாம்.

### பொதுச் செயலகம்

ஏனைய ஸ்தாபனங்களின் பணிகள், கொள்கைகள், திட்டங்களை ஐ. நா. ஸ்தாபனம் நிருவகிப்பதற்கான சபை, சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் பயமுறுத்தும் விடயங்களை பாதுகாப்பு சபைக்கு கொண்டுவரும் அதிகாரம் இச்சபைக்கு உண்டு.

### வெற்றிகள்

உலக சமாதானத்திற்காகவும், ஆயுதக் குறைப்பிற்காகவும் சபை ஆற்றிய பணிகள் பல. அவற்றிசி சில:-

- ஈரானிலிருந்து சோவியத் படைகளை வெளியேற்றியது.
- இந்தனேஷியாவுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தது.
- 1956 இல் சுயஸ் கால்வாயை மீண்டும் திறக்கச் செய்தது.
- 1967 இல் இஸ்ரவேல் அரபுப் போரைத் தடுத்தது.
- 1971 இல் இந்திய பாகிஸ்தான் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்தது.
- 1973 இல் மத்திய கிழக்கு யுத்தத்தை நிறுத்தியது.
- தென் கொரியாவுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தது.
- 1978 இல் இஸ்ரவேலியப் படைகளை லெபனானிலிருந்துவாபஸ் பெற வைத்தது.

### தோல்விகள்

- சீனா, திபெத்தை ஆக்கிரமித்தபோது அதனை தடுக்க முடியவில்லை.
- ஆப்கானிஸ்தான் மீது சோவித் ஆக்கிரமித்தபோதும் தடுக்க முடியவில்லை.
- இஸ்ரவேல் பலஸ்தீன பிரச்சனை இன்னும் தீர்க்கப்படவில்லை.
- ஈரான் - ஈராக் போரை தடுக்க முடியவில்லை.
- ஈரானின் அமெரிக்க பணயக் கைதிகளை விடுவிக்க எடுத்த முயற்சிகள் தோல்வியை கண்டன.

(ஆதாரம்: திரு. கே. எஸ். முத்து லிங்கம் எழுதிய சமூகக்கல்வி வினாவிடைகள்.)

# நாவலர் சிலையை மீண்டும்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி

சு சுசீந்திரராசா (பேராசிரியர் மொழி, பண்பாட்டுத்துறை) சி முருகவேள் (நூலகர்) த இராமதாஸ் (பேராசிரியர், சிறுவர் வைத்தியத்துறை), ந சரவணபவானந்தன் (பேராசிரியர் சட்ட வைத்தியத்துறை) க தெய்வேந்திரராசா (பேராசிரியர் தாவரவியற் துறை) ச வை. பரமேஸ்வரன் (பேராசிரியர், உடற்றொழிலியல்), சி மகேஸ்வரன் (பேராசிரியர், இரசாயனத் துறை) இ குமாரவடிவேல். (பேராசிரியர், பௌதிகத்துறை) செ. பாலச்சந்திரன் (தலைவர், புவியியல்துறை),எஸ்.பவானி (தலைவர், சித்தவைத்திய துறை)

வி. சிவசாமி (தலைவர், சமஸ்கிருதத்துறை), ந சிவராஜா (தலைவர், சமூதாய சுகாதாரத்துறை) து. விநாயகமூர்த்தி (உயிரியல் இரசாயனத்துறை) த சரவணபவானந்தன் (சிரேஷ்ட விரிவுரையாளர்) ஞா இராமதாஸ் (விரிவுரையாளர்)

பொ. மகினன் (தலைவர், கணிதத்துறை), ம செவ்சூரிய (பேராசிரியர், மகப்பேற்று வைத்தியமும், பெண்ணோயியலும்), சி. சிற்றம்பலம் (தலைவர், வரலாற்றுத் துறை) வி. நித்தியானந்தன் (தலைவர், பொருளியற்துறை),ஞா.பவானி (விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை)

வ ஆறுமுகம் (சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வி), கொ நித்தியானந்தன் (வைத்திய அதிகாரி), சி மௌனகுரு (நுண்கலைத்துறை), பா [illegible] (உதவி விரிவுரையாளர்) மா உமாசுதன் (உதவி விரிவுரையாளர்)

சு சுகுமார் (உதவி விரிவுரையாளர்), இ. றஜினி (உதவி விரிவுரையாளர்), தில்லருஜ் லூயிஸ் (உதவி விரிவுரையாளர்), ச. அநுசுயாதேவி (உதவி விரிவுரையாளர்), சி. திகழ்மலர் (உதவி விரிவுரையாளர்) கு கிறிஸ்தோபர் (உதவி விரிவுரையாளர்) மு. நடராஜா (உதவி விரிவுரையாளர்), கா மகேசன் (உதவி விரிவுரையாளர்). க ஸ்ரீதரன் (உதவி விரிவுரையாளர்), இ வி. சசந்தரேசன் (விரிவுரையாளர் தாவரவியல் துறை) கா. சித்திரா வடிவேலு (விரிவுரையாளர் விலங்கியல்துறை)

கோ. சுந்தரமா (சிரேஷ்ட விரிவுரையாளர் [illegible]) [illegible] ராஜா (விரிவுரையாளர், [illegible]) [illegible] சாமி (விரிவுரையாளர்,) பௌதீகவியல்) க. சின்னத்தம்பி (சிரேஷ்ட விரிவுரையாளர்), திருமதி க. இராமநாதன் (விரிவுரையாளர், இந்து நாகரீகத்துறை)

மா வேதநாதன் (உதவி விரிவுரையாளர், இந்து நாகரீகத்துறை), சொ கிருஷ்ணராஜா (விரிவுரையாளர், மெய்யியல்) செ. கிருஷ்ணராசா (வரலாறு) நா செல்வநாயகம் (உதவி விரிவுரையாளர், இந்து நாகரீகத்துறை), ஒ. அம்பிகாவேலி (உதவி விரிவுரையாளர் பொருளியல் துறை)

என். சண்முகலிங்கன் (உதவி விரிவுரையாளர், சமூகவியல்) கா குகபாலன் (விரிவுரையாளர், புவியுயல் துறை) மௌ சித்திரலேகா. (விரிவுரையாளர், தமிழ்த்துறை) இந்திரா சிற்றம்பலம் (உதவி விரிவுரையாளர்,

(8-ம் பக்கம் பார்க்க)

# அரசாங்க அலுவலகங்களில்.... "சிகதி"

## மின்சாரக் கட்டண நிலுவைகள்

அதிகமான அரச பணியாளர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு எதுவித விசாரணையுமின்றி இருப்பதாக அரச தொழிற்சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். இவர்களுக்கு மாதங்கள் பலவாகியும் குற்றச்சாட்டுக்கள் பற்றி அறிவிக்கப்படவில்லை. இதுபற்றி தற்பொழுது நிர்வாக சீர்திருத்தங்கள் செய்யும் சபைக்கு தொழிற்சங்கங்கள் கூட்டாக முறைப்பாடு செய்துள்ளன. மேலும் தங்கள் ஒழுக்கம் சம்பந்தமான குறைபாடுகளை விசாரணை செய்ய ஓர் மேல் முறையீட்டுச் சபையையும் நியமிக்கும்படி கேட்டுள்ளனர் அரசாங்கத்திற்கு இவற்றினை கவனிக்க எங்கே நேரமிருக்கப் போகின்றது? ஒரு பிரச்சினையை பின்போட வேண்டுமென்றால் கமிஷன், சபை, ஆராய்வுக் குழு பின்னர் அதனை பரிசிலனை செய்ய வேறு ஒரு அமைப்பு – இப்படி எல்லாம் காலம் இழுத்தடிக்கப்படுகிறதே!

* * *

அரசாங்கப் பணிமனைகள் மது அருந்தும் நிலையங்களாக மாறினால் நிர்வாகம் எப்படி இருக்கும்? பணியாளர்கள் கடமை ஒழுங்கு பாதிக்கப்படும்; பொதுமக்களும் பாதிக்கப்படுவார்கள்.மாவட்ட உப - சபை அலுவலகமொன்றில் வரி இறுப்பாளர்கள் தமது அலுவல்களுக்காகச் செல்லும் சமயங்களில் பணியாளர்கள் இல்லாது கடமையின் நிமித்தம் வேறு பணிமனைக்கு சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுவதாகவும், மதிய உணவு நேரங்களில் மேசைகளில் போத்தல்கள் அடுக்கப்பட்டிருப்பதாகவும்இதன் பின்னர் அவர்கள் வேலை செய்யாது நித்திரை செய்வதாகவும் மாவட்ட சபை உறுப்பினர் ஒருவர் கூட்டத்தில் குற்றம் சாட்டி உள்ளார். குற்றம் சாட்டியவர் ஓர் பெண் உறுப்பினர் இக் கூட்டத்தில் யாழ் மாவட்ட மந்திரி, சமூக சேவை உதவி மந்திரி ஆகியோர் சமூகம் கொடுத்திருந்தனர். இவையெல்லாம் தருமம் வளர்க்கின்றோம் எனப் பிதற்றும் ஆட்சிக்கு ஓர் நல்ல எடுத்துக்காட்டு!

* * *

திட்டமிடல் பணிமனை நடாத்திவரும் போஷாக்கு கருத்தரங்கு மிகவும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். இதனால் பொதுமக்கள் உணவைபபற்றி சரியான முறையில் அறிந்து கொள்வதற்கும் பல தெரியாத விபரங்களை விளங்கிக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இக் கருத்தரங்குகள் பரவலாக எல்லாக் கிராமங்களில் நடாத்தப்படுவதுடன் பொதுமக்களும் இது போன்ற கருத்தரங்குகளுக்கு சென்று அமைப்பாளர்களுக்கு வேண்டிய ஊக்கத்தை நல்க வேண்டும்.

* * *

கொழும்பு திறைச்சேரியில் இருந்து மலேசியன் ஓய்வூதியம் பெறுபவர்கள் சிலருக்கு பலமாதங்களாக ஓய்வூதியம் கிடைக்கவில்லை எனத் தெரிகிறது. இதற்கான காரணங்கள் இதுவரை ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. இதனை உரிய திணைக்களம் கவனிக்க வேண்டும். செய்வார்களா?

* * *

மின்சார நிலுவைகள் பற்றி அரசாங்க அதிபர் விடுத்த அறிவித்தல் சகல பாவனை யாளர்களாலும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். நிலுவைகள் வளர்வதால் பல நடைமுடை, நிர்வாக சிக்கல்கள் தோன்றும் பாவனையாளர்கள் தங்களுக்கு வேண்டிய, மேலும் பல சேவைகளைப் பெறுவதற்கும் வீதிகளைத் திருத்துவதற்கும் நிலுவைகளைச் செலுத்துவதினால் வாய்ப்புண்டு. மாவட்ட உப அலுவலகங்களும் பாவனையானர்களுக்கு உரிய காலங்களில் நிலுவைகள் குறித்து அறிவிக்க வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களை மாவட்ட சபை பொறுப்பேற்ற பின்னர் வரியிறுப்பாளர்களின் தேவைகள் முன்னர் போன்று கவனிக்கப் படுவதில்லை என்ற எண்ணத்தையும் உப அலுவலகங்களுக்குப் பொறுப்பான அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரிகள் நீக்கவேண்டும்.

* * *

கூட்டுறவு இயக்கம் ஆரம்பமாகிய 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கூட்டுறவுத் திணைக்களத்திற்கும் இதில் முக்கிய பங்குண்டு. கூட்டுறவில் யாழ்ப்பாணம் முக்கிய இடத்தை வகித்ததை எவரும் ஏற்றுக்கொள்வர். இதனோடு சம்பந்தப்பட்ட அனைவரும் கூட்டுறவுக் கோட்பாடுகளையும் நோக்கங்களையும் நெறிப்படுத்துவதன் மூலமே இவ்வியக்கம் மேலும் திறமையாக செயற்பட இடமுண்டு.


## பட்டயக் கணக்காளர் பரீட்சை-1987

மேற்படி பரீட்சைக்குப் பதிவு செய்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தகைமை: க.பொ.த.(உயர்தரம், 4 பாடங்களில் 2 பாடத்தில் திறமைச் சித்தி.

விரிவுரைகள்: 2-11-1986இல் ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு: உதவிப் பதிவாளர்,
பட்டப் படிப்புகள் கல்லூரி.
148/, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



## தளபாட மலிவு விற்பனை

★ தீபாவளி மலிவு விற்பனை ★

புதிய, நவீனமான உருக்குத் தளபாடங்கள் பல டிசைன்களில் மேசைகள், கதிரைகள், T. V. Stands, Book Rack, கட்டில் மற்றும் பல கவர்ச்சிகரமான தளபாடங்கள்:

விலை குறைப்பு தீபாவளி வரை மட்டுமே

கவிதாஸ் - டைனமிக்கா
காட்சியறை

இல. 22, நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.
Tele: 24149



வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ச் சேதத்தின் மத்தியிலும் நல்லூர்ச்சேனை முன்னேற்றம்

**பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டு மோதிய நல்லூர்அரசு (பகுதி எட்டு-ஆ)**

ம. க. அ. அந்தனிசில்

தளபதி: பொதிகளாக இறக்குகிறார்களே மன்னா...
(அத்திசை திரும்பிப் பார்த்த மன்னன் ஆத்திரத்துடன் பற்களை நறும்பிக்கொள்கிறான்)

மன்னன்: ஓ... அதுதான் பறங்கியர் நமக்குத் தருவதற்காகக் கொண்டுவந்திருக்கும் வெகுமதி...

தளபதி: அவை வெடிமருந்துகள் மன்னா...

மன்னன்: அதைத்தான் நானும் சொல்கிறேன் வெடியும் மருந்தும் நம்மிடம் இல்லையென அறிந்தும் கொண்டுவந்து குவிக்கிறார்கள் கோழைகள்! அவை மட்டும் அவர்களிடம் இல்லாதிருந்தால் யுத்தம் நாட்கணக்கில் இழுபடாது வாள் முனையில் சில நாழிகையில் முடிந்திருக்கும்... அவர்களுக்குச் சமாதி எழும்பியிருக்கும் நாட்டில் அமைதி நிலவியிருக்கும்...

தளபதி: நாடுபிடிப்பதில் ருசிகண்ட பூனைக் கண்ணர்!

மன்னன்: சூடுகண்ட பூனை அடுப்படியை நாடாது அந்த வெடியும் மருந்தும் நம்மிடம் இருந்திருந்தால்...?

தளபதி: அவர்கள் இந்நேரம் தவிடு பொடி!

மன்னன்: அதிலும் மேலேயே சற்று முன்வரை நம்மிடம் அவர்கள் சிக்கித் தவிக்கவில்லையா?

தளபதி: வெற்றி கிட்டிவந்து எட்டப் போய்விட்டது மன்னா!

மன்னன்: அதிலென்ன? இனியும் நாம் எட்டிப் போய் வெற்றியை இட்டுக் கொண்டுவர வேண்டியதுதான்! எம் முன்னோர் காத்த வெற்றிக்கொடி பார் புகழப் பறந்துகொண்டிருக்கவேண்டும். எம் பரம்பரைக்கு நாம் விட்டுச் செல்லும் வெற்றிச் சொத்து அதுதான்.. அதுவரை யாழ்ப்பாண இராச்சியம் கண் உறங்காது... உறங்கவே முடியாது...!

தளபதி: எம் மண் காக்க கண் துஞ்சோம் மன்னா...!

மன்னன்: அன்று தாழ்பணிந்து வந்தவர்

## பருந்து பண்ணைத்துறையில்! நாரை நாவாந்துறையில்! கொக்கு கொழும்புத்துறையில்!

கள் இன்று தோள் நிமிர்த்தி வருகிறார்கள்!

தளபதி: செருக்குப் பிடித்தவர்கள் மன்னா!

மன்னன்: செருப்பு விற்க வந்தவர்கள் செருக்களத்திற்கே வந்துவிட்டார்கள்...

தளபதி: நூதனப் பொருள்களென்று...

மன்னன்: செருப்பும் அவர்கள் கொண்டுவந்த நூதனப் பொருள்களில் ஒன்றுதானே?

தளபதி: நூதனம் காட்டி எம் ஆதனமான தாய்த்திரு நாட்டைத் தட்டிப்பறிக்க வந்த ஓநாய்கள்...

மன்னன்: ஆம் தாங்கள் நலன்கள் பெருக எங்கள் வளங்களைப்பருக வந்த இரத்தப்புடையன்கள்.

தளபதி: காட்டுக்குள் ஒளிந்திருந்து கோட்டை கட்டிய பச்சைப் பாம்புகள்...

மன்னன்: அவர்கள் கொத்தளம் அமைத்தது எங்கள் முத்துவளங்களைக் கொத்திச்செல்ல. .

தளபதி: மாற்றான் வீட்டில் நுழையும் ஈனப் பிறவிகளாய் வந்தார்கள்

மன்னன்: ஈனப்பிறவிகளை துரத்தியடிக்கும் மானபிறவிகள்நாமென்பதையும் கண்டார்கள்!

தளபதி: இதுவரை நல்லபாடம் படித்துக் கொண்டார்கள் மன்னா!

மன்னன்: ஆமாம்... இன்று புதிய பறங்கிச் சேனை வந்திருக்காவிட்டால் இந்நேரம் எம் வெற்றிமுரசு ஒலித்திருக்குமல்லவா?

தளபதி: நுட்பமான திட்டங்கள் போட்டுவிட்டுத்தான் வந்திருக்கிறார்கள் மன்னா!

மன்னன்: வெட்கம் இல்லாதவர்களுக்கு நுட்பம் வேறு நம்பிக்கைத்துரோகிகள். அவர்களின் திட்டங்களை உடைத்தெறியும் வல்லவர்கள் நாம்... சொந்த வீடு மாதிரி நுழைந்து கொண்டேயிருக்கிறார்கள்...எதிரிகளை இனிமேலும் நுழையவிடக் கூடாது. .

தளபதி: பாதி வழியிலேயே அவர்களைச் சரிக்கட்டிவிடவேண்டும் மன்னா...

மன்னன்: ஆமாம்... வேறுவழியில்லை .. நம் ஒற்றர்கள் எங்கே சுற்றுகிறார்கள். .

தளபதி: மந்திரியார் அவர்களைக் கீழ்த்திசைக்கு அனுப்பியதாக அறிந்தேன்!

மன்னன்: அண்ணனுக்கு ஒன்றும் தெரியாது...வேறு எதிரிகள் எல்லை தாண்டுவார்களானால் அங்கே நம் எல்லைப் படை உண்டல்லவா? அதையும் மீறி எதிரிகள் புகுந்தால் வௌவால் பறந்து வந்து விடுமல்லவா? கழுகு எங்கே?

தளபதி: கோட்டையில் நிற்கலாம். இதோ வரவழைக்கிறேன் மன்னா .

அவ்விடமிருந்து நகர்ந்த தளபதி ஏவலன் ஒருவனை அழைத்து நல்லூர்க் கோட்டைக்குச் சென்று ஒற்றர் படைத் தலைவனை மன்னன் அழைப்பதான செய்தியைத் தெரிவிக்குமாறு பணித்துவிட்டு மீண்டும் மன்னனின் அருகே வந்த வேளை பறங்கிப் படை வெடி தீர்க்கத் தொடங்கி விடுகிறது.

ஏலவே வில்லும் அம்பும், கவண்கல்லும், ஈட்டிகளும் ஏந்திநின்ற நல்லூர்ச்சேனையை தற்காப்பு உத்திகளைக் கையாண்டு பதுங்கி நிற்குமாறு பணிக்கிறான் தளபதி

பறங்கிப்படை சரமாரியாக வெடிகளைத் தீர்க்கிறது மாறி மாறி அணி அணியாக வெடிகள் தீர்க்கப்படுகின்றன. நல்லூர்ச்சேனை தூரத்தே நிலைகொண்டிருந்ததால் பறங்கிச்சேனையை முன்னேறுமாறு உத்தரவிடுகிறான் அன்றுபூர்த்தாட்

இவ்வேளை போர்க்கள துக்குள் நுழைந்த கழுகு மன்னனை அண்மித்ததும் குதிரையை விட்டிறங்கி 'மன்னாதி மன்னா வாழ்க! மன்னாதி மன்னா வாழ்க' என்று வாழ்த்தி நிற்கிறது.

மன்னன்: மார்த்தாண்டா .

கழுகு: வேந்தே .

மன்னன்: இனிமேலும் பறங்கிப் படைகள் நாட்டுக்குள் நுழையக்கூடாது . துறைகளைப் பறவைகள் கண்காணிக்கட்டும். பருந்து பண்ணைத்துறைக்கும், நாரை நாவாய் துறைக்கும் (நாவாந்துறை) கொக்கு கொழும்புத்துறைக்கும் பறக்கட்டும் .

கழுகு: தங்கள் சித்தம் மன்னா

(கழுகு குதிரையேறிப் பறக்கிறது. . மன்னன் குறிப்பிட்ட பறவைகளின் பெயர்கள் அரண்மனை ஒற்றர்களின் பெயர்களாகும்)

பறங்கிச் சேனை மெதுவாக தரித்து தரித்து வேட்டுகளைத்தீர்த்தவாறு முன்னேறிக் கொண்டிருக்கிறது பறங்கிச்சேனை முன்னேறத் தொடங்கியதைக் கண்ட வீர மாணிக்கதேவன் நல்லூர்ச் சேனையை முன்னேறுமாறு உத்தரவிடுகிறான். பெருமலை அசைவது போல் நல்லூர் சைனியம் முன்னேறுகிறது . சங்கிலி மன்னன் தன் போர்வாளை உருவி கையிலெடுத்துக் கொள்கிறான்

பறங்கியரின் துப்பாக்கிகள் வெடி தீர்க்கும் வேளை நல்லூர்ப் படையினர் தரையில் படுத்தும், பதுங்கியும், எழுந்தும் தவழ்ந்தும் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர் ஆயினும் கிட்ட நெருங்க நெருங்க நல்லூர்ச் சேனைக்கு உயிர்ச்சேதம் ஏற்படுகிறது. . . இன்னும் சற்று கிட்ட நெருங்கியதும் தளபதி வீரமாணிக்க தேவனின் உத்தரவின் மீது அம்புகள் பறக்கத் தொடங்குகின்றன... ஈட்டிகள் பாய்கின்றன... கவண்கற்கள் சீறிச் செல்கின்றன... இதனால் பறங்கியரின் துப்பாக்கி அணியினர் நிலை தளம்பி இடம் மாறுகின்றனர் . ஒதுங்கி ஒதுங்கி தூரத்தே சென்று நிலைகொள்கின்றனர் அச்சமயம் பறங்கியரின் வாளேந்திய பெரிய அணி நல்லூர்ச்சேனையுடன் பொருதுகிறது. . இருதரத்தாரும் முழுமூச்சுடன் போரிடுகின்றனர். உக்கிரப் போர் நிகழ்கிறது சங்கிலி மன்னன் வெண்புரவி மீது சுழன்றுடி தன் வாள் சுழற்றலிலே பறங்கியர் பலரை வெட்டிச் சாய்கிறான் ... வாட்போர் தொடருகிறது.

நீண்ட நேர வாட்போரில் களைத்துப்போன பறங்கியர் தந்திரமாக துப்பாக்கி அணியை நோக்கி பின்வாங்கிவிட ஆயத்தமாக நின்ற துப்பாக்கி அணி மீண்டும் வெடிகளை தீர்க்கத் தொடங்குகிறது. டுமீல் டுமீல்! டுமீல்!. .

முதுகிலே தொங்கும் அம்புக் கூடுகளில் அம்புகள் தீர்ந்துபோன நிலையில். . ஈட்டிகளையும் கவண் கற்களையும் விட்டெறிந்து கைகளிலே வாள்களை மட்டும் ஏந்தி நிற்கும் நிலையில் பறங்கியரின் துப்பாக்கி அணி மீண்டும் வெடிதீர்த்தவாறு முன்னேறி வருவதைக் கண்ட நல்லூர் சைன்யம் தற்பாதுகாப்பிற்காக தளபதியின் உத்தரவையடுத்து பதுங்கி ஒதுங்கி தூரத்தே சென்று நிலைகொள்கிறது. . குதிரை இழுத்து வந்த ஆயுதவண்டியிலிருந்து மீண்டும் வில் அம்புகளும், ஈட்டிகளும், கவண்கற்களும் பெறப்படுகின்றன!

இவ்வாறாக ஏழாம், எட்டாம் ஒன்பதாம் நாள் போர் முடிந்து பத்தாம் நாள் யுத்தம் தொடங்கி உக்கிரப் போர் நிகழ்ந்துகொண்டிருந்தவேளை. . .

(தொடரும்)

---

## ஞான சஞ்சீவி

### ஜபம்

ஜபம், இதய சுத்தியை உண்டாக்குகிறது, மனோதிட்பத்தை வளர்க்கிறது, ஆன்மீக வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

நாம் உண்டாக்கும் ஓசைகளும் ஒலிகளும் எமது மனதுகளில் உருவாகும் சிந்தனைகளும் எம்மைச் சுற்றியுள்ள ஆகாசம் என்னும் முதல் மூல தத்துவப் பொருளில் அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன. ஒலிகளுக்கும் சிந்தனைகளுக்கும் உருவங்கள் உண்டு.

எமது ஆத்மீக சிந்தனைகளிலிருந்தும், நாம் இறைவனை நினைந்துருகி உண்டாக்கும் ஓசைகளிலிருந்தும், விரிந்து பரவும் அதிர்வுகளும், அவைகளிலிருந்து பிறந்து மிதந்து செல்லும் கட்புலனாகாத வடிவங்களும், இறைவன் பால் பக்தி சிரத்தையுடன் செலுத்தப்படும் பொழுது காந்தம் போல் இறைவனின் சக்தி எம்மால் ஈர்க்கப் படுகின்றது

அண்டமெங்கும் வியாபித்திருக்கும் தெய்வசக்தியை, தெய்வஉணர்வை, ஈர்ப்பதற்கு சில ஒழுங்கு முறையான அதிர்வுகளை ஏற்படுத்தும் வழிமுறைகளை எமது ரிஷிகள் கண்டுபிடித்து எமக்கு விட்டுச் சென்றுள்ளார்கள் அவைகள் தான் மந்திரங்கள்.

ஒவ்வொரு மந்திரத்திற்கும் அதன் கர்த்தாவாக ஒரு ரிஷி இருப்பார் ஒரு தெய்வாம்சத்தையோ, தேவதையையோ ஈர்ப்பதற்கென்றே அது உருவாக்கப்பட்டிருக்கும். அதை உச்சரிப்பதற்கான ஒரு ஓசைலயம் அதற்குண்டு.

அ. குமரகுரு

'பீஜ' என்று சொல்லப்படும் விதையாக அமைந்த ஒரு அக்ஷரம் அல்லது சொல் இருக்கும். தொடர்ச்சியாக அம்மந்திரத்தை ஜபம் செய்து வருகையில் மறை உலகில் அதற்கே உரியதான ஒரு உருவத்தை பிறப்பிக்கும் சக்தி அதற்கு வந்து விடுகிறது ''சைதன்யம்'' என்று சொல்லப்படும் ஒரு தனியான உணர்வு. சிரத்தையுள்ள சாதகனுக்கு அதனால் வெளிப்படுத்தப்படுகிறது

இடைவிடாது நாளாந்தம் பக்தி சிரத்தையோடு ஜபம் செய்து வருபவர்களின் சூட்சும சரீரங்களில் நல் மாற்றங்கள் ஏற்பட்டு அவர்களுக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

---

## பண்ணமைந்த திருமுறைகள்

### பரவசமூட்டுகின்ற பக்திப் பனுவல்கள்

திருக்கோயில்களில் அபிஷேக அர்ச்சனை ஆராதனைகளின்போது, வேதமந்திரங்களின் பின் திருமுறைகள் ஓதும் வழக்கம் உண்டு திருமுறைப்பாடல்கள்18300 வரையில் உளவாதலால் அவற்றின் தொகுப்புகளுக்கமையப் பஞ்ச புராணங்கள் ஓதுவர். அவை யாவன தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரிய புராணம் இவற்றிலிருந்து ஒவ்வொரு பாடலாகப் பண்ணோடு ஓதுவர்.

தமிழரின் பண்ணோன்றிய பக்திப்பாடல்களில் தம்மனதைப் பறிகொடுத்த புத்தபிக்குகளில் ஒருவர், பழைய ஜெவர்த்தனபுரத்து ஆறும பராக்கிரமபாகு மன்னனின் அவைக்களப் புரோகிதராயிருந்த அதிவணக்கத்துக்குரிய தோட்டகமுவ ஸ்ரீராகுலதேரோ அவர்களாவர்.

அந்தப் பெரியார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய சிங்களத் தூதுப் பிரபந்தத்தில், தூது சென்ற மைனாவுக்கு வழிகாட்டும் போது திருக்கோயிலின் தலவிருட்சத்தில் இராப்போதில் தங்குமாறும், அதிகாலையில் விழித்தெழுந்து அனந்தனைப் பார்க்குமாறும், சங்கு சேமக்கலங்களின் ஒலியைக் கேட்குமாறும் மிருதங்க ஒலியைக் கேட்குமாறும் கற்பூரதீபவொளியைக் கண்ணிமைத்துப் பார்க்குமாறும், திராவிடவேத அவுதாரிகையின் போது தமிழரின் பக்திப் பனுவல்களான பண்ணமைந்த திருமுறைகளைக் கேட்குமாறும் பணிப்பர்.

தமிழரின் பக்திப் பாடல்கள் சிங்களப் பெரியவரைச் சிந்தை நிறையச் செய்ததானால், சைவப் பெரு மன்னனை தஞ்சை இராசராச சோழனை என்ன செய்திருக்கும்? அன்றொரு நாள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன், 985 ஆம் ஆண்டில் அரசபீடமேறி, முடிசூடிக்கொண்ட மன்னர் மன்னனின் முன்னிலையில் யாரோ சிவபக்தர் ஒருவர் தோடு, கூற்று, பித்தா எனத் தொடங்கும் தேவாரப் பாடல்கள் மூன்றைப் பாடினராக, கேட்ட மன்னன் சிந்தை மகிழ்ந்து. இன்னும் பல பாடல்களைக் கேட்க விரும்பி முயன்று கண்ட தொகுப்பே திருமுறைகளாம்.

திருமுறைகளை அரிதிற்பெற்று நம்பியாண்டார் நம்பிகள் மூலம் தொகுத்த மன்னன், அவற்றைத் திருக்கோயில்களில் விதிப்படி ஓதுவிக்கப் பண்தெரிந்த ஓதுவாமூர்த்திகளை நியமித்து, ஆடவல்லான் என்னும் முகத்தில் அளவையால் நெல்முகந்தளித்துக் கௌரவிக்க நிபந்தங்கள் அளித்தான்.

ஓதுவா மூர்த்திகளெனப் பெயர்பெற்ற பெரிய உத்தியோகத்தர்கள். பெருமதிப்புக்குரியவர்கள். அவர்கள் தீட்சைகள் பெற்றுயர்ந்து உய்திபெற்ற ஆசாரசீலர்கள். அவர்களின் திருநாமங்களை நாம் ஓதுவதாயின் ஞானசிவன் மனோத்தமசிவன், ஈசானசிவன். சத்தியசிவன், பூர்வசிவன், தர்மசிவன் இருதயசிவன், உருத்திரசிவன், யோகசிவன், வாமசிவன், சதாசிவன். ஓங்காரசிவன் அகோரசிவன் முதலாய தீட்சாநாமங்களைப் பெற்றவர்களாவர்.

முன்னர் மாணிக்கவாசக சுவாமிகள் காலத்திலேயே இன்னிசை வீணையர் யாழினர் ஓர்பால், இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால் என்று அவர் காடியருளும் வண்ணம் தமிழப்பாடல்கள் திருக்கோயில்களில் இடம் பெற்றதுண்டு. யாழ் தமிழன் கண்ட பக்கவாத்தியம். பண்ணின் திறமறிந்து பாடுவதற்குப் பக்கவாத்தியம் இன்றியமையாதது.

தமிழ்வேதம் என்னும் திருமுறையோதும் வழக்கம் தமிழ்நாட்டிலேயன்றி, ஈழம் முதலாகத் தூரகிழக்கு நாடுகளான ஜாவா, சுமாத்திரா, போர்ணியோ, தாய்லாந்து, மதுரா, பாலி முதலான நாடுகள், தீவுகளிலும் அன்று பெருவழக்கில் இருந்து வந்தது இன்னும் அரண்மனைகளில் மன்னர் முடிசூடிக்கொள்ளும் மங்களகரமான வைபவங்களிலும் திருப்பல்லாண்டு பாடி வாழ்த்தும் வழக்கம் நிலவி வந்தது

நன்றி;மில்க்வைற் செய்தி

---

## கடல் கடந்த கடிதம்

### மனப்பால் குடிக்கிறார்கள்!

தம்பி,

நெருக்கடி நிலையிலும் மக்களிற் சிலர் கும்பகர்ணன்களாக உள்ளார்கள் என எழுதியிருந்தாய்! கும்பகர்ணன்களாகத் தூங்கி வழிந்தாலும் பரவாயில்லை, தம்பி, சிலர் ஏதேதோ சுயநலக் கற்பனையிற் சுகம் காண்கிறார்கள் — மனப்பால் குடிக்கிறார்கள்!

''இழுத்தடித்தால் களைத்துவிடுவார்கள் — பழைய மாதிரியே குதிரை விடலாம்!'' என அங்கே மனப்பால் குடிக்கிறார்கள், வெருட்டில் — பேய்க்காட்டலில் — சுகம் கண்டவர்கள்!

அவர்களைப்பற்றிய கவலை நமக்கேன்? இங்கே—

''அவர்கள் போராடட்டும் — அப்புறம் நாமும் சேர்ந்து அனுபவிக்கலாம்!'' என்று மனப்பால் குடிக்கிறார்கள். சொகுசாகவே அனுபவித்துப் பழகியவர்கள்! ''உது சரிவராது — தொடர்ந்தும் அங்குள்ள தொடர்புகளைப் புதுப்பிக்கலாம் — காட்ட வேண்டியதைக் காட்டிப் பெறவேண்டியதைப் பெற்று விடலாம்!'' என மனப்பால் குடிக்கிறார்கள் தரகு வேலையால் தமது வாழ்வை வளமாக்கியவர்கள்!

''அதிகாரப் பரவலாக்கல் வந்துவிட்டால்— அனுபவமில்லாத சிறுசுகளால் ஏது முடியும்?— நம்மைத்தானே நம்பியிருப்பார்கள்!'' என மனப்பால் குடிக்கிறார்கள் நாற்காலிகளில் நன்றாக ஊன்றி விட்டவர்கள்! ''உழைப்பவர்கள் உழைக்கட்டும்! — இவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் உணவு முத்திரைகளைத் தொடர்ந்தும் பெறலாம்!'' என எப்படியோ அவற்றைப் பெற்ற சிலர் மனப்பால் குடிக்கிறார்கள்!

வேகமாகப் புயற்காற்று வீசும்போது, தம்பி, ஆலமரங்கள் சரிந்து விழ நாணல்கள் தப்பி விடும்! அரசியலிலும் சூறாவளி வீசுகிறது— மனப்பால் குடிப்பவர்கள் எங்கிருப்பார்களோ?

அன்புடன்
—சிவா—

---

அடக்குமுறைக்கு ஆளாகும் மக்களின்

# விடுதலைப் போராட்டங்களுக்கு விடிவெள்ளியாய் நின்ற இந்திரா

இந்தியாவின் இந்திரா சாப்தம் உலக சரித்திரத்தில் அழியா இடம் பெற்றுள்ளது.

அடக்குமுறைகளுக்காளாகிய மக்களின் விடுதலைப் போராட்டங்களின் விடிவெள்ளியாக விளங்கியவர் இந்திரா காந்தி.

அன்னை இந்திரா மறைந்து இரண்டாண்டுகள் அக்டோபர் 30 ஆம் திகதியுடன் பூர்த்தியாகின்றது

அதை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

தைரியமாக இரு. மற்றவை உன்னைத் தேடி வரும்

இப்படித் தந்தை மகளுக்குப் புத்திமதி கூறினார்.

1930 இல் சிறைவைக்கப்பட்ட சமயம் பண்டிதர் ஜவஹர்லால் நேரு, ஒரே மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதத்திலேயே இந்தப் புத்திமதியை வலியுறுத்தினர்.

15 வயதில் ஊட்டப்பட்ட இந்த வீரஉணர்வு மெய்ப்பாதுகாவலர்களால் சுடப்பட்டுக் கீழ் விழுந்து உயிரை விட்ட போதும், அவரை விட்டு நீங்கவில்லை.

பெண்மையின் சின்னமாக விளங்கிய இந்திரா, வீரத்தின் உறைவிடமாகவும் விளங்கினர்.

1930 இல் மகள் இந்திராவுக்கு எழுதிய அந்தக் கடிதத்தின் இன்னொரு பந்தியில் தந்தை



நேருஜி பின்வருமாறு கூறியிருந்தார்.

'வீராங்கனை ஜோன் ஒப் ஆர்க்கின் சரித்திரம் உன்னை ஆகர்ஷித்துவிட்டது.

'அந்த வீராங்கனை போல் சாதனைகள் புரிய வேண்டும் என்பது உனது இலட்சியம்.

'ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் நான் கூறும் சிறிய சோதனை ஒன்றைச் செய்.

'இரகசியமாக எதையும் செய்யாதே; எதையும் ஒளிக்காதே— இது தான் அச்சிறிய சோதனை.

'ஏதாவது ஒளிக்க வேண்டும் என்று நீ விரும்பினால் அதன் கருத்து நீ அஞ்சுகின்றாய் என்பதே. பயம் என்பதே [illegible]

தீபன்ராஜன்

---

## மங்களகரமான வைபவத்தைத் தொடர்ந்து மசிழ்ச்சிகரமான நிகழ்ச்சிகள்

### பண்டிதமணி வரலாறும் காலமும்

● க. சி. குலரத்தினம் ●

பண்டிதமணி அவர்கள் 1929ஆம் ஆண்டின் ஆவணி மாதத்தில் சைவாசிரிய கலாசாலையிற் பேராசிரியராய்ச் சேர்ந்த மங்களகரமான வைபவத்தைத் தொடர்ந்து மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சிகள் அங்கே நடைபெற்றுவந்தன.

பெரியார் மூவர்

சைவமும் தமிழும் தழைப் படர்ந்த கொழுகொம்புகள் எனப் பலரும் தலை தாழ்த்தி வணங்கிய பெரியவர்கள் மூவர். ஒருவர்பின் ஒருவராக அங்கே சேவை செய்வதற்கு வந்து வாய்த்தனர். அவர்களுள் குலத்தாலும் குணத்தாலும் குன்றென்ன நிலைபெயராக் கொள்கையாலும் செலச் சொன்ன வலங்கல்வி திருவுரு மெய் நீதி நெறியில் இருந்தனராலும் தலைசிறந்து தமிழ் [illegible]

புரிந்த தகைமையாலும் நிலைத்தோங்கு மயிலிட்டிச் சுவாமிநாதன் புகழ் மெய் நிலைக்கும் என்று பண்டிதர் நமசிவாயம் பாடியாங்கு 1929 கார்த்திகை மாதத்தில் வந்து பல்லைமயேற்றவர் சிதம்பரநாதன் சுவாமிநாதன் என்பவராவர்.

அவரையடுத்து 1930 ஆம் ஆண்டில் ஒருவர் பின் ஒருவராய் வந்த வித்தகர்கள் அளவெட்டி பொன்னம்பலம் கைலாசபதி அவர்களும் மட்டுவில் சிவத்திரு நடராசா ஐயர் கந்தசுவாமி ஐயர் அவர்களுமாவர்.

மயிலிட்டி சுவாமிநாதன்

அருமை பெருமை மகிமை நிறைந்த மயிலிட்டி சுவாமிநாதன் வரலாற்றுப் புகழ் படைத்த மாண்பினர். கீரிமலைக்கும் காயாத்துறையென்னும் காங்கேசன் துறைக்குமிடையில் வீரமாணிக்கதேவன்துறை என முன்னர் வழங்கிய பெருமை பெற்றது மயிலிட்டி. கனகதண்டிகைக் கனகராய முதலியார் முதலாக வைரவநாதன் நரசிங்கதேவன் இலங்கை நாயகமுதலியார், மண்ணாடு கொண்ட முதலியார் முதலாய பெரியவர்களின் வழிவந்த சிதம்பரநாதன் என்பார், அவ்வூர்ப்பணக்காரக் கதிரேசர் பெற்ற தெய்வானைப்பிள்ளை என்பாரை மணந்து பெற்ற குலக்கொழுந்தாய் வந்தவர் சுவாமிநாதன் அவர்கள்.

சுவாமிநாதன் அவர்கள் 10 6. 1891 ஆம் நாளில் தோன்றி, இளமையிலேயே படிப்பார்வங்கொண்டு வணக்கத்துக்குரிய ஹேஸ்டிங்ஸ் போதகர் முதலானோரிடம் கல்வி கற்றவர். அமெரிக்க மிசனரிமார் தெல்லிப்பழை, மல்லாகம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சபை

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 ந் திகதி அதிகார பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 24 ந் திகதி ஐ. நா. தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இம்மாதம் 24 ந் திகதி 41 வது ஆண்டு நிறைவு தினமாக அமைய இருக்கின்றது ஐ நா. சபையின் முக்கிய பங்கு. உலக மக்கள் அனைவருக்கும் சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக் கொடுத்தலாகும்.

ஐ நா. அபிவிருத்தித் திட்டம் தான் குறைந்த வருமானம் பெறும் நாடுகளுக்கு அளிக்கப்படும் பலசிடையேயான பரஸ்பரதொழில் நுட்ப முதலீட்டு முந்திய உதவிகளாயும் உலகத்திலேயே பெரிய வாய்க்காலாக அமைந்துள்ளது.

அது பயிர் விளைவிப்பு, மிருக வளர்ப்பு, மீன்பிடி, காட்டுப் பராமரிப்பு, சுரங்கத் தோண்டுதல், போக்குவரத்து. வீடமைப்பு, வர்த்தகம், சுற்றுலா, வைத்தியம், சூழல் சுத்திகரிப்பு, கல்வி, சமுதாய அபிவிருத்தி ஆகியவற்றை உள்ளக்கிய அநேகமாக சகல பொருளாதார, சமூகத் துறையிலும் இயங்கி வருகின்றது

ஐ நா அபிவிருத்தித் திட்ட உதவி அந்தந்த நாட்டு தேசிய, அல்லது பிராந்திய அபிவிருத்தி முயற்சிகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கும். இந்த உதவியை நடத்துவது ஐ நா. நிறுவனமும் அதனோடிணைந்த 16 முகவர் நிறுவனங்களுமாகும்.

இந்த நிறுவனம் சிறு தொகையான திட்டங்களை நேரடியாகவும் நிறைவேற்றுகின்றது அநேகமாக, ஐ. நா. நிறுவனத்தினதும் அதனோடு தொடர்புடைய முகவர் நிறுவனங்களினதும் ஒவ்வொரு உறுப்பினரும் தாமாக உவந்து வழங்கும் நிதியைக் கொண்டே இந்த ஐ நா. திட்டம் இயங்குகிறது.

உணவு அமைப்புக்குரிய தகவல்கள், கல்வி, தொழில் நுட்பப்பின்னணி என்பவற்றில் வேண்டிய நியமங்களை அடைந்திருக்கும். 21 வயதுக்கு மேற்பட்ட இருபாலாருக்கும் இடமளித்து தேசிய அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் அவைத்துலக ஒத்துழைப்பு வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதிலும் தமது திறமைகளையும் தேர்ச்சிகளையும் பயன்படுத்துவதில் ஆக்கபூர்வமான சந்தர்ப்பம் அளிப்பது

அபிவிருத்தித் திட்டங்களுக்கு மேலதிக ஆட்பலம் அளித்தல்; அனைத்துலக பயிலுனர் சேவை அதிகரித்து அதன் மூலம் பல் கலாசார அனுபவம் பெற்ற கண்ணியத் தொழிலுனர் கொண்ட அனைத்துலகக் கோவை ஒன்றை உருவாக்கல். அபிவிருத்தி வேலைகளுக்கு பொதுமக்கள் அனுபவத்தை அதிகரித்தல், அபிவிருத்தியில் இளைஞர்கள் மேலும் பரந்த அளவில் பங்குபற்றச் செய்தல் என்பன இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.

பொதுச்சபையின் தன்னுரிமையான உறுப்பு ஒன்றாக 1973 இல் ஐ நா. பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது ஐ நா. நிறுவனமும் ஐ நா. கல்வி, விஞ்ஞான கலாசார நிறுவனமும் கூட்டாக இதை ஆரம்பித்தன இந்தப் பல்கலைக்கழகத்தின் 24 உறுப்பினர் கொண்ட பல்கலைக் கழகச் சபை என்ற ஆட்சி மன்றம் 'யுனெஸ்கோ' பணிப்பாளர் நாயகத்தினாலும் ஐ நா. செயலாளராலும் கூட்டாக நியமிக்கப்படுகின்றது. அறிவாளிகளிடையே கருத்துகளையும், தகவல்களையும் பரிமாறுவதற்கும் ஒத்துழைப்பு, கருத்துத் தொடர்பு என்பவற்றுக்குமாகிய அமைப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்வதே இதன் பணியாகும். அத்துடன் பூகோளப் பிரச்சினைகளின் ஆராய்ச்சியிலும் இது ஈடுபடும் வளரும் நாடுகளிலிருந்து வரும் திறமை மிகு இளம் அறிவாளிகளினதும் விஞ்ஞானிகளினதும் பங்குபற்றுதலைப் பல்கலைக்கழகம் நாடுகின்றது முன்னாட் தலைமைச் செயலாளராகிய ஊ தாண்ட் அவர்களே இப்பல்கலைக்கழகத்திற்கான யோசனையை முதன் முதல் 1969 இல் முன் வைத்தார். பல்கலை கழகத்தின் தலைமையகம் ஜப்பானில் டோக்கியோவில் உள்ளது.

(ஆதாரம்: ஐக்கியநாடுகள் பற்றிய அடிப்படை உண்மைகள்)

ந. (சூகசாசன்
(யாழ். இந்துக் கல்லூரி)

## விடுகதை விடுவோம்

1. உலகம் உறங்கினாலும் அவன் ஓடி விளையாடுவான்.
2. அம்மா படுத்திருப்பாள் மகள் ஓடிக் கொண்டிருப்பாள்.
3. என் தாயோ கடல், என் தந்தையோ சூரியன் என்னை விரும்பாதவர் உலகில் ஒருவருமில்லை.
4. கேட்டால் பேச மாட்டான் போட்டால் பேசுவான்.
5. கைக்குள் அடங்குவான். கண்ணைச் சிமிட்டுவான்.

1 மணிக்கூடு
2 அம்மி, குளவி
3. உப்பு
4. வானொலி
5 கல்குளேட்டர்

செல்வி. க வனிதா
சைவபிரகாச வித்தியாசாலை,
தெல்லிப்பழை

## நிச்சயமாய்த் திருந்திடுவீர்!

என் மழலை மொழி கேட்டே
தன் மனம் பூரித்தார் தந்தை
கன் மனம் கசிந்துருகக்
கட்டியணைத்தே முத்தமிட்டார்

கண்மணியே கற்கண்டே தேனே பாலே
கரும்பே நீ கண் வளராய்
மண்மீது நன்மணியாய் நான் வளரவே
மட்டிலா முயற்சித்தார் மலிந்தே

சீர்கெட்ட தரணியில் நீர் கெட்டுப்போகாது
நிச்சயமாய்த் திருந்திடுவீர் நிமிர்ந்தே
யார் கெட்ட போதிலும் பாதை மாறாமல்
பக்குவமாய் இருப்பீர் பரிந்தே

செல்வி. மைதிலி தனராஜ்

## சிறுவர் சுடர்

# சபதம் முடிக்க கூந்தலை விரித்த திரௌபதியின் மன உறுதி

(சென்றவாரத்தொடர்ச்சி

வனவாசத்தின் போது ஐயந்திரன் திரௌபதியைக் கவர்ந்து செல்ல வருகின்றான் அப்போது அவள் தனது சாமர்த்தியத்தால் அவனிடமிருந்து தப்புகிறாள். இதன் மூலம் சுயநலக் குணத்தினை உள்ளே வைத்து நல்லவன் போர்வையில் திரியும் சில கயவர் கூட்டத்தினை இனங்கண்டு கொள்ளும் சாமர்த்தியத்தை சமுதாயத்திற்குக் காட்டிக் கொடுக்கிறாள் திரௌபதி பெண்ணினச் சிறந்த குணமொன்று அவளிடம்புலப்படுகிறது. தன் மனத்தையே பறிக்க முயன்று தோல்வி கண் துச்சாடனன் மீது அவளுக்கு அடக்கமுடியாத கோபம் இருந்திருக்கும் ஆனால்; தன் மாமன் திருதராஷ்டிரன் தன் மக்களை மன்னித்தருளுமாறு அவளை வேண்டிய போது திரௌபதி சீற்றம் தணிந்து

### பகுதி- ll

அன்புருவாய் மாறுவது பெரியோர்க்கு அவள் அளிக்கும் பெருமதிப்பையும் குற்றத்தை மன்னிக்கும் பெரும் தன்மையையும் புலப்படுகிறது

உதிஷ்டிரனே ஏனைய பாண்டவரோ போரில் அவ்வளவு விருப்பம் காட்டாதிருந்த சமயத்தில் கிருஷ்ணன் தூதாக கௌரவர்களிடம் செல்லவிருந்த வேளையில் "விரித்த என் கூந்தலை முடித்து சபதம் முடிப்பது எப்படி?" என்று கதறுகிறாள். "யான் தூது சென்று மீண்டும் வந்து உன் கூந்தலை முடிக்கின்றேன் அம்மா" என்று ஆறுதல் கூறுகிறான் கிருஷ்ணன் அங்கு விரிக்கப்பட்டது கூந்தல் மாத்திரமல்ல அவளது

அ நிக்ஸன்

மன உறுதியும் விரிக்கப்படுகிறது

வாய்ப்புகள் — வசதிகள் போன்றவற்றிற்கு ஏற்ப தாம் கொண்ட கொள்கையையே மாற்றியமைக்கும் இன்றைய சமுதாயத்தின் சில பச்சோந்திக் கும்பல்களுக்கு சுயநலக் குட்டையில் ஊறிய சில மானிட மடடைகளுக்கு திரௌபதியின் இந்த அசையாத உறுதி மிகச் சிறந்த பாடமாகவும் வழிகாட்டியாகவும் அமைகிறது.

அதர்மத்தை அளித்து தர்மத்தைக் காத்த பாரதப்போருக்கு மூலப் பொருளாகிய திரௌபதியை பிடிவாதக்காரி ஆவேசக்காரி என்று பல் வேறு கோணங்களில் பலர் விமர்சித்தாலும் அவள் தன் புதுமை, மகிமை புதிய நட்பு ஆகிய இயல்புகளினாலும்; அடக்குமுறைக்கு, எதிராகக் கிளர்ந்தெழும் தன்மையாலும்; தனை குற்றமுணர்ந்து வருபவரைப் பழிவாங்காது மன்னித்து விடும் இறை நிலைத்தன்மையாலும் உலகையே வெற்றிகொள்ளும் அசைக்க முடியாத இறை பக்தியாலும் இன்றைய சமுதாயத்தை சிறந்த முறையில் வழி நடத்தக் கூடிய காவிய நாயகியாக திகழ்கின்றாள்.

பெண்ணடிமை என்று சொல்லி பெண்களை வாட்டி வதைக்கும் ஆண்வர்க்கத்துக்கு நல்ல படிப்பினையைப் புகட்டி பெண்ணடிமையை நீக்கி தற்கால சமுதாயத்தை வழி நடத்தும் காப்பிய நாயகி திரௌபதி என்பது உறுதியானது. *

## மங்கையர்க்கு சில யோசனைகள்

அதிக நாட்கள் ஆன பார் சோப்பை எளிதில் வெட்டவில்லை என்றால் கதிய சிறிது கொதிநீரில் நனைத்து விட்டு வெட்டவும் சோப்பை எளிதாக வெட்டிவிடலாம்

தேய்ந்துபோன சோப்புத்துண்டுகளை தையல் மெசின் பெட்டியில் போட்டுவைக்கவும் இந்த துண்டை ஊசி குண்டூசி முதலியவற்றை குத்தி வைக்கும் பின்குஷனாக உபயோகிக்கலாம் ஊசியும் துருப்பிடிக்காது. இந்த சோப்பாய ஊசியில் நூலைக் கோர்க்கும் போது நூலின் மூலையில் சிறிது தடவிவிட்டு நுழைத்தால் எளிதில் நுழைந்துவிடும்.

வாசனை சோப்புகளைச் சுற்றியுள்ள காகிதத்தை உடைகளுக்கு இடையில் வைத்தால் உடைகள் நல்ல மணம் வீசும்.

சோப்புப் பெட்டியின் அடியில் ஒரு துண்டு ஸ்பான்ஜை வைத்து அதன் மீது சோப்பை வைக்கவும் சோப்பில் உள்ள நீரை ஸ்பான்ஜ் உறிஞ்சிவிடும் இதனால் சோப்பும் கரைந்து வீணாகாது. சோப்பில் ஊறிய ஸ்பான்ஜையும் பீங்கான் கிண்ணங்கள் கண்ணாடிப் பாத்திரங்கள் தங்க நகைகள் மற்றும் சிறிய பொருள்களைச் சுத்தம் செய்ய பிரஷ்போல உபயோகிக்கலாம்

தேய்ந்துபோன சிறிய சோப்புக்களை கொதிநீரில் ஊறவைக்கவும் சோப்புக் கரைந்தவுடன் அதில் கரித்துணியை ஊறவைக்கவும் அரைமணி நேரம் கழித்துத் துவைத்தால் எல்லா அழுக்குகளும் எளிதில் வெளியேறிவிடும்

ஆதாரம்—மங்கை

## விதியே! பதில் எழுது

முடியாத பாடலுக்கு பொருள் ஒன்று வேண்டும்
விதியோடு விளையாடும் முடிவொன்று வேண்டும்
இசையோடு உறவாடும் புது வீணை தானே - இது
தினம் உறங்காது இசை பொழியும் சிறு வீணை மானே

என்றும் விடியாத அடிவானில் விடிவெள்ளி வேண்டி
தன் உயிரிற்குப் போராடும் இளந்தென்றல் அவளே
கலையாத அவள் கலையை களைந்து எடுக்கவே வெறும்
கரம் கொண்டு துடிக்கின்றாய்

பதில் சொல்லு நீயே
செல்வி குகா

## நறுமுகை

## வெள்ளித் திரை

# தமிழ்த் திரையுலகில் வரலாறு படைத்தவர் சிவாஜி கணேசன்

தமிழ்த் திரை உலகில் சிவாஜிகணேசன் வரலாறு படைத்தது மட்டுமல்ல. அவரே ஒரு வரலாறாகவும்ஆகிவிட்டார்.

சின்னஞ்சிறு வயதிலேயே சிவாஜி கணேசன் நடிக்கத் தொடங்கினார். அவர் நடிக்கத்தொடங்கி 50 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதனைத் தமிழ்த் திரை உலகம் பொன் விழாவாகக் கொண்டாடுகிறது

சிவாஜி 9 வயதிலேயே நாடகத்தில் நடிக்கத் தொடங்கினார் 24 வயதில் சினிமாவில் நடிக்க ஆரம்பித்தார்

தமிழ், தெலுங்கு கன்னடம், மலையாளம், இந்தி ஆகிய மொழிகளில் கதாநாயகனாக நடித்து 34 ஆண்டுகளில் 261 படங்களை முடித்தது ஒரு



பெரும் சாதனையாகும்.

வீரபாண்டிய கட்டப் பொம்மன் படத்தில் சிறப்பாக நடித்ததற்காக தனது 30ஆவது வயதில் (1959ல்) அகில உலக சிறந்த நடிகர் பரிசை கெய்ரோவில் நடந்த பட விழாவில் பெற்றார். ஓர் இந்திய கலைஞன் உலக அளவில் பரிசு பெற்றது இதுவே முதல் முறை

1966ல் பத்மஸ்ரீ பட்டத்தையும் 1984ல் பத்மபூஷண் பட்டத்தையும் இந்திய அரசு இவருக்கு அளித்து தான் கௌரவம் தேடிக்கொண்டது

1983ல் தமிழ்நாடு மாநில நியமன உறுப்பினராக டில்லி நாடாளுமன்றத்துக்கு சிவாஜி நியமனம் பெற்றார்;

அவருடன் நடிப்பது தனித்துவமான சுவை மிக்க வளர்ச்சி வழிகோலக் கூடிய அனுபவமாகும் என்பது சக நடிகர்களின் கருத்து.

### விஜய் - மீனாட்சி இணைகிறார்கள்

விஜயகாந்தின் நண்பரும் உதவியாளருமாகிய இப்ராஹிம் தயாரிக்க இருக்கும் ஒரு படத்தில் விஜயகாந்தின் ஜோடியாக மீனாட்சி சேஷாத்திரி நடிக்க விருக்கிறார்

'ஊமைவிழிகள்' புகழ் அரவிந்தராஜ் இந்தப் படத்தை இயக்குகிறார்

### டினாவுக்காக ராஜேஷ்கன்னா படம் எடுக்கிறார்

டினா முனிம், கவர்ச்சி நடிகை இந்தி நடிகர் ராஜேஷ் கன்னாவின் ஆதரவில் ஹிந்தி படங்களில் தலைகாட்டியவர் டெலிவிஷன் படங்களில்தான் இனி அவருக்கு எதிர்காலம் படவுலகில் அவரின் காலம் முடிந்துவிட்டதாம்

டினாவுக்காகவே ராஜேஷ் கன்னா டிவி படம் ஒன்றை எடுக்கத் திட்டமிடுகிறார். அது எப்போது வெளிவரும் என்று சொல்லமுடியாது உள்ளது

### 'ஒவ்வொரு பூவுக்கும் ஒரு வாசம்'

மதர் இந்தியா கிரியேஷன்ஸ் தயாரிக்கும் 'ஒவ்வொரு பூவுக்கும் ஒரு வாசம்' படத்தில் சுரேஷின் ஜோடியாக இளவரசி நடிக்கிறார்

சசிகலா, கலைச்செல்வி, டிஸ்கோ சாந்தி, ரமேஷ், மலேசியா வாசுதேவன், தேங்காய் சீனிவாசன் நடிக்க வி. கே. லிங்கம் ஒளிப்பதிவு செய்கிறார். எம் எஸ் விஸ்வநாதன் இசையமைக்க ஏ வி பாபு கதை வசனம் எழுதி இயக்குகிறார். தயாரிப்பு சசிகலா சபூர் சந்த்.

## படவுலகை விட்டு மறைந்த விஜயசந்திரிகா மீண்டும் நடிக்கிறார்

'ரிக்ஷாக்காரன்' படத்தின் மூலம் அறிமுகமாகி ஏராளமான படங்களில் நடித்தவர் விஜயசந்திரிகா.

ஆனால் அவரால் தமிழ்ப்படவுலகில் நிலையான ஒரு இடத்தைப்பிடிக்க முடியாமல் போய்விட்டது இடையில் இரண்டு ஆண்டுகள் நடிக்கச் சந்தர்ப்பம் கிடைக்காமல் இருந்தார்

அதன் பின்னர் 'ராகவேந்திரர்' படத்தில் நடிக்க ஆரம்பித்து இப்போது சுமார் ஆறு படங்கள் வரையில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

விஜயசந்திரிகா சொல்கிறார்;

படங்களில் வாய்ப்பு இல்லாதபோது எனக்கு நாடகமும் டிவியும் தான் கைகொடுத்து உதவின. முன்பு தொடர்ச்சியாக நாடகங்களில் நடித்துக்கொண்டிருந்ததால் பல சினிமா வாய்ப்பை இழக்க நேர்ந்தது.

அதனால் இப்போது நாடகங்களில் நடிப்பதை விட்டுவிட்டேன்

குறிப்பிட்ட பாத்திரம் என்றில்லாமல் எல்லாப் பாத்திரங்களிலும் நடித்துவருகிறேன்

அதில் 'இரவுப் பூக்கள்' படத்தில் மட்டும் கிளாமர் ரோல்.

இப்படி சொல்கிறார் விஜயசந்திரிகா.

### மீண்டும் மனோகர்

நீண்ட நாட்களுக்குப் பிறகு நடிகர் மனோகர் மீண்டும் திரைப்படத்தில் நடிக்கிறார்.

'மக்கள் ரெடி' என்ற படத்தில் பாண்டியராஜனின் தந்தையாக பொலீஸ்காரர் வேடத்தில் அவர் நடிக்கிறார்.

● தயாரிப்பு: பேரின்பம் ●

## திரை உலகில்

நதியா, அமலா, ரேகா, ரஞ்சனி என்று புது முகங்கள் "மள மள" வென வளர்ந்து கொண்டிருந்தாலும், தன் இடத்தை சரிவில்லாமல் தக்க வைத்துக் கொண்டிருப்பவர் ஜீவிதா தான்!

*

தீபா, வடிவுக்கரசியைத் தொடர்ந்து சொந்தப்படம் எடுக்கும் ஆசை இன்னும் சில நடிகைகளுக்கு வந்திருக்கிறதாம்.

*

இந்து மதம் பற்றிய புத்தகம் ஒன்றை எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் வெண்ணிற ஆடை மூர்த்தி.

*

ஜெயஸ்ரீ முதல் முறையாக மலையாளப்படம் ஒன்றில் நடிக்கிறார் படத்தின் நாயகன் மலையாள சூப்பர் ஸ்டார் மம்முட்டி

## கலைக் கோட்டம்

# ஒரு வித்துவான் உருவாகிறான்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நவராத்திரி பூஜை வழமைபோல் நடந்தது

அதன் நிகழ்ச்சி நிரலில் 14வது வயது நிரம்பிய குணராஜா நக்கீரனின் புல்லாங்குழல் கச்சேரியும் இடம் பெற்றிருந்தது

எமது கலாசார வளர்ச்சிக்கு எமது சிறுவர்களும் ஆர்வம் காட்டுகின்றார்கள்...... அதனைச் சிதைவுறாவண்ணம் பாதுகாப்பதற்கு பெற்றோரும் மைந்த ஆதிதாள வர்ணத்தை மூன்றுகாலமும் மிக அழகாகவும் பிரமாதமாகவும் வாசித்தான் தொடர்ந்து 'வாதாம்பி கணபதே'' ஹம்சத்வனி ராகம் வாசித்து உருப்



### "சாமியார்''

ஊக்கமளிக்கின்றார்கள் என்ற எண்ணம் நெஞ்சை நிரப்ப கொக்குவில் இந்துக் கல்லூரியை அடைந்தேன்.

குணராஜா நக்கீரனின் 'நின்னு கோரி' மோகன ராகத்தில் மிதக்கின்றது சங்கீதவித்துவான் வெங்கடேஸ்வர சர்மா வயலினிலும், பாலசந்திர சர்மா மிருதங்கத்திலும், கண்ணதாசன் கடத்திலும் வாசித்து இருக்கின்றார்கள். "தீராத விளையாட்டுப்பிள்ளை'' என்ற படியை வாசிக்கத் தொடங்கிய போது ரசித்துக் கேட்கக் கூடியதாக இருந்தது "வளரும் பயிரை முளையிலே தெரியும்'' என்பதுபோல், தாளம் அவனின் உடம்போடு ஒட்டியிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது

அடுத்து "கம்பீர நாட்டை'' ராகத்தில் "ஞானவிநாயகனே'' என்ற உருப்படியை ராகம், சுரம் வாசித்து பக்கவாத்தியங்களுக்கு வேலை கொடுத்த பாணி மிகச்சிறப்பு. அதுபோல் "ஆபோகி ராகத்தில்'' 'சேவிக்க வேண்டுமையா' என்ற கீர்த்தனையை அவன் வாசித்தது என்னை மிகவும் கவர்ந்தது.' அலை பாயுதே கண்ணா'' என்ற பாடலும், எம் எஸ் சுப்புலட்சுமியின் "காற்றினிலே வரும் கீதம்'' என்ற பாடலும் அங்கிருந்தவர்களைப் பரவசப் படுத்தியது

14 வயதுச் சிறுவன் இத்தகைய ஒரு நிகழ்ச்சியை நடத்தியமை உண்மையில் பாராட்டக் கூடியது அன்று அந்தக் கச்சேரி நடைபெற்ற 1மணித்தியாலம் 10 நிமிடங்களும் அச்சிறுவனின் திறமையும், சாமர்த்தியமும் நன்கு புலப்பட்டது

நக்கீரனின் இந்தத் திறமைக்கு காரணமான புல்லாங்குழல் ஆசிரியர் திரு ஏ நமசிவாயம் அவர்கள் அவனைத் திறம்படக் கற்பித்துள்ளார். கொக்குவில் இந்துக் கல்லூரியில் 8 ஆம் வகுப்பில் கற்கும் இம் மாணவன் திரு ஏ நமசிவாயம் அவர்களின் திறமையான ஒரு சில மாணவர்களில் குறிப்பிடத் தக்கவன். என்பதுடன் சங்கீத பூஷணம் எல். திலகநாயகம் போல் அவர்களிடம் 4 ம் ஆண்டு வாய்ப்பாட்டும் கற்று வருகிறான் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய காலகட்டத்தில் நமது கலை கலாசாரத்தை வளர்ப்பதற்கு இவனைப் போன்ற இளம் கலைஞர்கள் பலர் தேவை. அப்போது தான் நமது மொழியும் கலாசாரமும் எதிர்காலத்தில் சிறப்புற வழி பிறக்கும் என்பது திண்ணம்

—வேணுகானத்தால் பலரை மயக்க வல்ல குணராஜா நக்கீரனிடம் எதிர்காலம் மயங்கும் என்று உறுதியுடன் எதிர்பார்க்கலாம். *

### வளரும் கலைஞர் அறிமுகம்

இன்றைய மாணவர் இளைஞர்கள் நளைய ஈழத்தின் பிரசைகள் அவர்களிடம் உள்ள கலை ஆற்றலை வளர்ப்பது பெற்றோர், ஆசிரியர், சலாபிமானிகள் கடமையாகும்.

அந்த வகையில் தமிழ்ப் பிரதேசம் எங்கும் வாழும் வளரும் கலைஞர்களை அறிமுகப்படுத்த சஞ்சீவி தீர்மானித்துள்ளது.

வளரும் கலைஞர்கள் நடத்திய நிகழ்ச்சிகள் தரமாக இருப்பின் அவைபற்றிய விமர்சனத்தை தகுதி வாய்ந்த கலைஞர் ஒருவரைக் கொண்டு காலம் பிந்தாது எழுதி அனுப்பினால் சஞ்சீவியில் பிரசுரிக்கப்படும்.

-பிரதம ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவன் வரவு கண்டு தணியும் தலைவி காதல்

அகப்பொருள் துறையில் அருமையான வெண்பா காளமேகப் புலவரால் பாடப்பெற்றது.

ஒரு கன்னிப் பெண்ணின்மீது மன்மதன் கரும்புவில்லினால் மலர்க்கணை எய்தான் அதனால் அப்பெண் ஒரு தலைவன் மீது காதல்கொண்டாள். காதல் கொண்டவளுக்கு உணவு செல்லாது உறக்கம் கொள்ளாது.

"எள்புருகி இனவேல் நெடுங்கண் இமை பொருந்தா பலநாளும்" என்றார் ஆண்டாள்

'விண்ணுறங்கும், மண்ணுறங்கும் மற்ற எல்லாம் உறங்கும் கண்ணுறங்கேன் எம் இறைவர் காதலால் பைங்கிளியே'' என்றார் தாயுமானவர்.

இதேபோல் தலைவனிடம் காதல்பூண்ட தலைவி ஊண், உறக்கம் இன்றித் தவிக்கின்றாள்.

இந்தத் தடுமாற்றத்தைக் கண்ட தந்தையர் ஏதோ பேய்க்கோளாறு போலும் என்று எண்ணித் தெய்வத்திற்கு பொங்கலிட வேண்டுகிறார்கள். அதனால் பயன் ஏதும் ஏற்படவில்லை.

தலைவிக்கு ஏற்பட்ட நோய் தலைவனைக் கண்டால் தானே தணியும் இதனையே புலவர் சொல்லோவியமாக வடித்துள்ளார்.

இதோ பாடல்:

முன் நாலில் ஒன்று கொடையான்
முன் நாலில் ஒன்றெடுத்து
முன்நாலின் ஒன்றின் மேல்
எய்ததனால் — முன்நாலில்
ஒன்றறிந்தால்போகுமோ
ஓ! ஓ! மடமானே
அன்றறிந்தான் வாராவிடில்

இப்பாடலில் பன்னிரு ராசிகளில் நான்கினைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. முன்நாலில் ஒன்றுடையான் என்பது

### இலக்கியக் காட்சி

மகர மீனைக்கொடியாக உடைய மன்மதனைக் குறிக்கும் அவன் பன்னிரு ராசிகளில் ஒன்றான தனுவை கரும்பு வில்லை எடுத்து பன்னிரு ராசிகளில் ஒன்றான கன்னி மீது—ஒரு பெண் மீது எய்தான் இதனால் அவன் ஒரு தலைவன் மீது தீராக் காதல் கொண்டாள் — தன் கொண்ட கன்னியின் செயல்கள் விந்தையாய் இருந்தன இதனைக் கண்ட அவளது பெற்றோர். இவி பிடித்த அவள் நிலைகண்டு பன்னிரு ராசிகளில் ஒன்றான மேஷம்—ஆட்டினைப் பலி கொடுத்து வேள்வி செய்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சி. பரமேஸ்வரி

## முக்குணமுடைய மூன்று சுடர்கள்

— ஹெலன் பேர்ண்ஸ் —

அழகிய உடலம் ஆவி யாகிப்
புகைசெறி இல்லாப் புன்சிரிப் புடனே
தானே எரிந்து தமருக் கொளிதரும்
சந்தம் மிகுந்த கவினுறு கர்ப்பூரம்
பூமியில் எவரும் போற்றிப் புகழ்ந்து
சாத்விகம் என்று சரியாய்க் கூறலாம்
தான்எரி யாது தமரை யெரித்து
தான்பெரி தென்று தருக்கி யொளிதரும்
எண்ணெய் ஒழிந்து ஏழ்மை யுற்றால்
எரிந்து சீறிக் கொட்ட மடிக்கும்
விளக்குத் திரியை விரிந்த வுலகில்
ராஜஸம் என்று இனிதே இயம்பலாம்
தானும் எரிந்து தமரையும் எரித்து
ஒளிசிறி தேனும் இல்லா தாகிப்
புகைந்து கருகிப் புலாலாய் நாறும்
புன்மை நிறைந்து புகழும் அற்ற
கருட்டுக் கட்டை யை சுற்றும் உலகில்
தாமசம் என்று தருக்கிக் கூறலாம்
முக்குண மாம்மூன்று சுடர்க ளிடத்தே
முடங்கிய வுண்மை முப்மை உலகில்
அறிவோர் அறிஞர் அல்லோர் பதரே.

# மகத்தான அணுவும் கரும்பின் கணுவும்

அணு என்பது, இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில் இருந்தே உலக மக்கள் அறியக் கூடியதாக இருக்கின்றது

அணு, மக்களுடைய கண்களுக்குத் தெரியாத தூசு ஆனால் அதன் வலிமையைச் சொல்ல முடியாது என்று மெய்ஞானிகளும் விஞ்ஞானிகளும் கூறுகின்றார்கள்.

இவ்வளவு மகாவல்லமை பொருந்திய 'அணு' என்னும் சொல்லை நமது சமயகுரவர்கள் தேவார, திருவாசகங்களில் பாடியிருக்கின்றனர்.

ஒளவைப் பிராட்டியாரும் 'விநாயகர் அகவல்' என்னும் நூலில் 'அணுவிலணுவில் அப்பாலுக்கு அப்பாலாய் கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி' என்று பாடியுள்ளார்

இதன் பொருள்: அணுவுக்குள்ளே பரமாணுவாய், மகத்துக்கு மகத்தாய் நிற்பவரும் நன்கு கணுமுற்றிய கரும்பினுள்ளே இரசக்கட்டியாயும் அப்பரம்பொருள் நிற்கும்.

'அணுவில் அணுவினை,
ஆதிப்பிரானை
அணுவில் அணுவினை
ஆயிரங்கூறிட்டு
அணுவில் அணுவை
அணுகவல்லார்க்கு
அணுவில் அணுவை
அணுகலாமே—'

இது திருமூலரின் திருமந்திரம். சமயப்பெரியார்கள் இப்படி ஆத்மீக சட்டேற்றத்திற்குரிய தத்துவ விளக்கங்களைத் தந்திருக்கின்றனர்.

அதே போன்று கரும்பினுள் தேங்கிக் கிடக்கும் மகத்தான இரகசியங்களையும் அறிவாம்

18 ஆண்டுகளுக்கு முன்னர் சீனி உற்பத்தி நிபுணர் ஒருவர் வந்து இருந்தார். கந்தளாய் சீனித் தொழிற்சாலை ஆரம்பமான காலம் அது. அந்த நிபுணர் கரும்பு பற்றிய பல விஷயங்களைச் சொன்னார்.

கரும்பஞ்சாற்றில் இருந்து முதலில் சீனி, சர்க்கரை உற்பத்தி செய்யப்படும். பின்னர் அதன் சக்கையில் இருந்து ஜின் தயாரிக்கலாம். அதன் கழிவில் இருந்து மதுசாரம் செய்ய முடியும். அதன் கழிவில் இருந்து பாணி போன்ற பதார்த்தம் செய்ய முடியும் என்றும் அது பெரும் பாறை பலகைகளைத் தகர்த்தெறியும் டைனமைட்டுக்குரிய முக்கிய மருந்து என்றும் அந்த நிபுணர் சொன்னார்.

அப்பொழுது தான் மகத்தான அணுவையும் கரும்பின் கணுவையும் கவனிக்கக் கூடியதாக இருந்தது. *

சி. பிறைசூடி

# விஞ்ஞானத்தை விஞ்சிய மெய்ஞ்ஞானம் கண்ட தமிழர்

தமிழ் இலக்கியங்களிலும் புராணங்களிலும் பொதிந்துள்ள விஞ்ஞானக் கருத்துக்கள் எம்மை வியப்பிலாழ்த்தவல்லன அன்று சொல்லப்பட்ட கருத்துக்கள் வெறும் கருத்துக்களாகவே காணப்பட்டன

அக்கருத்துக்கள் இன்று மேற்கு நாடுகளில் விஞ்ஞானிகளின் ஆய்வுகூட உற்பத்தியாகக் காணும் நாம் மூக்கின்மேல் விரலை வைக்க வேண்டியவர்களாகின்றோம்

இன்றைய விஞ்ஞான பாடத்தில் பொருள்கள் மூன்றாகப்பிரிக்கப்படுகின்றன திண்பொருள், நீர்ப்பொருள், ஆவிப்பொருள் என்பனவையே அவையாகும்

ஆவிப் பொருள்களை அமுக்கத்தினால் அளவில் சுருங்கும்படி செய்யலாம். அரிசி உமி, தவிடு, ஆகிய பொருள்களை அமுக்கி அமுத்தி அளந்து ஒரு படியை பருமத்தில் முக்கால் படியாகக் காட்டலாம். ஆனால் அமுக்கி அளந்தாலும் ஒரு படி பாலையோ எண்ணெயையோ அல்லது நீரையோ முக்கால் படியாகக் குறைத்து அளந்து காட்ட முடியாது அழுத்தத்தினால் நீர்ப்பொருள்கள் சுருங்குவதில்லை. இந்த உண்மையைக் கண்டுபிடித்தவர் கி. பி. 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த பாஸ்கல்.

பாஸ்கலும் ஒளவையும்

பதினேழாம் நூற்றாண்டில் கூறிய இந்த உண்மையை அதற்குமுன்னர் வாழ்ந்த டன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒளவையார் அழகாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார்.

'ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்
நாழி முகவாது நால்
நாழி—தோழி நிதியும்

கணவனும் நேர்படினும் தத்தம் விதியின் பயனே பயன்.''

அழுத்தைப் பொறுத்து அழுத்தம் அதிகமாகின்றது

சக்திவாய்ந்த பொருள்களின் இயக்கம் பற்றிய உண்மைகளை உலகிற்கு உணர்த்தியவர் சேர். ஐசாக் நியூட்டன்.

## அறிவியல் முன்னோடி தமிழனே

வேற்று விசையால் தாண்டப்படாத வரையில், நிற்கின்ற பொருள் நின்றுகொண்டே இருக்கும். ஓடுகின்ற பொருள் அதே வேகத்தில் ஓடிக்கொண்டே இருக்கும் என்று நியூட்டன் கூறினார்.

இதனை அசைவு பற்றிய முதல் சித்தாந்தம் என அழைப்பர்.

நியூட்டனும் மாணிக்கரும்

நியூட்டனுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர் மாணிக்கவாசக சுவாமிகள் ''அவனன்றி ஓரணுவும் அசையாது'' என்று திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தினார் மணிவாசகர் 3ஆம் நூற்றாண்டில் தமக்கு எடுத்துக் காட்டிய பொருள்களின் இயக்கமுறைமை பின்வருமாறு;

'நடப்பன நடா அய்
கிடப்பன கிடா அய்
நிற்பன நிறுவி செய்
பதங்கடந்த மேலோன்.'

இத்தாலியில் வாழ்ந்த விஞ்ஞானி கலிலியோ பெண்டியூலத்தைக் கண்டுபிடித்தார் நீளம் மிகுந்த பொருள்கள் மெல்ல அசைந்தாடுவதையும், நீளம் குறைவாக உள்ள பொருள் விரைந்து அசைந்தாடுவதையும் கண்டுபிடித்து உலகிற்கு அறிமுகமாக்கினார்

நீளத்திற்கும் காலத்திற்கும் உள்ள இந்தத் தொடர்பை தமிழ் புலவர்கள் அறிந்திருந்தார்கள்

தமிழ் நாட்டில் ஊஞ்சல் ஆடுவது மகளிர்க்கு இயல்பு பெண்பால் பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் ''ஊசல்ப் பருவம்'' என்ற ஒரு பகுதி இடம்பெற்றது நீண்டு தொங்கும் ஊஞ்சலிலே தென்குளத்தூரில் எழுந்தருளிய அமுதாம்பிகை அமர்ந்திருக்கின்றாள் அலைமகள் ஒரு புறமும் கலை

### புத்தொளி

மகள் ஒரு புறமுமாக நின்றுகொண்டு, அமுதாம்பிகையாகிய மலைமகள் இருக்கும் அவ் ஊஞ்சலை அசைத்து ஆட்டுகின்றனர் ஆனால் அதைவிட வேகமாக அசைந்தாடுகின்றது மற்றோர் ஊஞ்சல் அந்த ஊஞ்சல் நீளத்தில் குறைந்தது. அதுதான் அமுதாம்பிகையின் காதில் தொங்கும் குழை. அந்தச் சிறிய குழை போல, ஊஞ்சலும் விரைந்து ஆடவேண்டும் என்று விரும்பிய அலைமகளும் கலைமகளும் ஊஞ்சலை வலித்து கலைக்க ஆட்டிப் பார்த்தனர். ஆனால் ஊஞ்சலின் வேகம் அதிகரித்ததாகத் தெரியவில்லை

கலிலியோவும் சிவஞானரும்

அமுதாம்பிகை, அவர்களின் அறியாமையைபற்றிச் சிரித்தாள் அவர்கள் இருவரும் நாணத்தால் முகம் சிவந்தனர். அமுதாம்பிகை இயற்கைச் சட்டங்கள் தெரிந்தவளல்லவா? அலைமகள் என்ன? கலைமகளென்ன? அவர்கள் கணவராகிய திருமாலும் பிரமனுமே வந்து ஆட்டினாலும் ஊஞ்சலின் நீளம் குறைந்தாலொழிய அதன் வேகத்தில் விரைவு காணமுடியாது.

கலிலியோ ஆலயத்தில் ஆடிய விளக்கில் கண்டு கூறிய அதே இயற்கைச் சட்டத்தை வீட்டில் ஆடிய ஊஞ்சலிலும் மகளிர் காதில் தொங்கிய குழையிலும் கண்டு இவ்வாறு கூறியவர் சிவஞான முனிவராவர்

அவர் கலிலியோ காலத்திற்கு முற்பட்டவர்.

கபிலர் கண்ட தொலை நோக்கிக்கும் கலிலியோ கண்ட தொலை நோக்கிக்கும் உள்ள ஒற்றுமையை இனிக் காண்போம்

திணையளவு போதாச்
சிறுபுல்நீர் - நீண்ட
பனையளவு காட்டும்
படித்தால் மனையளகு
வள்ளைக் குறங்கும்
வளநாட வள்ளுவர்
செய்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பசுவின் கண்ணீர் . . .

துள்ளித் துள்ளி ஓடியாடும் கன்றே- உனக்குச்
சொல்லும் புத்தி கேட்டிடுவாய் நன்றே!
பள்ளிப் பிள்ளை போல நீயும் தொல்லை- புவியைப்
பார்த்தால் நிம்மதி யிங் கில்லை!

பத்து மாதம் சுமந்தீன்ற அன்னை- என்
பாலைக் குடிக்க அண்டவிடார் உன்னை
சொத்தும் சுகமும் அற்ற ஏழை நம்மை- மாந்தர்
சுரண்டி உயர்த்திக் கொள்ளுகிறார் தம்மை!

தொன்றுதொட்டே நமது பண்பு சாந்தம்- அதுவே
சூரரையும் வசப் படுத்தும் காந்தம்!
ஒன்று மட்டும் நிச்சயமாய் நம்பு- தினி
உண்ணும் போதும் பிணித்து வைப்பார் தம்பு!

அந்த நாளில் ஓர் அரசன் நீதி- நமக்கும்
அளித்தான்; அது பழைய சேதி!
இந்த உலக வாழ்வுமகா துன்பம்- எனினும்
இதயம் போல்நாம் இணைந்திருப்பின் இன்பம்!

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

# காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

வட இந்தியாவை விஞ்சி நிற்கிறது தென் இந்தியா (பகுதி 1)

அதன் பிறகு சாகர்கள் படையெடுத்து வந்தனர் அவர்கள் பெருந்தொகையினராக வட இந்தியா முழுவதும், மேற்கு இந்தியா முழுவதும் பரவினார்கள்.

சாகர்கள் என்போர் துருக்கி நாடோடி வகையைச் சேர்ந்த ஒரு ஜாதியார் ஆவர். அவர்களிலும் வல்லமை மிகுந்த குஷாண் என்னும் ஜாதியர் அவர்களுடைய நிலங்களிலிருந்து அவர்களை ஓட்டி விட்டனர்

சாகர்கள் பாக்திரியா, பார்த்தியா முதலான நாடுகளை அழித்து விட்டுக் கடைசியாக வட இந்தியாவில், முக்கியமாக பஞ்சாப், ராஜபுதனம், கத்தியவார் ஆகிய இடங்களில் குடியேறினார்கள். இந்தியா அவர்களை நாகரிக மக்களாக்கியது. அதன் பிறகு அவர்கள் தங்களுடைய நாடோடிப் பழக்கங்களை விட்டுவிட்டார்கள்

இந்தியவின் சில பாகங்களில் பாக்திரிய அரசர்களும் துருக்கி அரசர்களும் ஆண்டு வந்தாலும் அதனால் இந்திய—ஆரிய சமுதாயம் அதிகமாறுதல் அடையவில்லை

இந்த அரசர்கள் பௌத்தர்களானபடியால் பௌத்த சங்க அமைப்பு முறையைப் பின்பற்றியே ஆண்டு வந்தார்கள்

இம்முறை பழைய இந்திய-ஆரிய முறையாகிய ஜனநாயக கிராம சமுதாயங்களை அடிப்படையாகக் கொண்டே நடைபெற்று வந்தது. ஆகவே இந்தப் புதிய அரசர்களின் கீழும், மத்தியிலிருந்து ஆளப்பட்ட பல கிராம சமுதாயங்கள் அல்லது குடியரசுகளைக் கொண்டதாகவே இந்தியா விளங்கியது

இவர்கள் காலத்திலும் தஷசீலமும் வட மதுரையும் சிறந்த பௌத்த கலாசாலைகளாக விளங்கின சீனாவிலிருந்தும் மேற்கு ஆசியாவிலிருந்தும் பலமாணவர்கள் அவ்விடங்களில் குழுமி கல்வி பயின்று வந்தனர்.

ஆனால் வடமேற்கு திசையிலிருந்து அடிக்கடி நிகழ்ந்த படையெடுப்புகள் காரணமாக அவ்வாற்றல்களிற் சிறந்த பலர் வடக்கேயிருந்து தெற்கே சென்றிருக்கலாம்

இதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு முஸ்லிம்கள் வடக்கே படையெடுத்து வந்த காலத்திலும் இத்தகைய நிகழ்ச்சிகள் நிகழ்வதை நீ பின்பு தெரிந்து கொள்வாய் இன்று கூட அந்நியர்களின் படையெடுப்புகளும் தொடர்புகளும் வட இந்தியாவைப் பாதித்த அளவுக்குத் தென் இந்தியாவைப் பாதிக்கவில்லை தென் இந்தியா இவர்களால் மிகவும் குறைவாகவே பாதிக்கப்பட்டிருக்கிறது.

மேனாட்டு நாகரிகத்தின் சாயல் படர்ந்த ஹிந்து முஸ்லிம் நாகரிகங்களின் கலப்பிலே தான் வட இந்தியாவில்

### நேருவிடம் இருந்து இந்திராவுக்கு

களினும், மௌரிய சாம்ராஜ்ய அமைப்பு சிதறிவிட்ட காரணத்தாலும் ஒரு பலன் ஏற்பட்டது. தென் இந்திய ராஜ்யங்கள் பழைய இந்திய ஆரிய முறையின் சிறந்த பிரதிநிதிகளாக விளங்கத் தலைப்பட்டன. இவ்வாறு இந்திய-ஆரிய சக்தி தெற்கே சென்று நிலை பெற்றது

வாழும் நம்மிற் பெரும்பாலோர் வளர்ந்து வந்திருக்கிறோம். ஹிந்தி, உருது அல்லது ஹிந்துஸ்தானி என்று கூறப்படும் நமது மொழி கூட ஒரு கலப்பு மொழிதான். ஆனால் தென் இந்தியாவில் பழைய ஹிந்து நாகரிகம் இன்னும் மேலோங்கி நிற்கிறது. *

(தொடரும்)

# கணித்தின் கவர்ச்சியும், அது தரும் மகிழ்ச்சியும்

கணிதத்தின் கவர்ச்சி என்பது புதிய இடங்கள் அல்லது பொருட்கள் என்பவற்றைக் கண்டுபிடிப்பதிலுள்ள கவர்ச்சி அல்லது ஆர்வம் போன்றதே ஆனால் கணிதக் கண்டுபிடிப்பு என்பது கருத்துகளின் உலகத்தில் நடைபெறும் கண்டுபிடிப்பாகும். மற்றையவை பௌதிகப்பொருட்களிடையே இடம்பெறும் கண்டுபிடிப்பே சிந்தனை அல்லது கருத்துப் போராட்டத்தின் பின் ஏற்படும் கருத்துத் தெளிவு என்பது ஒரு மகிழ்ச்சிகரமான அனுபவமே.

குறுக்கெழுத்துப் போட்டி அல்லது வேறு புதிர்களை விடுவிப்பவர்கள் இத்தகையதொரு அனுபவத்தைப் பெற்றிருப்பார்கள். இவற்றிலிருந்து ஆர்க்கிமிடீஸ், பைதகரசு போன்றோர் தமது கண்டுபிடிப்புகளால் பெற்ற ஆனந்த அனுபவத்தை நாம் கற்பனை செய்து கொள்ளலாம் கணிதத்தின் எல்லா விடயங்களையும் நம்பாடசாலை மாணவர்கள் தாமாகவே கண்டுபிடிப்பதென்பது முடியாத காரியம் எனினும் அவர்களும் வழிப்படுத்தப்பட்ட கண்டுபிடிப்பின்மூலம் ஓரளவு மகிழ்ச்சியடைவர். வகுப்புக் கற்பித்தலில் அந்த எதிர்பார்ப்பு இருக்க வேண்டும்

கணிதம் ஓர் அறிவுத் தொகுப்பாக அபிவிருத்தியடையும்போது அதிலிருந்து புதிய கவர்ச்சிகள். மகிழ்ச்சிகள் ஏற்படுகின்றன ஏனெனில் முன்பு வேறுபட்ட கண்டுபிடிப்புகளாக இருந்தவை இடபோது இணைக்கப்பட்டுப் பார்க்கப்படும் போது பல புதிய தொடர்புகள் வெளிப்படத் தொடங்குகின்றன

முன்பு உள்ளுணர்வால் அல்லது பரிசோதனையால் காணப்பட்டது இப்போது தர்க்கரீதியாகத் தொடர்புபட்டவை

சு மகாலிங்கம்
(யாழ்: மத்திய கல்லூரி)

யாகக் காணப்படலாம் அவற்றிற்கிடையேயுள்ள தொடர்பு அழகானது, நேர்த்தியானது என வர்ணிக்கப்படத் தக்கவையாக ஆனந்தம் தருகின்றன.

எனினும் இந்த நயக்கும்தன்மை ஆளுக்குஆள் வேறுபடுகிறது. சிலரிடம் இது இளமையிலிருந்தே உள்ளது. சிலரிடம் இது பின்பு தோன்றி வளர்கிறது சிலரிடம் இது ஓரளவுடன் நின்று விடுகிறது. உதாரணமாக ஈக்குளிட்டின் கேத்திர கணிதம் இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் கணித அமைப்புக்கான அறிமுகமாகக் கற்பிக்கப்பட்டு வந்தது அது ஒரு சிறுதொகையினருக்கு பெருமகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது ஆனால் பலருக்கு அது என்னவென்றே புரியாமல் களைப்பும் வெறுப்பும் அடையச் செய்துள்ளது.

அதிர்ஷ்டவசமாக பிறிதொரு அணுகுமுறை பலருக்கு இன்பமளிப்பதாய் இருந்து வந்துள்ளது இது கணிதத்தின் பிரயோகம் அல்லது பயன்பாடு கருதி அதனை அணுகும் முறையாகும் இங்கு ஒரு தொழிலை ...வைப்பெற கணிதம் ஒரு கருவியாக, வழியாக இருக்கின்றது

மாதுமித் தொழில் அல்லது பொறியியல் துறையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம் மிக மட்டமான தரத்தில் இது ஒரு தொழிற்திறமையைப் பெறுவதற்கான கருவியாக அமையலாம். இளம் வயதினர் சிலபொருட்களைச் செய்வதில் காட்டும் ஆர்வம்—சில மாதிரியுருக்களைச் செய்தல், வரைதல், கோலங்கள் அமைத்தல், எளிய இயந்திரவடிவங்களை அமைப்பது போன்றவற்றைக் குறிப்பிடலாம்

அல்லது தாங்களாகக் கணித்து உயரம் தூரம் அளந்து கணிப்ப புள்ளி... தாமே ... போன்றவாம்

இதனைப் பிரயோக கணிதம் மூலம் கணிதத்தை அணுகும்முறை எனலாம் கப்பலோட்டும் தொழிலோடு சம்பந்தப்பட்டவர்கள் விருப்பத்துடன் சில கணித்தல்களைத் திரும்பத்திருப்பச் செய்வதுண்டு பெரும்பாலும் வாய்ப்பாட்டைத் திரும்பத் திரும்பப்பார்த்து கணிப்பதாக அது அமையும் எனினும் தமது கணித்தல் மிகச் சரியாக அமைய வேண்டும் என்ற ஆர்வம், அதில் ஏற்படும் சிலிர்ப்பு காரணமாக சலிப்படையாமல் முயல்கின்றனர்

கணிதப் பிரயோகம் காரணமாக ஏற்படும் இந்த ஆர்வம் சிலருக்கு கணிதக் கருத்துக்களைப் புரிந்துகொள்ளும் நிலைக்கு இட்டுச் செல்லும் மிக மென்மையான வழியெனலாம் அவர்கள் தம் செய்கையைச் செம்மையுறச் செய்ய அதற்குக் காரணமான சூத்திரம் எங்ஙனம் உருவாக்கப்பட்டது, அதன் கருத்து என்ன என்பவற்றையெல்லாம் ஆழமாகப் புரிந்துகொள்ளும் நாட்டத்தை அவர்களிடம் இம்முறை ஏற்படுத்துமென எதிர்பார்க்கலாம்.

தம் பிரசினைக்குத் தீர்வு கிடைத்த மகிழ்ச்சித்திளைப்பில் கண்டுபிடித்துவிட்டேன், கண்டுபிடித்துவிட்டேன்' என்று கத்தியபடி நிர்வாணமாக வீதிவழியே ஓடிய ஆர்க்கிமிடீஸின் நிலை இந்த ஈடுபாடு வயிப்பு காரணமாகச் சூழலை மறந்த மன நிலையின் வெளிப்பாடே என்பதை நாமுணர வேண்டும் இது ஒரு தனிப்பட்ட சம்பவமல்ல இதைப் போன்ற பல சம்பவங்கள் உள

ஜேர்மனியைச் சேர்ந்த டாக்டர் போல் வொல்வ்ஸ்கேல் என்பவர் ஒரு கணிதப் பேராசிரியர் இவர் பேர்மற்றின் இறுதித்தேற்றத்தை நிறுவ நீண்டகாலம் முயற்சித்தும் முடியவில்லை அத்துடன் இவருக்குக் காதலிலும் தோல்வி ஏற்பட்டது.

இவற்றால் மனவிரக்தியடைந்த இவர் தற்கொலை செய்ய எண்ணி அதற்காக நாளும் நேரமும் குறித்துக் கொண்டார்.

அதற்கான நேரத்திற்குச் சில மணிகள் முன்பாக மீண்டும் பேர்மற்றின் தேற்றத்தை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டார். அம்முயற்சியில் ஈடுபட்டு அதில் ஆழ்ந்து போனமையினால் அவருக்குத் தெரியாமலே அவர் தற்கொலைக்கெனக் குறித்த நேரம் கடந்து சென்றுவிட்டது

இங்ஙனம் கணிதம் உயிரைக் காப்பாற்றி விட்டது பின்பு புத்துணர்வுடன் உழைத்து மிகுந்த செல்வந்தராகி சம்மால் நிறுவமுடியாத பேர்மற்றின் தேற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரியூட்டும் குண்டுத் தாக்கப்; பாதுகாக்கச் சில மார்க்கம்

பொதுபரக வகை எரியூட்டும் குண்டுகள் போடப்பட்ட இடத்திலிருந்து பாரிய ஒரு பிரதேசத்திற்கு சிறுசிறு எரியும் துண்டுகளாகச் சிதறிப் பறக்கின்றன. இவற்றின்மூலம் கட்டடங்களை தீபற்றச் செய்வது சிறிது கடினமாகவே இருக்கும் பெரியதொரு தேசத்திற் கொடிக்கு சிதறுவதால் அப்பிரதேசத்திலுள் காணப்படும் எளிதில் தீபற்றக்கூடிய பொருள்கள், உயிரினங்கள் இலகுவில் தீப்பற்றிக் கொள்கின்றன முக்கியமாக மக்கள் திறந்த வெளிகளில் திரியும்போது இவ்வகைக் குண்டுகள் போடப்பட்டால் அவர்கள் தாக்கப்படுவது நிச்சயமான தாகக் காணப்படும். இவ்வகைக் குண்டுத் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு நீரைப் பயன்படுத்துவதே இலகுவானதும் சிறந்ததுமான முறையாகும் நீர்க்குழாயின் மூலம் குண்டு விழுந்த இடத்தைச் சூழவுள்ள பிரதேசமெங்கும் நீரை விசிறியடித்து தீப்பற்ற முடியாத அளவு ஈரமாகவைத்திருப்பதன் மூலம் தீயை மேலும் பரவவிடாமல் கட்டுப்படுத்தலாம்

ஒரு கட்டடமொன்றில் ஏற்படுள்ள தீயை அணைக்க வேண்டுமானால் முதலில் எங்கிருந்து அணைக்கத் தொடங்குவது என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதற்கு அக்கட்டடத்தின் எப்பகுதியில் இருந்து தீ பிறப்பிக்கப்படுகின்றது என்பதையோ அல்லது எப்பகுதியில் உடனடியாக அணைக்க வேண்டிய அளவு பாரதூரமாக தீ பரவி இருக்கிறது என்பதையோ அறிந்து அவ்விடத்தில் இருந்தே தீ அணைப்பினை ஆரம்பிக்க வேண்டும். அறையொன்றினுள் தீப்பற்றியிருப்பின அதனுள் அனுவசியமாக உள் நுழைவது விரும்பத்தக்கதல்ல தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு தேவையான நீர், மணல் என்பனவும், தேவையான கருவிகள், பொருள்கள் அனைத்தும் தயாராக இருக்கும்பட்சத்திலேயே உள் நுழைய வேண்டும் அறையொன்றினுள் பற்றிய தீயை அணைத்துவிட்டு அடுத்த இடத்திற்கு நகரும்போது சில வேளைகளில் முன்னைய இடத்தில் மீண்டும் தீப்பற்றக்கூடிய சாத்தியம் இருப்பதாலேயே, பரவலாக நீரை விசிறி தீயைக் கட்டுப்படுத்திய பின் ஒரே முற்றாக அணைக்க முயல வேண்டும் அத்துடன் தீயை அணைக்க முயலும் போது அந்த அறையின் அனைத்துக் கதவுகளை

## பகுதி - III

யும் ஜன்னல்களையும் மூடியபின்பே தீயை அணைக்க முயலுங்கள்.

இது தீயை ஏனைய அறைகளுக்குப் பரவுவதைத் தடுப்பதோடு, வெளியிலிருந்து காற்று உள்ளே வருவது தடுக்கப்படுவதால் இலகுவில் தீயினை அணைக்கக் கூடியதாய் இருக்கும். ஆனால் அவ்வறையின் கதவு காலத் திறந்திருப்பின் மாடிப்படிகளை அல்லது வேறு திறந்திருக்கும் பகுதிகளை புகை போக்கிகளாகச் சயப்பட வைத்து அணைக்க முடியாதளவுக்கு தீயைப் பரவச் செய்துவிடும்.

தீயானது ஒரு சிலரால் மட்டும் அணைக்க முடியாதளவுக்கு பரவி விட்டால் பலர் ஒன்று சேர்ந்து அணைக்க முயலுங்கள் இதன்போது காற்று வீசும் திசைக்கு எதிர்த்திசையை நோக்கி தீயை அணைத்துச் செல்லுதல் தீ மேலும் பரவுவதைத் தடுக்கும். நவீன நீர்க்குழாய் வசதி இல்லாத இடமாயின், கிணறுகளிலிருந்தே நீர் எடுக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும் அதிலும் சற்றுத் தொலைவிலுள்ள கிணறாயின் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு ஒழுங்கான முறையில் இயங்கினால்தான் தீயை மிக இலகுவில் அணைக்க முடியும்.

இதற்கு வாளித் தொடர் தீ அணைத்தல் முறையே பொருத்தமானதாகும் இதற்கு கிணற்றையும் தீப்பற்றியுள்ள கட்டடத்தையும் இணைக்கும் முறையில் போதுமானவர்கள் இரண்டு வரிசைகளாக ஒத்த இடைவெளிவிட்டு நிற்க வேண்டும் இவர்களைவிட கிணற்றில் நீரிறைத்து தொட்டியை நிரப்புவதற்கும், நீரை எரிகின்ற கட்டடத்தின் மேல் ஊற்றுவதற்கும் கூட நான்கைந்து பேர் ஆயத்தமாயிருத்தல் அவசியமாகும்.

கிணற்றில் இருந்து வாளி அல்லது குடம் போன்ற பாத்திரங்களில் நீரை நிறைத்து ஒரு வரிசையின் மூலமாக எரியும் வீட்டை நோக்கி அனுப்ப வேண்டும் தண்ணீர் வாளிகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டிருக்க, தீ எரியும் கட்டடத்தினருகில் உள்ளவர்கள், அவற்றைப் பெற்று நீரைக் கூரை மேல் தீ எரிகின்ற இடத்தை நோக்கி வீச வேண்டும். தீயைக் கட்டுப்படுத்துவதற்கு அரை மணி நேரமோ அல்லது ஒரு மணி நேரமோ, அதற்கு மேலோகூட ஆகலாம்


ஒரு வரிசையில் நீர் வந்த வண்ணம் இருக்க மறுதிசையில் வெறும் வாளிகள் கிணற்றை நோக்கிச் சென்று கொண்டிருக்க வேண்டும்.

### தீப்பற்றிய வீட்டிலிருந்து உயிர் காத்தல்

தீப்பற்றியிருக்கும் வீடொன்றினுள் சிக்கிக் கொண்டவர்களைத் தேடும் முயற்சியில் நீங்கள் ஈடுபடும்போது, வீட்டின் மேற் பகுதியில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும் ஏனெனில் பற்றியிருக்கும் தீயானது எப்பொழுதும் அதிகளவில் மேல்நோக்கியே பரவ எத்தனிக்கும். இந்நிலையில் நம் கீழ்ப்பகுதிகளில் தேடுதல் முயற்சியில் ஈடுபடும்போது மேற்பகுதிகள் நெருங்கமுடியாத அளவுக்கு தீயினால் சூழப்பட்டு விடலாம். மாடி வீடுகளாயிருப்பினும் ஏணியொன்றின் மூலமோ வேறு வழியாகவோ மேல் மாடிக்கு முதலில் சென்று பின் அங்கிருந்து ஒவ்வொரு மாடியாக தேடுதலை மேற்கொண்டு கீழ் நோக்கி வர வேண்டும்

தேடுதலை மேற்கொள்ளும்போது மூடிய அறையொன்றினுள் தீ நன்கு பரவியுள்ளதென நீங்கள் தீர்மானிக்கும் பட்சத்தில் அவ்வறையைத் திறப்பதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். அதிலும் உங்களை நேரடியாக கதவுகளில் மிகவும் முன்ஜாக்கிரதையாயிருத்தல் வேண்டும். ஏனெனில் உள்ளே அறையானது தீப்பற்றிய சூடான காற்றினால் நிறைந்திருந்தால் அறையினுள் மிகுந்த அமுக்கம் காணப்படும் எனவே கதவு திறபட்டவுடன், அதனை வலிந்து தள்ளி சூடான காற்றும், தீயும உங்கள் மீதே வீசி பரவி உங்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் இதைத் தவிர்ப்பதற்காக ஈரக் கைக்குட்டை ஒன்றினால் உங்கள் மூக்கையும், வாயையும் மூடிக்கட்டிய படி நன்றாகக் குனிந்து ஒரு காலைத் திறக்க இருக்கும் கதவுக்கு எதிராக உறுதியாக வைத்து பின் கைபிடியை மெதுவாகத் திருகி சிறிது சிறிதாக கதவைத் திறக்க வேண்டும் அப்பொழுது ஏற்பட்ட இடைவெளி வழியே அமுக்கக் காற்று வேகத்துடன் வெளிவரும். இவ்வாறு சிறுகச் சிறுக அமுக்கக் காற்றினை முழுவதுமாக வெளியேற்றிய பின் கதவினை முழுமையாகத் திறக்கலாம் ஈரக்கைக் குட்டை உங்களைப் புகையில் இருந்து பாதுகாக்கும்.

(வளரும்)



## இசைக்கும் நடனத்துக்கும் பல்கலைக்கழக அந்தஸ்து

முடிவும் காணப்படவில்லை. அதே நிலைதான் தற்பொழுது உள்ளது

11 10 1986 இல் சஞ்சீவியில் வெளியான திரு வீரமணி ஐயரின் பேட்டியைப் படித்தேன். அதில் வந்த சில கருத்துக்கள் குறித்த பின் வரும் தகவல்களை முன் வைக்க விரும்புகிறேன்.

கொழும்பிலுள்ள அரசினர் இசைக்கல்லூரிக் கலாசாலையின், நுண்கலைகளாக உருவாக்கி இந்துஸ்தானி கர்நாடக மேற்கத்திய இசை பயிற்றுமபடி வேண்டி திட்டம் வகுத்து 1965ல் அனுப்பினேன் ஆனால் அரசாங்கம் அதில் கவனம் செலுத்தவில்லை

1970 ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் வந்த பின்னர் மீண்டும் ஒரு புதிய திட்டம் தீட்டி கொழும்பு அரசினர் இசைக்கல்லூரியையும் இராமநாதன் அக்கடமியையும் கலாசாலை பிரிவுகளாக்கி பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கும்படி கேட்டிருந்தேன்.

புதிய பாடத்திட்டத்தில், இசை, நடனம், நாடகம் முதலியன சேர்க்கப்படல் வேண்டும். சாதாரண உயர்தர வகுப்புகளில் இப்பாடங்களைப் பயின்ற மாணவர்கள் தொடர்ந்து கலாசாலையில் முதலாண்டு அதனை ஒரு பாடமாகப் படித்து பின் பட்டப் படிப்பிற்கு ஒரு பாடமாக படிக்கலாம் என்று திட்டம் கொடுத்தேன்

நான் திட்டம் வகுத்து அனுப்பிய காலத்தில் திரு டபிள்யூ. பி. யக்குலோலவே அதிபராக இருந்தார்.

எனது திட்டத்தை தான் அமுலாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று அவர் எனக்குத் தெரிவித்தார். 1974ம் ஆண்டு நுண்கலைப் பிரிவுகளுக்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு இந்தியா சென்ற நான் கலாசாலை பாடத்திட்டங்களை நன்றாகப் படித்து 1976ம் ஆண்டு பாடத்திட்டம் பற்றி புதிய திட்டத்தையும் சமர்ப்பித்தேன். 1981 இல் கல்வி அமைச்சர் பாடத்திட்டம் பற்றிய கூட்டத்திற்கு என்னையும் அழைத்தார்

ஆனால் அதில் ஒரு

எஸ். கனகசபை
புன்னாலைக்கட்டுவன்
சுன்னாகம்.

## மங்களகரமான---

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி) ஆகிய இடங்களில் தங்கள் கல்விக் கூடங்களை அமைத்தபின், மயிலிட்டியில் தங்கள் பணியைத் தொடர்ந்தவர்கள்

முன்னர் காங்கேயன் துறை சைவாங்கில வித்தியாசாலை என வழங்கிய நடேஸ்வராக் கல்லூரியிலும், முன்னர் பல்லாகம் சைவாங்கில வித்தியாசாலை என வழங்கிய பல்லாகம் இந்துக் கல்லூரியிலும் இவர் திறமை வாய்ந்த மாணவன் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் கேம்பிரிட்ஜ் யூனியர் வரை படித்த பின், சென்ஜோன்ஸ் கல்லூரியில் கேம்பிரிட்ஜ் சீனியர்வரை படித்தவர்.

### சான்றோர் தொடர்பு

பல்கலைக்கழகப் படிப்புக்காகக் காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பட்டப்படிப்புக்கு படித்தபோது, அங்கே புகழ்பெற்ற நிலைய தத்துவஞான சபையாரின் பணிகளில் வெகுவாக ஈடுபட்டு; அன்னி பெசன்ற் அம்மையார், பண்டிதமதன் மோஹன் மாளவியா இல்லறஞானி கலாநிதி பகவன்தாஸ் முதலானோருடன் நெருங்கிப் பழகினர்

பேராசிரியராயிருந்த சஞ்சீவராவ் இவரை வெகுவாகப் பாராட்டி வந்தார்

பேராசிரியராய் விளங்கிய பகவன்தாஸ் இவர் மீது பெருங்கருணையும் மதிப்புங்கொண்டு இவரைத் தம்முடைய மனைக்கு அழைத்து மக்களோடு மைந்தனாய்க் கொண்டாடி வந்தார்.

அந்தப் பழக்கம் காரணமாக இவர் பகவன்தாஸ் அவர்களின் மைந்தன் ஸ்ரீபிரகாசா அவர்களுடன் சகோதர அன்புடன் பழகினார்

### அரிய சந்திப்பு

ஸ்ரீபிரகாசா இந்திய மாநிலங்களில் ஆளுபதியாய் இருந்தவர் அவர் சென்னைமாநிலத்தேசாதிபதியாய் இருந்த காலத்தில் யாழ்ப்பாணம் வந்து பரமேஸ்வராக் கல்லூரியில் சேர். இராமநாதன் நினைவு பேருரை நிகழ்த்தியவர். அந்த வைபவம் கேம்பிரிட்ஜ் முதுமாணிப் பட்டதாரிகள் மூவரின் அரிய சந்திப்பாகவும் அமைந்தது தலைமை வகித்த சேர் அருணாசலம் மகாதேவா அவர்களும், பேருரை நிகழ்த்திய பிரகாசா அவர்களும், நன்றியுரை சொன்ன அதிபர் சிவபாதசுந்தரம் அவர்களும் கேம்பிரிட்ஜ் புகழ்பெற்ற [illegible]

இந்த [illegible] சந்திப்பு, பிரிந்தவர் கூடினாற் பேச வேண்டுமோ என்னும் முறையில் பிரகாசா அவர்களும் சுவாமிநாதன் அவர்களும் கண்டு தழுவிய சந்திப்பு.

காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் இடைநிலைத் தேர்வு என்னும் இன்ரர் ஆட்ஸ் பரீட்சையில் திறமையாகச் சித்தி பெற்ற சுவாமிநாதன் அவர்கள், பட்டப்படிப்புக்காகக் கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படித்தார்

கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் அக்காலத்தில் புகழ்பெற்ற பேராசிரியர்கள் இருந்தார்கள். சுவாமிநாதன் அவர்கள் இந்து பீகாரி இல்லத்தில் தங்கிப் படித்த காலத்தில் இல்லத்தின் வார்டன் என்னும் பொறுப்பாளராய் இருந்தவர் இராஜன் பாபு என்னும் இராசேந்திர பிரசாத் அவர்களாவார்.

### பாபுஜி தழுவினார்

இராசேந்திர பிரசாத் அவர்கள் பாரதநாட்டின் முதல் குடியரசுத் தலைவராய் இருந்த காலத்தில் இலங்கைக்கு வந்து, யாழ்ப்பாணத்துக்கும் வருகை புரிந்தவர் அவர் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய போது அவரை வரவேற்கப் புகுந்திருந்தவர்கள் மத்தியில் ஆஜானுபாகுவாக இமயம் போல் நின்ற சுவாமிநாதன் அவர்களைக் கண்டதும் விரைந்து சென்று கட்டித் தழுவினார்

இருவருள் எவர் முதலில் விரைந்தார் என்பது எவருக்கும் புலனாகவில்லை.

இருவரும் ஒருவராகி நின்றனர்.


தம் பழைய மாணாக்கனைக் கட்டித் தழுவிய குடியரசுத் தலைவர், அவரிடம் குசலம் விசாரித்த போது, சுவாமிநாதன் அவர்கள் கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் தாம் 1915 ஆம் ஆண்டில் பெற்ற கலைப்பட்டத்தின் முன், மாணாக்கரிடம் பெருமதிப்போடு பெற்ற இருவேறு பட்டங்களை மகிழ்ச்சி மீதூரப் புன்னகை ததும்ப நினைவு படுத்தினார்

### இலங்காதிபதி சுவாமிநாதன்

சுவாமிநாதன் அவர்களின் உயரம், மொத்தம், உதாரகுணமகிமை எல்லாவற்றையும் எடைபோட்ட மாணாக்கர்கள்; அவரை இலங்காதிபதி என்றும், இராவணேசுவரன் என்றும் வழங்கிய போது பேராசிரியர்கள் அந்தப்பட்டங்களை வெகுவாக இரசித்தார்கள் அவர்களும் இவரை இலங்காதிபதி என்றே அன்புடன் அழைத்து மகிழ்ந்தனர். (வளரும்)

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 39



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி: ..............................

..............................

வயது: ..............................

விலாசம் ..............................

..............................

ஒப்பம்: ..............................

### போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்

**மேலிருந்து கீழ்**

1. பார்த்தனுக்குப் பரந்தாமன் உபதேசித்தது.
2. முனிவர்கள் மேற்கொள்வது
3. பழங்கள் சேர்ந்து இருப்பது
4. மறைந்து போனதாகக் கருதப்படும் ஒரு கண்டத்தின் எல்லை
5. ஒதுக்குப்புறம் ஒதுங்கி தலைகீழாய் நிற்கிறது
8. இலவம் மரத்திலிருந்து கிடைப்பது
10. எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் என்பதை வலியுறுத்துவது
12. மாலை கடைசியெழுத்தை இழந்து தொங்குகிறது
15. சிங்கம்
17. கடிதம்
18. சைவர்களின்வாயில் ஒலிக்க வேண்டிய நாமம்
19. அமிழ்த்த

**இடமிருந்து வலம்**

1. ஷெல் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பு அளிப்பது
6. கவர்தல்
7. பர்வதம் மாறிக் கிடக்கிறது
8. ஒரு தோற்கருவி
9. இழிவுரை குழம்பி விட்டது
11. பூங்கொத்து தலைகீழாகி நிற்கிறது.
13. போர்க்காலத்தில் கொட்டப்படுவது
14. தோத்திரம்
16. பருவப்பெண்
18. ஆபத்துக்குரிய நிறம்
20. விண்
21. பெண்ணைக் குறிப்பது

### சொற்சிலம்பம் இல. 37 விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. ஆயா, 2 சீர்காழி 3. வாரணம், 4, தவிர் 5 வதுவை, 8 சாரதி 11. பத்து, 12 பகை. 13. தைத்த, 14 நம் 15 சதிர், 17. வசவு 18 தம்பி, 19. பாதம், 21 தூய.

**இடமிருந்து வலம்**

1. ஆசீர்வாதம், 6 யார், 7 ரவி, 8 சாது 9. காரணர், 10. ரவை. 11. பழி, 12. பதி 13. தை 14 நகை, 16. துவந்தம், 19. பாதி. 20 சதம், 21 தூதர் 22. ஈவு, 23. பிரியம்.

### சொற்சிலம்பம் இல 37 பரிசு பெற்றவர்கள் விபரம்

முதலாம் பரிசு:- செல்வி சு. லோஜனி
ஆனந்தபவனம்,
அரசடி வேலன்,
திருநெல்வேலி கிழக்கு.

இரண்டாம் பரிசு:- செல்வன் வ கேமநாதன்,
கே/பா S K. வரப்பிரகாசம்
மானிப்பாய் றோட்,
உடுவில்.

மூன்றும் பரிசு:- திரு வல்லிபுரம் வேல்முருகு.
45, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

* குறிப்பு:-
பரிசு பெற்றவர்கள் கடிதம் மூலம் அழைக்கப்படுவர் பரிசுப் பணத்தைப் பெறுவதற்கு பத்திரிகையில் வெளியான பெயருக்குரியவரே உரிய அடையாளஅத்தாட்சிகளுடன் நேரில்வரவேண்டும் எக்காரணம் கொண்டும் வேறு எவரிடமும் பரிசுப்பணம் கையளிக்கப்படமாட்டாது.

## விஞ்ஞானத்தை விஞ்சிய - - -

(5ம் பக்கத் தொடர்ச்சி) வெளைக் குறட்பாவிரி கவியே கண்டகண்ணுடிக் காட்சி தொலைநோக்கு எழுவதற்குத் துணை செய்தது ஆனால் பிலர் கண் - இந்தப் புல் நுனி நீர்க்காட்சியால் என்ன எழுந்தது என்று எவரும் கேட்க முன்வரலாம்.

### கபிலரும் கலிலியோவும்

பொதுவாக இயற்கைப் பொருளின் தன்மையை உணர்வதுதான் அறிவியல். வேண்டிய கருவிகளை அமைத்துக் கொண்டால் தான் பொறியியல் அறிவியல் அறிவின் ஆழத்தைப் பொறுத்து வளரும் பொறியியலோ தேவையைப்பொறுத்தே வளரும் தொலைநோக்கி வழியே பார்த்த மேல் நாட்டார் அறிவு விண்ணகம் எல்லையற்று விரிந்து கொண்டு ஓடுகின்றது என்ற உண்மையை 20 ம் நூற்றாண்டில் தான் உணர முடிகின்றது

ஒலி, ஒளி என்ற சொற்களுக்கு இடையில் ஒற்றுமை இருப்பது போலவே அவற்றின் இயல்பிலும் பல ஒற்றுமைகள் இருக்கின்றன

சிறப்பாக இரண்டும் அலை அலையாக அசைந்து பரவுகின்றன இருப்பினும் ஒளிக்கு வழிவிடும் சில பொருள் ஒலியை ஏனோ தடுத்து நிறுத்தி விடுகின்றன. இவ்வுண்மை நம்மில் பலருக்குத் தெரியாது.

கண்ணாடிக் கதவு வழியாக அறையினுள் இருப்பதைப் பார்த்ததும் பெயர் சொல்லி அழைக்கிறோம் ஆனால் நம் பேச்சு அவர் காதுக்கு எட்டுவதில்லை என்பதைப் பிறகுதான் அறிகிறோம் ஆனால் ஒலி, ஒளி பற்றிய இவ்வுண்மையை நன்குணர்ந்த சாத்தனார் (கி பி 2ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்) மணிமேகலையையும் உதயகுமரனையும் பிரித்து வைக்க அதுவரை எவரும் கையாளாத ஒரு புது முறையைக் கையாண்டு பார்க்கிறார்

### சாத்தனார் பாணி

இருவருக்குமிடையில் அவர் எழுப்பிய பளிங்குச் சுவர் ஒளிக்கு வழி விடும், ஆனால் ஒலியைத் தடுத்து நிறுத்தி விடும். உதயன் மணிமேகலையைப் பார்த்தான் மணிமேகலையும் பார்த்தாள் ஆனால் உதயன் பேசிய ஆவமொழி மணிமேகலையின் செவியில் சேரவில்லை அதே போன்று மணிமேகலை பேசியிருந்தாலும் உதயகுமரன் கேட்டிருக்க மாட்டான்

### வள்ளுவர் வழி

'கண்ணுக்கு வழி வைத்துக் காதுக்குத் திரை விடும்' இவ் அழகிய மண்டபத்தைச் சாத்தனார் 'விளிப்பு அறைபோகாது மெய்புறத்திடும் பளிங்கறை மண்டபம்' என்று சொல்கிறார். சாத்தனார் வள்ளுவர்வழி நிற்பவர். வள்ளுவர் மொழி போற்றுவர். வள்ளுவர் ஓரிடத்தில் ஒளியையும் ஒலியையும் பற்றிய கொள்கையை மிகத் துணிந்து கூறியுள்ளார்.

'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனுமில என்பதே அந்தக் குறளாகும்.

வள்ளுவர் உண்மையைச் சாத்தனார் சோதனை வழியாக நிறுவ முற்பட்டார் பளிங்குச் சுவரை எழுப்பினும், வாய்ச்சொல் தடைப்படினும் காதல் தடைப்படவில்லை.

### இராமன் பாதை

பளிங்குப் பொருளில் ஒளி ஊடுருவும் தன்மையைச் சாத்தனார் கண்டார். அப்படி ஊடுருவும் பொழுது ஒளியின் நிறம் மாறுபடுவதை அறிஞர் சி வி இராமன் கண்டார் இதனையே அறிவியல் மொழியில் கூறவேண்டுமானால் பளிங்குப் பொருளின் வழியே ஒளி புகுந்து வெளிவரும்போது ஒளியின் அலை நீளத்தால் மாற்றம் ஏற்படுவது பற்றி இராமன் கூறினார் இதனையே இராமன் விளைவு என்று அழைக்கிறோம். உண்மையில் இராமன் விளைவுக்கு அடிப்படையாக இருந்தது சாத்தனார் விளைவு என்பது தெளிவு.

விண்ணகம் விரிவடைவது பற்றி இன்று அறிகிறோம். விஞ்ஞானி இன்று சொல்லித் தெரிவதை அன்று மாணிக்கவாசகர் எடுத்துச் சொல்லியுள்ளார் மாணிக்கவாசகர் 1700 ஆண்டுகளுக்கு முன் உணர்த்திய உண்மையைப் பார்ப்போம்.

'அண்டப் பகுதியின்
உண்டைப் பிறக்கம்
அளப்பருந்தன்மை
வளப்பெருங்காட்சி
ஒன்றனுக் கொன்று
நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின்
மேற்பட விரிந்தன' *

## கணிதத்தின்---

(5ம் பக்கத் தொடர்ச்சி) றத்தை நிறுவுவோர்க்கு பரிசளிப்பதாக 1908 ஆம் ஆண்டில் 100,000 ஜெர்மன் மார்க்குகளை விட்டுச் சென்றார்.

எனினும் எவரும் அதனை இதுவரை நிறுவவில்லை மிக அண்மைக் காலத்தில் வாழ்ந்த ஜோன்வொன் நியூமன் (1903 – 1957) சிறந்த கணிதமேதை. கணிதத்தில் புதிய துறையையே உருவாக்கியவர் இவர் கணிதப் பிரசினங்களில் ஆழ்ந்து மூழ்கிவிடும் இயல்பினர் இவர் பிரயாணம் செய்யும்போது பிரசினங்களில் ஈடுபட்டு லயித்து விடுவதினால் புறப்பட்ட பிரயாணம் பற்றிய எல்லாவிடயங்களையும் மறந்துவிடுவாராம்.

பின்பு தொலைபேசி மூலம் மனைவியிடம் விசாரித்து போகுமிடத்தைத் தெரிந்து கொள்வாராம்.

அத்தகைய கவர்ச்சியும் ஈடுபாடும் அவருக்குக் கணிதத்தில் இருந்தது. அந்த ஆற்றலினால் கணிதத்தின் வளர்ச்சிக்குப் பலவழிகளிலும் உதவியுள்ளார் *

## தலைவன்---

(5-ம்பக்கத் தொடர்ச்சி) தனர். என்ன பேதமை அவன் நோய் தணியுமோ.

அன்றுகண்ட தலைவன் இன்று வந்தால் அல்லவோ அவன் காதல் நோய் தணியும். எளிமையாகவும், இனிமையாகவும் ஆழமாகவும் அருமையாகவும் அமைந்துள்ள இப்பாடல் படித்து [illegible] கும். *

## ஞானசஞ்சீவி---

(3ம் பக்கத் தொடர்ச்சி) சாத்வீக மனோபாவம் ஏற்படுகிறது

"லிகித ஜபம்" என்பது மந்திரங்களை உச்சரித்துக் கொண்டே எழுதும் முறை ஓய்வு நேரங்களில் ஒரு குறிப்பிட்ட மந்திரத்தை பல நூறு தடவைகள் எழுதுவதை வழக்கமாகக் கொள்வது நற்பலனைத் தரும்

ஜபத்தின் மகிமையை அர்ச்சுனனுக்கு உணர்த்துவதற்காக கிருஷ்ணபகவான் "யக்ஞங்களில் நான் ஜபயக்ஞமாவேன்" என்று கீதையில் கூறுகிறார்.

இவைபொதுவான சில மந்திரங்கள்:- ஓம் நமசிவாய (பஞ்சாக்ஷரம்) ஓம் நமோ நாராயணாய (விஷ்ணு மந்திரம்) ஓம் நமோ பகவதே வாசுதேவாய. (கிருஷ்ண மந்திரம்) ஓம் சிறி விக்னராஜாய (கணபதி மந்திரம்) ஓம் சிறி துர்காயை நம (தேவிமந்திரம்) ஓம் சிறி சரஸ்வத்யை நம (சரஸ்வதி மந்திரம்) ஓம் சிறி மஹாலக்ஷ்மை நம (லட்சுமி மந்திரம்) ஓம் சிறி சரவணபவாய நம (சுப்பிரமணிய மந்திரம்)

அடுத்த வாரம் 'ஓம்' என்னும் ஓங்கார பிரணவ மந்திரத்தைப் பற்றிப் பார்ப்போம்.— *

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சத்துருவோடு மித்திரரையும் அழிப்பன நஞ்சு வகைகள்

தோற்றமளிக்க வேண்டிய இஸ்ரவேல் இனப் பழங்களின் புளுபளபளத்ததோலில் காய மேற்பட்டு மாறிய அறிகுறியுடன் சபில நிற அடையாளங்கள் சரா வலின் தாக்கமாகும்.

பனிப்பூச்சிகளின் (Thrips) தாக்கமே சரா வலுக்குரிய காரணம். பழங்கள் தாக்கத்திற்குள்ளான பருவத்தைப் பொறுத்தும் தாக்கத்திற்குள்ளான செறிவைப் பொறுத்தும் (Intensity-of attack) தாக்க இயல்புகள் வேறுபட்டிருந்தமையும், பனிப்பூச்சிகளின் தாக்கம் கண்ணுக்குப் புலப்படும்போது அவை திராட்சைக் கொடியில் பல சந்தர்ப்பங்களில் இல்ல திருந்தமையும் சராவலுக்குரிய காரணங்களை இதுவரை காலமும் திராட்சைச் செய்கையாளர் கண்டு பிடிக்க முட்டுக்கட்டையாக இருந்தன.

இப்பூச்சிகள் மிகச் சிறியவை சாதாரணமாக குருத்து இலைகளையும், கூடுதலாகப் பூங்கொத்து, பிஞ்சு, காய், போன்றவற்றையும் தாக்குகின்றன. பூங்கொத்துக்களையே அல்லது பிஞ்சுக் குலைகளையோ ஒரு வெள்ளைக் கடதாசி அட்டை மேல் தட்டும்போது கோழிப்பேன் போன்ற சிறு மஞ்சள் நிறச் செந்துக்கள் மிகச் சுறுசுறுப்பாக அங்கும் இங்கும் ஓடுவதையோ, பாய்வதையோ அல்லது பறப்பதையோ அவதானிக்கலாம். பூதக்கண்ணாடி மூலம் இவைகளை சுலபமாகப்பார்க்கலாம்.

பனிப்பூச்சிகள் காய்களின் தோலையும் அதற்கு மேல் படிந்திருக்கும் மெழுகுப் பகுதியையும் அணில் போன்று காந்தி எடுத்து உட்புறமிருந்து வரும் சாற்றையுட்கொள்கின்றன இவ்வாறு ஏற்பட்ட காயங்கள் காலக்கிரமத்தில் மாறியபோதும் தோலின் பழைய மினுமினுப்பும் பளபள

## பகுதி - II

பும் அருகிராவ தாக்கத் தோற்றத்தையளிக்கும். இப்பூச்சிகளில் பல வகையுண்டு இவை யாவையும் வேறு பயிர்களாகிய வெங்காயம், ரோசா செடிகள், புல், பூண்டு போன்ற வேறு வகைத் தாவரங்களையும் அண்டிச் சீவிக்க கூடியன. கோடை காலங்களில் புல் பூண்டுகள் காளவிலுல் காயும்போது இப்பூச்சிகள் திராட்சையைப் பெருமளவில் வந்தடைகின்றன பிஞ்சுக் காய்களில் பனிப்பூச்சி முட்டை இட்ட இடத்தைச் சூழ்ந்து பரிவட்டம் (Halo) போன்ற தோற்றம் அமையும். பூச்சிகளின் இனங்களைப் பொறுத்து வருடமொன்றிற்கு 5-7 தலைமுறை

வற்றில் தங்கியிருக்கும் விவசாயிகளுக்குப் பிரச்சனை கொடுக்கும் பூச்சி புழுக்களை அழிக்கவல்ல ஊன் குறையாடிகளும், ஒட்டுண்ணிகளும் தமக்கு உதவும் நண்பர்கள் என்பதைச் சில விவசாயிகள் அறிந்து கொள்வதில்லை.

களையும் பிரயோசனமான செந்துக்களையும் பாதிக்கின்றது என்பது பற்றிய நுணுக்கமான ஆய்வுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் நடைபெறுகின்றன விஞ்ஞானிகளும் சூழ்நிலையிய



நச்சுத் திரவங்களை கருத்த முறையில் உபயோகிக்காவிடில் எமது சத்துராதிகளை அழிப்பதோடு எமக்கு உதவும் நண்பர்களையும் அழிக்க நேரிடுகிறது இவ்விதமாக செயல் இயற்கையில் இருந்து வந்த சமநிலையை பெரிதும் பாதிக்கும் மனிதனின் தலையீடு இல்லாதிருக்கும்

லாளர்களும் (Ecologist) பீடைப்பூச்சி அதைக் கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணி, ஊன் குறையாடி வேறு இரசாயனப் பாவனை போன்றவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாட்டிற்குத் தற்போது ஊக்கமளிக்கிறார்கள் நாமும் எமது விவசாயிகளும் இது போன்ற முறைகளில் அதிக கவனம் செலுத்துவே மேயானுல் சூழல் மாசுபடுவதைக் குறைத்து, பணப்பயிர்களுக்கு இன்றைய காலகட்டத்தில் ஏற்பட்டிருக்கும் நிலையற்ற நிலைமைக் கேற்றவாறு பயிர் பாதுகாப்புச் செலவுகளைக் குறைத்து நுகர்வோரையும, பயிர் உற்பத்தி

### திராட்சைப் பழ உற்பத்தி: பயன்தரும் சில உத்திகள்

கள் உற்பத்தியாகின்றன இவற்றின் வாழ்க்கைவட்டம், சுவாத்தியத்தைப் பொறுத்து 20-25 தினங்களில் அடங்கும்

### ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாடு

விவசாய உற்பத்தியில் ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாடு (Integrated pest control) பற்றிய ஆர்வம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. பூச்சி புழுக்களின் தோற்றம், பாதிப்பு, தாக்கம், பெருக்கம் ஆகியன கால நிலைக்கேற்பவும், மண் வளத்தைப் பொறுத்தும். பயிர்வகைகள் இருக்கும் தொலைவையும் (Isolation distance). பீடைகளைத் தாக்கும் ஊன் குறையாடிகள் (Predators) வேறு ஒட்டுண்ணிகள் (Parasites) போன்ற

போது ஒட்டுண்ணிகள் கிட்டத்தட்ட எல்லாப் பூச்சிகளையும் அழித்துப் பின் தமது உணவுப் பற்றாக்குறை காரணமாக எண்ணிக்கையில் குறைவதையும். மீண்டும் பீடைப் பூச்சிகளின் கை யோங்குவதையும் அவ

### 'ஆராய்ச்சியாளன்'

தாவிக்கக் கூடியதாக இருக்கிறது காலத்திற்குக் காலம் இப்படி ஒரு சாரார் கையோங்க மறு சாரார் தொகை குறைவதைக் காணலாம் இதனால் சில வருடங்களில் பூச்சித்தாக்கம் அதிகமாக இருக்கும், வேறு சில வருடங்களில் குறைவாகக் காண படும்.

இரசாயன மருந்து பாவனையையிட்டும் அது எவ்வாறு பீடைப் பூச்சி

யாளரையும் பாதிக்கும் நச்சுத் தாக்கத்தை வெகுவாகக் குறைக்கலாம். பீடைத்தாக்கம் பற்றிய முன்னறிவிப்பு (Forecast of pest) நடவடிக்கை எமது நாட்டில் அபிவிருத்தியடைந்தால், பயிர்ப் பாதுகாப்புச் செலவினங்களை அதிகம் குறைக்கலாம்

(வளரும்)

நெற்செய்கையில் பாதுகாப்பு

# நன்மைதரும் சிலந்திகளும் ஒட்டுண்ணி இனங்களும்

சிலந்தி இனங்கள்:

அ) லைகோசா / புலிச் சிலந்தி

இவை 5-18 மி.மீ பருமனுடையவை.

உடம்பில் 3 வரிகளைக் கொண்ட (y) அமைப்புடையவை, கண்களைச் சுற்றி கருமை படர்ந்து இருக்கும், இரவில் பயிரின் மேல் மட்டத்திலும் பகலில் பயிரின் அடியிலும் தண்டுப்பகுதியிலும், நீரின் மேலும் காணப்படும். பெண்சிலந்தியின் வயிற்றில் முட்டைகள் கொண்ட பையை அவதானிக்கலாம், ஒரு முறைக்கு 380 முட்டைகள் இடும், 100 நாட்கள் வாழக்கூடியது, சுறுசுறுப்பாக ஓடித்திரிவதுடன் இரைகளைப் பாய்ந்துண்ணும். இவை கபில நிறத்தத்தி / பச்சை இலைத்தத்தி / வெள்ளை இலைத்தத்தி / கூடுகாங்கிப் புழு / இலைச்சுருட்டி / சொப்புள ஈ போன்றவற்றை உணவாக உண்டு நெற்பயிருக்கு நன்மை பயக்கின்றது

(ஆ) டெற்றகனேத்தா) நாலு சொண்டுச் சிலந்தி

இவை 10-25 மி மீ. பருமனுடையது நீண்ட நான்கு சொண்டுகள் உடையவை, கால்கள் நீளமாகவும், நேர் கோட்டில் வைத்து இருப்பவை, சாம்பல் கபிலநிறமுடையன, இலைகளிலும், வலைகளிலும் அதிகம் தங்கியிருக்கும், 150 நாட்கள் வாழக்கூடியவை. 120 முட்டைகள் வரை இடக்கூடியவை, பகலில் ஓய்வாக இருக்கும், இரவில் வலைகளைப் பின்னி இரையைப் பொறி வைத்துப் பிடித்து உண்ணும் இவை கபில நிறத்தத்தி/வெ. நி தத்தி / ப இ. தத்தி/ சொப்புள ஈ / குறுக்குக் கோட்டுத்தத்தி போன்றவற்றை உண்டு நெற்

## பகுதி II

பயிருக்கு நன்மை பயக்கும்

(இ) ஆஜிஒபி பைச் சிலந்தி.

இவை 4-25 மி மீ. பருமனுடையது. 120 நாட்கள் வாழக்கூடியவை, உடம்பில் மஞ்சள்

### சிங்கிலேயர் பீற்றர்

(விவசாயப் போதனாசிரியர்)

வெள்ளை பளபளக்கும் கோடுகள் உடையவை, வயிற்றுப்பாகம் குருத்து பைபோல் கருமை நிறம் கொண்டது, நீண்ட, கடினமான கால்களை பயிரின் மேல் மட்டத்தில் பலமாக அமைக்கும், பெண் சிலந்தி 820 முட்டைகளை இடும் ஆற்றல் கொண்டது, முதிர்ந்த சிலந்தி வலையில் நடுவே தலையைக் கீழே போட்டுக் கொண்டு இரையை நோக்கிக் காணப்படும், இவை இலைச்சுருட்டி க. நி தத்தி, வெ. நி. தத்தி, ப கு த, கு கோ. தத்தி. சொப்புள ஈ, கூடுதாங்கிப் புழு, முதிர்ந்த சந்துகுத்தியை பிடித்து உண்டு நெற்பயிருக்கு நன்மை பயக்கும்.

ஒட்டுண்ணிகள்:

இவை தமது இரையை நேரடியாக உண்டு சீவிப்பவை தமது இரையிலும் பார்க்க உருவத்தில் பெரியவை, இவற்றிற்கு குறிப்பிட்ட உணவுகள் இல்லை, தமது இரையை பொறிவைத்தோ பிடித்து உண்டோ, விஷத்தைக் கக்கியே, உறிஞ்சிக் குடித்தே ஜீவிப்பவை.

(அ) ஒப்ஒனியா / கரபிட் வண்டு:

இவை 8 மி. மீ பருமனுடையவை. உடம்பு பளபளப்பான சிவப்பு, கருநீலம் போன்ற கோடுகளினுல் மூடப்பட்டு இருக்கும். தலை பாகம் முக்கோண வடிவமாகவும், வயிற்றுப்பாகம் போத்தலைப்போல் சிவந்த எறும்பின் உருவமைப்பைக் கொண்டது. கடித்துண்ணும் வாயுறுப்பைக் கொண்டது, நீரற்ற வயலில் பயிரின் அடிமட்டத்திலும் நீர் மேல் மட்டத்தில் பயிரிலும் காணப்படும். பகலில் சுறுசுறுப்பாக உணவைத் தேடித் திரியும். 120 நாட்கள் வாழக்கூடியது, பெண் வண்டு 28 முட்டைகளை இடும், பேடறஸ் வண்டிலும் பார்க்கப்பெரியவை. இவை க நி த / ப இ த / இலைச்சுருட்டி / கு கோ. த / வெ இ த / மயிர்க்கொட்டி / பச்சை செமிலுப்பா / சந்துகுத்தி போன்றவற்றை உணவாகக்கொண்டு நெற் பயிருக்கு நன்மை பயக்கின்றது

பேடறஸ் / ஸ்டீவினிட் வண்டு:

இவை ஒபிஒனியா வண்டிலும் பார்க்கச் சிறியது, 7 மி. மீ உருவமைப்புக் கொண்டது, உடம்பின் அரைப்பாகம் சிறகினுல் மூடப்பட்டிருக்கும், வயிற்றின் அடிப்பாகம் கருநீலமுடையதாகவும், மேல் நோக்கியும் காணப்படும்......, சிவப்பு, கருநீலம் கொண்ட உருவமைப்புக் கொண்டது, கடித்துண்ணும் வாயுறுப்பைக் கொண்டது, பயிரின் எல்லாப் பாகத்திலும் காணப்படும், நீரிலும், நிலத்திலும் சீவிப்பதுடன் நீந்தக்கூடியது,90 — 100 நாட்கள் வாழக்கூடியவை, 24 முட்டைகளைப் பெண்வண்டு இடும், இரவில் சுறுசுறுப்பாக இரையைப் பிடித்து உண்ணும்.

கொக்கினலிட் வண்டு:

இவை எபிலக்னவண்டின் குடும்பத்தைச்சேர்ந்தவை. 6-7 மி மீ. பருமனுடையது, முதிர்ந்த வண்டு உருண்டையாக 12 கறுத்த புள்ளிகளைக் கொண்டது, அனங்கு நீளமாகவும் பிசித்த உடலமைப்பைக் கொண்டது, கடித்தண்ணும் வாயுறுப்பைக் கொண்டது, பயிரின் எல்லாப் பாகத்திலும் காணப்படும் 150

(வளரும்)

## வாழுவாய் வளர்ந்து!

'ஈழநாடு' ஏட்டில் இருபத்தாறுண்டுகளாய்<br>
வாழும் எழுத்தை வளர்த்தெடுத்தே - ஆளும்<br>
உயர்ந்த சபா ரத்தினமே உந்தனுக்கு எம்<br>
வாழ்த்தை<br>
நயந்தோம், உன் நண்பர்களாம் நாம்.

பத்திரிகை ஆக்கப் பணியில், 'சபா' உனது<br>
முத்திரையைக் கண்டோம்; முகம் மலர்ந்தே<br>
- எத்தினமும்<br>
வந்தவரை வாய்முணுத்தல் இன்றி வரவேற்கும்<br>
அந்தப் பண்பு உந்தன் அணி

குட்டி எழுத்தாளர் கொண்டு வரும் ஆக்கத்தைத்<br>
தட்டிக் கழிக்காமல் அன்னவரைத் - தட்டிக்<br>
கொடுத்தாய்; வளர்ந்தார்கள் உன்கரத்தைப்பற்றி<br>
நெடுத்தாய் இதனாலும் நீ.

வாய்ப்பில்லை என்றாலும், தம்பி அடுத்தமுறை<br>
பார்ப்பம்' எனமொழியும் பண்பாளர் - கோப்பில்<br>
அடங்கிக் கிடந்த அவர் ஆக்கத்தைச் சேர்ப்பாய்,<br>
இனங்கண்டு சேரும் இடம்.

விண்ணாணம் இல்லை! விருப்போடு அவர்கள், 'சபா<br>
அண்ணை...' என உன்னை அழைப்பதிலே<br>
- கண்ணியமாய்<br>
ஈழநாட்டில் நீ இளைப்பாறி விட்டாலும்<br>
வாழுவாய் மேலும் வளர்ந்து.

குட்டிக்கதைகள் எடுத்தழகாய்க் கோக்கின்ற<br>
கெட்டித் தனத்தினையும் நம் எழுத்து - வட்டம்<br>
தான்<br>
வாழ்த்திடும்; நீ மேலும் வளர்க சசி பாரதியே<br>
தாழ்த்திடுவார் இன்றித் தழைத்து

-சத்தியசீலன்-

[சசிபாரதி சு சபாரத்தினம் அவர்களின் முப்பத்தாறுண்டுகால பத்திரிகைப் பணியையும் இலக்கிய சேவையையும் பாராட்டி நாளை ஞாயிறு காலை கலை இலக்கியப் பத்திரிகை நண்பர்கள் அமைப்பு நாவலர் கலாசார மண்டபத்தில் விழா எடுக்கின்றது 'சசிபாரதி கதைகள்' என்ற நூலும் விழாவில் வெளியிட்டு வைக்கப்படும்

அன்று பிற்பகல் சந்தோஷிக்க கலை இலக்கிய வட்டம் சென் பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் மண்டபத்தில் சசிபாரதிக்குப் பாராட்டுவிழா நடத்துகின்றனர்.

அவற்றையொட்டி இக்கவிதை வெளியிடப்படுகின்றது ]

## விடுதலைப் போராட்டங்கள்...

(3ஆம் பக்க தொடர்ச்சி) கூடாது. உனக்கு உகந்தது அல்ல.

'தைரியமாக இரு; மற்றவை உன்னைப் பின் தொடரும்'—

இப்படி நேருஜி கடிதத்தில் கூறியிருந்தார்

தந்தையின் புத்திமதிப்படி தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட இந்திரா காந்தியின் வீரத்தை, அவரின் அரசியல் எதிரிகள் கூட மதித்தனர்.

அவர் காட்டிய எழுச்சி மார்க்கம் தான் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் அதிசக்தி வாய்ந்த இராணுவ அரசியல் சக்தியாக இந்தியாவை வளர்த்தது

### யுத்தமுனையில் இந்திரா

பாகிஸ்தானுக்கு எதிராக 21 நாள் யுத்தத்தில் இந்தியா ஈடுபட்டது

இந்த யுத்தத்தில் காஷ்மீர் பள்ளத்தாக்கைப் பிடித்துவிடவேண்டும்என்ற பாகிஸ்தானின் நோக்கம் நிறைவேறவில்லை

இந்த யுத்தத்தில் இந்திராவின் பங்கு முக்கியமானதாக இருந்தது. எல்லையற்ற வீரத்தின் சின்னமாக அப்போது இந்திரா செயலாற்றினார்

யுத்தம் நடந்து கொண்டிருந்த சமயம் போர்க்களமான ஹஜிபூர் என்னும்இடத்துக்கு ஹெலிக்கொப்டரில் இந்திரா போக விரும்பினார்

ஸ்ரீநகரில் இருந்து அந்த இடத்துக்குப் போவது மிக ஆபத்தானது என்று விமானப்படை உயர் அதிகாரிகள் இந்திராவுக்குத் தெரிவித்தனர்

படை உயர் அதிகாரி ஒருவருடன் ஸ்ரீநகர் விமானத்தளத்தில் இந்திரா பேசிக் கொண்டிருந்தார் அருகில் ஹெலிக்கொப்டர் நின்றது

உயர் அதிகாரி தன்னைப் போகவிடமாட்டார் என்பதை அறிந்து கொண்ட இந்திரா, தன்னோடு நின்ற ஒரு ஊழியரை படை அதிகாரியுடன் பேசிக்கொண்டிருக்கும்படி கூறி விட்டு அந்த இடத்தை விட்டு நழுவினார்.

சில நிமிடங்கள் சென்ற பின்னர்தான் படை அதிகாரிக்கு நிலைமை புரிந்தது

எங்கே இந்திரா? சுற்றியிருந்தவர்களை அவர் கேட்டார்.

ஹெலிக்கொப்டரில் போர்முனைக்குச் சென்று கொண்டிருக்கிறார் என்று பதில் கிடைத்தது

தற்போது பங்களாதேஷ் ஆக இருக்கும் கிழக்கு வங்காளத்தில் பாகிஸ்தான் துருப்புக்கள் அட்டூழியத்தில், இறங்கிய சமயம், ஆயிரக்கணக்கில் அகதிகள் இந்தியாவுக்குள் வந்து கொண்டு இருந்தனர்

உச்சக் கட்டத்தில் தினம் சுமார் ஐம்பதாயிரம் அகதிகள் இந்தியாவுக்குள் அள்ளுப்பட்டு வந்தனர்.

பாகிஸ்தானுக்கு எதிராக யுத்தம் நடத்த இந்தியா முனைவதாக பாகிஸ்தான் ஜனாதிபதி யஹ்யாகான் குற்றஞ் சாட்டினார் இதன் மத்தியில் 1971 மே 26 ஆம் திகதி இந்திராகாந்தி, நாடாளுமன்றத்தில் பேசுகையில் சொன்னதாவது;

ஜனநாயகம் பற்றி நிறைய நாம் கேள்விப்பட்டுள்ளோம். ஜனநாயகத்தைக் காப்பாற்றத்தான் இரண்டாம் உலக மகாயுத்தம் நடத்தப்பட்டது என்று நேச நாடுகள் கூறுகின்றன.

ஆனால் ஜனநாயகம் பகிரங்கமாக, அரக்கத்தனமாக அழிக்கப்படும்போது அதுபற்றிய கருத்துக்கள் எதையும் அவர்களிடம் இருந்து நாம் கேள்விப்படவில்லை.

பாகிஸ்தானைக் கூறுபோட இந்தியா விரும்புகிறது என்று குற்றஞ் சாட்டப்படுகிறது.

பாகிஸ்தானில் இரண்டு பகுதிகளுக்கு இடையில் போராட்டம் நடப்பதற்குக் காரணம் பாகிஸ்தானை ஆளுபவர்களே

பிரிவினை என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது இது உண்மைக்கு மாறானதாகும்.

திட்டமிட்ட இனப்படுகொலையால்தான் இப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது ஆயிரக்கணக்கான பாவிப்பலர் கொல்லப்படுகிறார்கள்.

இதனால் பலர் அகதிகளாக இந்தியாவுக்கு ஓடிவருகிறார்கள்.

இந்தியாவின் பாதுகாப்பு, அமைதி மட்டுமல்ல தென்கிழக்கு ஆசியாவின் பாதுகாப்பே இதில் தங்கியுள்ளது

அமைதி, பாதுகாப்பு மீண்டும் நிலைநாட்டப்படவும் பராமரிக்கப்படவும் உலகநாடுகள் இதில் தலையிட வேண்டும்—

இப்படி இந்திரா, இந்தியப் பிரதமர் என்ற முறையில் பேசினார்

### நிக்ஸனுக்கு சூடாக கடிதம்

பங்களாதேஷ் பிரச்சினையில் பாகிஸ்தானுக்கு ஆதரவளித்த அமெரிக்க அதிபர் நிக்ஸனுக்கு பிரதமர் இந்திரா சூடான கடிதம் ஒன்றை எழுதினார்.

அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தை இந்திரா, நிக்ஸனுக்கு நினைவூட்டினார்.

இதைத் தொடர்ந்து விடுதலைப் போராட்டங்களில் பங்குகொள்வது இந்தியாவின் தேசியக் கொள்கைகளில் ஒன்றாக மாறிவிட்டது.

இந்திராவின் மறைவு, அடிமைத் தளையிலிருந்து விடுதலைபெற போராட்டங்கள் நடத்தும் விடுதலை இயக்கங்களுக்கு பேரிழப்பாக முடிந்து விட்டது.

ஆதாரம்:

ரெவர் ட்ரீபேர்க் எழுதிய 'இந்திராகாந்தி' நூல்

## பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

### மேல்நாட்டவரின் மேன்மை மிக்க பணி

ரிக் வேதத்தை ''மாக்ஸ் முல்லர்'' என்ற மேல்நாட்டவர் பதிப்பித்தார் இதற்கு அவர் எடுத்த முயற்சி ஒரு சுர சாதனை.

இற்றைக்கு சுமார் 125 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த முயற்சி தொடங்கப்பட்டது

இதனை வெளியிடுவதற்கு கிழக்கிந்திய கம்பனியர் அந்தக் காலத்திலேயே 9 லட்சம் இந்திய ரூபாக்களை ஒதுக்கிக் கொடுத்தார்களாம் ஆனால் இந்தப் பணமும் போதவில்லையாம்

இந்தியாவில் வேதம் அறிந்த பண்டிதர்கள் நாற்றுக்கணக்கானோரை மாதச் சம்பளம் கொடுத்து அமர்த்த வேண்டியிருந்தது

பண்டிதர்கள் எல்லோரும் ஒருங்கே வேலை செய்தும் கையெழுத்துப் பிரதிகளைத் தயாரிக்க 25 ஆண்டுகள் பிடித்தன. அச்சிடுவதற்கு மேலும் இருபது ஆண்டுகள் சென்றன

தனது வாழ்நாளின் பெரும்பகுதியை — 45 ஆண்டுகளை — இந்து சமய வேதப்பிரிவை பதிப்பிப்பதில் செலவிட்டார் மேல்நாட்டவரான மாக்ஸ் முல்வர்!

### ரஷ்யாவிலும் எயிட்ஸ்

மனிதனைக் கொல்லும் 'எயிட்ஸ்' நோய் ரஷ்யாவுக்கும் வந்துவிட்டது.

பதினெரு வயதான சிறுமி ஒருத்தி இந்நோய்க்கு இலக்கானது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

ரஷ்யாவில் 'எயிட்ஸ்' நோய்க்கு ஆளான முதல் நோயாளி இவள்தான்

### ஆழ்கடலிலிருந்து அளவற்ற பயன்கள்

உலக சமுத்திரங்களில் இருந்து வருடமொன்றுக்கு 80 ஆயிரம் கோடி தொன் விலங்கு உணவு பெறலாமாம்

அதாவது உலகில் ஒவ்வொரு நபருக்கும் வருடமொன்றுக்கு 160 தொன் விலங்கு உணவு — ஒவ்வொருவருக்கும் தினமும் சராசரி ஆயிரம் இறாத்தல் — விலங்கு உணவைக் கடலிருந்து பெறலாம்.

ஆனால் அவ்வளவு உணவையும் பெற்று பயன்படுத்தும் நிலையில் நாம் இல்லை.

உலக சமுத்திரங்களில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் வகையான உயிரினங்கள் இருக்கின்றன. ஆனால் 2 ஆயிரம் வகையான ஜீவராசிகள் மட்டுமே உணவாக உபயோகிக்கப்படுகின்றன .

ஆண்டொன்றிற்கு கடலில் 200 கோடி தொன் மீனினங்கள் உற்பத்தியாகின்றன ஆனால் வருடமொன்றுக்கு 7 கோடி தொன் மீனினங்கள் மட்டுமே மனிதனுக்கு உணவாக உட்கொள்ளப்படுகின்றது.

உலகில் தற்போது நிலப்பகுதியிலிருந்து பெறப்படும் நிலக்கரியைப்போல 900 மடங்கு நிலக்கரியை கடற்படுக்கையில் இருந்து பெறலாம்

### குருட்டுத்தன்மை முற்றாக ஒழியும்!

உலகில் மனித சமுதாயத்தின் மத்தியிலிருந்து குருட்டுத் தன்மையை முற்றாக ஒழிக்கலாமா?

ஆம் என்று முழு நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள் ரஷ்ய விஞ்ஞானிகள்

நவீன எலக்ரோனிக்ஸ் சாதனங்கள் மூலம் மூளையின் பார்வைப் பகுதியில் நேரடியாகவே தூண்டலை ஏற்படுத்த முடியும் என்பதை அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஒளியின் மாற்றங்களை உணரக்கூடிய வகையில் நுண்ணியமான முறையில் எலக்ரோனிக்ஸ் கருவிகளைச் சரிவர அமைத்து அதன் சமிக்ஞைகளை மூளையின் பார்வைப் பகுதிக்கு அனுப்பும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்

அந்த முயற்சியில் அவர்கள் வெற்றியீட்டி...

## நாணயமாற்று விகிதம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது. (இது இலங்கை வங்கியின் 24 ஆம் திகதிய மாற்று விகிதமாகும்.)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 39. 74 |
| அமெ. டாலர் | 28. 24 |
| இந்திய ரூபா | 2. 19 |
| மார்க் ஜேர்மனி | 14. 88 |
| கனடா டாலர் | 20. 09 |
| பிராங் (பிரெஞ்சு) | 4. 24 |
| பிராங் (சுவிஸ்) | 16. 86 |
| அவுஸ். டாலர் | 17. 97 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓர் நற்செய்தி"
மில்க்வைற் நீல சோப்
புதிய வாசனையுடன், கூடிய நிறையுடன்;
எங்கும் விற்பனையாகின்றது.
விலை ரூபா 2.00 மட்டுமே!
10 மேலுறைகளை அனுப்பி
"கந்தர் சஷ்டி கவசம்"
என்ற புத்தகத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

25 - 10- 1986 சனிக்கிழமை

இயற்கை வாழ்வே சிறந்த வாழ்வு
நுளம்புத் தொல்லையை நீக்கி
விட்டுத் தூய்மையைத் தரவல்லது
நீம் சுகாதார தூபம்
ஒரு பைக்கற் விலை -/50 சதம் மட்டுமே.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# பெங்களூர் மாநாட்டில்
## இந்தியாவுக்கு இரு பணிகள்

மந்திரிகள் மாற்றத்தைத் தொடர்ந்து இனப்பிரச்சினை பற்றிய மந்திராலோசனைகள் மீண்டும் புதுடில்லியில் ஆரம்பமாகி விட்டன.

தமிழ்நாட்டில் ஒரு வாரம் தங்கியிருந்த இந்தியத் தூதர் டிக்ஸிற் கடந்த வியாழன் புதுடில்லி சென்று புதிய வெளிவிவகார அமைச்சர் நாராயண் திவாரியைச் சந்தித்தார்.

உலகச் சவாரியை முடித்துக் கொண்டு பிரதமர் ராஜீவ் திரும்பிய பின்னர், இனப்பிரச்சினைப் பேச்சுக்களுக்கு முதலிடம் அளிக்கப்படும் என்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. இப்போது தான் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடிய சமாதான யோசனைகள் திட்டம் ஒன்றை இலங்கை அரசு சமர்ப்பித்துள்ளது என்று நியூசிலாந்தில் வைத்து இந்தியப் பிரதமர் கூறியிருந்தார்.

### மயக்கம் தெளிவு

மாகாணசபை யோசனைகளைச் சமர்பித்தவுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு விட்டது என்று 'கனவு' கண்டு வரும் இலங்கை அரசின் மயக்கத்தை தெளிவிப்பதாக இந்தியப் பிரதமரின் கருத்து அமைந்துள்ளது.

இந்த நிலையில் பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு இராணுவ உதவிகள் வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளதாக முன்னர் செய்தி வந்தது.

அமெரிக்க உதவி கட்டுநாயக்கா வரைதான் இருக்கும்; அதற்கு அப்பால் போகாது-இப்படி அமெரிக்க தூதரக அதிகரி கூறிவிட்டார்.

இலங்கைக்கு அமெரிக்க இராணுவ உதவி என்பது, இந்தியாவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இரண்டு தினங்களுக்கு முன்னர், இந்தியாவில் சோவியத் ரஷ்யாவுக்கு தளங்கள் உண்டு என்று பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியது.

இந்தியா அக்குற்றச்சாட்டை உடனடியாக நிராகரித்து விட்டது.

உள்ளும் புறமும்
குறுமுனி

### வியாக்கியானம் காணும் முயற்சி

இந்த நிலையில் 'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்கு வியாக்கியானம் காணும் முக்கிய பணியில் அடுத்த மாத நடுப்பகுதியில் பெங்களூரில் கூடும் 'சார்க்' நாடுகளின் தலைவர்கள் ஈடுபடவிருக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை 'போராளிகள்' என்று இந்தியா அழைப்பதை பாகிஸ்தான் பகிரங்கமாக குறைகூறியுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினை தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆகியன உச்சக்கட்டம் அடைந்துள்ள இத்தருணத்தில் 'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்கு வியாக்கியானம் கொடுக்கும் கட்டம் இந்தியாவுக்கு ஏற்பட்டு விட்டது.

பெங்களூர் மாநாட்டுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன செல்ல இருக்கின்றார். ஆனால் பாகிஸ்தான் ஜனாதிபதி கலந்து கொள்ளமாட்டார். அவரின் சார்பில் பிரதமர் மட்டுமே கலந்து கொள்வார்.

இந்த நிலையில் பெங்களூர் மாநாட்டில் 'பயங்கரவாதி' யார் என்ற சொல்லுக்கு அர்த்தம் கண்டுபிடிக்க வேண்டிய பணியுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய பொறுப்பும் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது.

* இறுதிக் கட்டப் பேச்சுக்களில் தமிழ்ப் போராளி அமைப்புக்களை கலந்து கொள்ளச் செய்ய வேண்டும்.
* தமிழரின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடியதான தீர்வு ஒன்றுக்கு இலங்கை அரசை இணங்கச் செய்ய வேண்டும்.
* 'பயங்கரவாதி' என்ற வார்த்தைக்கு வியாக்கியானம் காணப்பட வேண்டும். இச் சவாலை இந்தியா எப்படி வெற்றி காணப்போகிறது?

இனி இடம்பெறும் பேச்சுக்கள் நெருக்கடியைத் தீர்க்க உதவுமா?

இக் கேள்வியே அரசியல் வட்டாரங்களில் இப்போது எழுப்பப்படுகிறது.

# ஆயுதப்படையினரை
## திசை திருப்பும் போராளிகள்

கொழும்பு, அக். 25

பொய் வானொலித் தகவல்கள் மூலம் ஆயுதப் படையினரின் நடமாட்டங்களைப் போராளிகள் திசை திருப்பி விடுகின்றனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

பொய் வானொலித் தகவல்களை நம்பி ஏமாற வேண்டாம் என்று ஆயுதப்படையினருக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

ஆயுதப்படையினரின் பெயர்களைச் சொல்லி அழைத்து உத்தரவிடும் பொய்த் தகவல்களை வானொலி சாதனங்கள் மூலம் போராளிகள் வழங்குகின்றனர் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்படியான பொய்த் தகவல்களினால் ஆயுதப் படையினர் திசை திருப்பப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் ஒப்புக்கொண்டுள்ளன.

ஒரு முறை ஒரு குறிப்பிட்ட காட்டுப்பகுதியில் போராளிகள்முகாம் இருப்பதாக வானொலித் தகவல் படைகளுக்குக் கிடைத்தது.

படையினர் அப்பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இடைவழியில்தான் பொய்த்தகவல் என்பது படையினருக்குத் தெரிந்ததாம்.

நிலக்கண்ணிகளைப் புதைத்துவிட்டு அப்பகுதிகளுக்குப் படையினரைத் திசை திருப்பிவிடுவதே போராளிகளின் தந்திரம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

### படை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

களை முஸ்லிம் மக்களே எடுத்துச் சென்று அடக்கம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

க. தம்பிராஜாவின் குடும்பத்தில் அவரும் அவரது மனைவியும் உட்பட 6 பேர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் இளைப்பாறிய காவலாளி எஸ். தேவசகாயம் (வயது 60) க. தங்கம்மா (வயது 72), டெய்சி மரியம்மா (வயது 52) ஆகியோரின் சடலங்கள் இனங்காணப் பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்களில் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளோர் விவரம்:-

நீக்கிலப்பிள்ளை இரத்தினசிங்கம் (73 வயது)- ஆயுர்வேத வைத்தியர் மாந்தை, தம்பிராசா ஞானசீலி (19 வயது)- சித்தாத்துறை வாசி, குமாரி (17 வயது) இவரது தாயாரும் இச் சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

### ரயிலைத்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தனர்.

ஓமந்தையில் வைத்துத் தான் நடைபவனியாக வந்த சிப்பாய்கள் பஸ்களை தங்களுக்கு முன்னால் செல்ல அனுமதித்தனர்.

இச்செயல்பற்றி வவுனியா மாவட்ட பிரசைகள் குழுச் செயலாளர் டாக்டர் எஸ். வி. பரராசசிங்கம், உபதலைவர் திரு. அ. மயில்வாகனம் ஆகியோர் கொழும்பு அதிகாரிகளிடம் முறையிட்டனர். (உ-எ)

### குடாநாட்டிற்கு ...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். ஏனைய மக்களுக்கு வழங்கும் உரிமைகளை நாம் அவர்களுக்கு மறுக்கக் கூடாது.

வடபகுதி தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது உண்மையே. இது ஒரு தற்காலிக அனுகூலமே. (உ-எ)

### விமான...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ரங்கள் வருமாறு:-

1. ரி. வெஸ்லி டொமினிக். அவுஸ்திரேலியாவிலிருந்து நாடுகடத்தப்பட்டார்.
2. கந்தையா பரேந்திரன், பிரான்ஸிலிருந்து நாடு கடத்தப்பட்டார். (உ-எ)

### சமாதானப்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்படவேண்டியுள்ளது. எனவே இராணுவம் எம்மக்களைக் கொன்று குவிப்பதைக் கட்டுப்படுத்தி மக்களைப் பாதுகாத்து வருகின்றது -இப்படி புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

# உலக உலா
என்.பி.சீலன்

# இந்தியாவை கலக்கும்
## அமைச்சரவை மாற்றங்கள்

இவ்வாரம் இடம் பெற்ற முக்கிய சம்பவங்களில் ஒன்று தமிழ்நாடு அமைச்சரவையிலும் இந்திய மத்திய அமைச்சரவையிலும் செய்யப்பட்ட மாற்றங்கள் ஆகும்

பெரும் அளவில் இடம் பெற்ற இத் திடீர் மாற்றங்கள் இந்திய அரசியலில் பல்வேறு ஹேஷ்யங்களைத் தோற்றுவித்திருக்கின்றன.

தமிழ்நாட்டிலும் மத்தியிலும் ஏற்பட்டுள்ள உள் பூசல்களின் விளைவே இந்த மாற்றங்கள் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

தமிழ்நாடு அமைச்சரவை மாற்றங்கள் நிகழ்ந்து ஒரு நாளுக்குப் பின்னர் மத்திய அமைச்சரவை மாற்றங்கள் இடம்பெற்றன.

தமிழ்நாட்டில் இடம் பெற்ற மாற்றங்களின் போது தமிழ்நாட்டில் செல்வாக்குள்ள அமைச்சர்களில் ஒருவராகக் கருதப்பட்ட ஆர். எம். வீரப்பன் உட்பட 10 பேர் பதவி விலக்கப் பட்டுள்ளனர்.

### உள்பூசல்

அ. தி. மு. க. வுக்குள் இருந்த உள் கட்சிப் பூசலில் அ. தி. மு. க வின் கொள்கை பரப்பும் செயலாளர் ஜெயலலிதாவுக்கு எதிராக இயங்கிய கோஷ்டிக்கு தலைமை வகித்தவர்தான் இந்த ஆர். எம். வீரப்பன்.

வீரப்பனுடன் சேர்ந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் ஜெயலலிதா எதிர்ப்பாளர்களே.

அ. தி. மு. க வின் 14 வருடகாலச் சரித்திரத்தில் முன் எப்போதும் இல்லாதவாறு எம். ஜி. ஆர். பெரும் அரசியல் நெருக்கடி ஒன்றை எதிர்நோக்கியுள்ளார் என்று தெரிகிறது.

பாண்டிச்சேரி சட்டசபையில் ஏற்கனவே அ. தி. மு. க உறுப்பினர்கள் இருவர் தி. மு. க. வில் சேர்ந்துள்ளனர்.

இரண்டாவது தடவையாக அமெரிக்காசென்று சிகிச்சை பெற்றுத் திரும்பி உள்ள எம். ஜீ. ஆர். தனது தனிமனித செல்வாக்கினுல் இன்று ஆட்சியை தக்கவைத்துக் கொண்டிருக்கிறுர். தி. மு. க. தலைவர் மு. கருணாநிதியின் அரசியல் கண்ணியம் குறித்து இருந்து வரும் சந்தேகங்கள் அ. தி. மு. க ஆட்சிக்குச் சாதகமான நிலையை இன்னும் தோற்றுவித்துக். கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் பதவி நீக்கம் செய்யப்பட்ட 10 அமைச்சர்களும் வருமாறு:

1. ஆர். எம். விரப்பன் 2. சி. அரங்கநாயகம் 3. கே. காளிமுத்து 4. டாக்டர் எச். பி. ஹாண்டே 5. ரி. வீரசுவாமி 6. என். நல்லசுவாமி 7. எம். ஆர். கோவிந்தன் 8. திருமதி கோமதி ஶ்ரீநிவாசன் 9. திருமதி விஜயலக்ஷ்மி பழனிசுவாமி 10. ஜனுப் வை. எம். எஸ். யூசுப்.

முன்னாள் தொழில் அமைச்சர் கே. ஏ. கிருஷ்ணசாமி மீண்டும் மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

### 15 பேர் மட்டும்

முதலமைச்சர் எம்.ஜி. ஆருடன் சேர்த்து தற்போது தமிழ்நாடு மந்திரி சபையில் 15 பேர் மட்டுமே உள்ளனர்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட அமைச்சர்களின் பொறுப்புக்களை தற்போதைய அமைச்சர்களே கவனிப்பார்கள் என்று எம். ஜீ. ஆர் அறிவித்துள்ளார்.

அமைச்சரவையில் உள்ள 15 பேர் விவரம் வருமாறு:-

1. எம். ஜி. ஆர். — முதலமைச்சர், உள் துறை, அனைத்திந்திய அலுவல்கள்.
2. வி ஆர். நெடுஞ்செழியன் — நிதி.
3. எஸ். ராமச்சந்திரன் — உணவு.
4. கே. ஏ. கிருஷ்ணசாமி – உள்ளாட்சி நிர்வாகம், தொழிலாளர் நலன்.
5. கே. ராஜாராம் – தொழில், வேளாண்மை.
6. சி. பொன்னையன்– கல்வி, சட்டம்.
7. எஸ். முத்துசாமி– போக்குவரத்து
8. எஸ். திருநாவுக்கரசு – வீட்டுவசதி, கைத்தறி.
9. வி. வி. சுவாமிநாதன் – சுற்றுலா, மின்துறை, மதுவிலக்கு.
10. ஆர். சௌந்தரராஜன் – மதிய உணவுத் திட்டம், சமூகநலன் கதர்.
11. ஆனூர் ஜெகதீசன் கிராமத் தொழில்.
12. டி. ராமஸ்வாமி– வர்த்தக வரி.
13. ஏ. அருணாசலம் – ஆதிதிராவிடர் நலன்.
14. கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் – பொதுப்பணி.
15. பா.உ. சண்முகம்– சுகாதாரம்.

### மத்தியஅமைச்சரவை

இந்தியமத்திய அமைச்சரவை மாற்றங்களும் எதிர்பாராதவையே. ராஜீவ் காந்தி பதவிக்கு வந்த பின்பு அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட பெரிய மாற்றங்களாக இது கருதப்படுகிறது.

கடந்த 22 மாதங்களில் மொத்தம் 6 மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாரம் இடம் பெற்ற 6 ஆவது அமைச்சரவை மாற்றத்தில் ஐந்து அமைச்சர்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் அமைச்சர். நால்வர் இணை அமைச்சர்கள்.

நீக்கம் செய்யப்பட்டவர்களில் அரசியலில் ராஜீவ் காந்திக்கு அடுத்தவராகக் கருதப்பட்டு வந்த அருண் நேருவும் ஒருவர். ராஜீவ் காந்தியின் நெருங்கிய உறவினர் இவர்.

அருண் நேரு வகித்து வந்த பாதுகாப்பு இணை அமைச்சர் பதவி தமிழரான பா. சிதம்பரத்துக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

வெளிவிவகார அமைச்சர் சிவசங்கர் வர்த்தக அமைச்சராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இந்திய அரசியலில் அடிக்கடி மாற்றப்படும் பதவியான வெளிவிவகார அமைச்சர் பதவி என். டி. திவாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

3 அமைச்சர் பதவிகளுக்கும் 4 இணைஅமைச்சர் பதவிகளுக்கும் புதிய நியமனங்கள் இடம்பெற்றுள்ளன. இந்திரா காங்கிரஸ் துணைத்தலைவர் அர்ஜுன்சிங், ஹரியானா முன்னாள் முதல்வர் பஜன்லாக் தமிழ்நாடு நீலகிரி எம். பி. ஆர். பிரபு இவர்களில் சிலர்.

தமிழ் நாட்டிலும், மத்தியிலும் அடிக்கடி இடம் பெறும் மந்திரி சபை மாற்றங்கள் ஸ்திரமான ஆட்சிக்கு அறிகுறி அல்ல.

# பாதுகாப்புத் தொடர்பான

(1 - ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ் மாவட்டத்தில் உள்ள திணைக்களங்கலின் அலுவலக ஊழியர்கள் உத்தியோகத்தர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை அவர்களின் தூதுக்குழு ஒன்று ஜனாதிபதியைச் சந்தித்து நேரில் எடுத்துக் கூறவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க நான் தயாராக உள்ளேன். அவர்கள் முன் வருமிடத்து உரிய நடவடிக்கை எடுப்பேன்.

இதை விடுத்து ஜனாதிபதியோ, பாதுகாப்பு அமைச்சோ என்னிடம் வழங்காத பொறுப்பை வைத்து நான் எப்படி உறுதி மொழி எதனையும் தர முடியும்?

எனவே பாதுகாப்பு சம்பந்தமான பிரச்சினை எதையும் என்னிடம் பேச வராதீர்கள்.

இப்படி அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (உ – 10)

# சிற்றுலய திறப்பு விழா

வட்டுக்கோட்டைஅக்.25

பண்டத்தரிப்பு அரசினர்கிராமிய வைத்திய சாலைமுன்றலில் புதிதாகக் கட்டிமுடிக்கப்பட்டிருக்கும் புனித வேளாங்கண்ணி அன்னையின் சிற்றுலயத் திறப்பு விழாவும் திருநாள் திருப்பலிப் பூசையும் இன்று சனிக்கிழமை காலை 7 மணி அளவில் நடைபெறும்.

சில்லாலைப் பங்கு, விளான், பண்டத்தரிப்புப் பங்குகள், மாதகல் பங்கு, இளவாலைப் பங்கு, மாரீசன்கூடல் பங்கு பொது மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணத்தைக் கொண்டே இந்த அழகிய சிற்றுலயம் அமைக்கப்பட்டுள்ளது. (உ-161)

# தாய் தந்தையரும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்பொழுது அப் பகுதிகளில் உள்ள வீடுகளில் இருந்து தீச்சுவாலைகள் எழுந்து கொண்டிருந்தன. துப்பாக்கி வெடிச்சத்தங்களும், குண்டுச் சத்தங்களும் கேட்டபடி இருந்தன.

இதன் காரணமாக பயம் கொண்ட நாம்-சிப்பாய்கள் வருவதை அறிந்து – வீட்டிற்குள் சென்று கதவைப் பூட்டிவிட்டு கட்டிலுக்குக் கீழ் படுத்துக் கொண்டோம்.

எம்முடன் அடுத்தவீட்டில் இருந்து ஓடிவந்த மற்றவர்களும் கட்டிலுக்குக்கீழ் படுத்துக்கொண்டனர்.

அப்பொழுது வீட்டுக்கு வெளியே வெடிச் சத்தங்கள் கேட்டன.

எமது வீட்டுக் கதவை நோக்கியும் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டது.

அதைத் தொடர்ந்து கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்த சிப்பாய்கள் எம்மைக் கண்டதும் எம்மீது தொடர்ச்சியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் என்னுடன் படுத்திருந்த எனது அம்மா, அப்பா, தம்பி, மூன்று தங்கச்சிமார் ஆகியோர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

அடுத்த வீட்டில் இருந்து வந்த இருவரும் கொல்லப்பட்டனர்.

எம்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சிப்பாய்கள் அடுத்தநாட் காலை வரை அங்கேயே நின்றிருந்தனர்.

இதனால் வெளியே வரமுடியாத நான், இறந்தவர்கள் மத்தியில் கிடந்தேன்.

பின்பு இளைஞர்கள் சிலர் எமது வீட்டிற்கு வந்து காயமடைந்த என்னையும் மற்றைய ஒருவரையும் காப்பாற்றி இங்கே அனுப்பி வைத்தனர்.

–இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இவரது குடும்பத்தில் உயிரிழந்தவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

1. க. தம்பிராசா (60 வயது) இவர் தச்சு வேலை செய்து வருபவர்.
2. தம்பிராசா தருமசீலி (10 வயது)
3. தம்பிராசா தேவராணி (6 வயது)
4. தம்பிராசா அருள்நாயகி (3 வயது)
5. தம்பிராசா இரத்தினம் (4 வயது)
6. வீராவி தம்பிராசா (50 வயது) (உ-10)

# நாவலர் சிலையை, . .

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

சமஸ்கிருத துறை) இராசரத்தினம் சிவசந்திரன் (விரிவுரையாளர் புவியியல் துறை)

இ இராஜ்மோகன் (உதவி விரிவுரையாளர், மெய்யியல்) க. அருள்வேல் (உதவி விரிவுரையாளர், வர்த்தகம்) ப கோபால கிருஷ்ணன் (தலைவர். இந்து நாகரிகத்துறை), க. சிவானந்தமூர்த்தி உதவி விரிவுரையாளர், மெய்யியற்துறை) சி சிவகுருநாதன் (தலைவர். ஆங்கிலமொழித்துறை)

ச. விநாயகமூர்த்தி (ஆங்கில மொழித்துறை), க. சிவசுப்பிரமணியம் (ஆங்கில மொழித்துறை) வ. வீரசக்தி (ஆங்கில மொழித்துறை) ச ஞானசேகரம் (ஆங்கிலத்துறை) ம முத்தையா (ஆங்கிலத்துறை)

வே வ ரவீந்திரன் (ஆங்கிலத்துறை), வே மணிவாசகர் (உதவி விரிவுரையாளர், பொருளியல்துறை), ப சிவநாதன் (விரிவுரையாளர்), கே.எம். புவனேஸ்வரன் (விரிவுரையாளர்), ப. புவனேஸ்வரன் (விரிவுரையாளர்) [illegible] மூர்த்தி (விரிவுரையாளர்) [illegible] நாதன் (விரிவுரையாளர்)

ச. விவேகானந்தன் (உதவி விரிவுரையாளர்) இ. பாலசுந்தரம் (சிரேஷ்ட விரிவுரையாளர்) இ. கயிலைநாதன் (விரிவுரையாளர்)

க. தேவராஜா (உதவி விரிவுரையாளர்). ப இருபானந்தி (உதவி விரிவுரையாளர்), வி சிவச்சந்திரன் (உதவி விரிவுரையாளர்), ப புஷ்பரட்ணம் (உதவி விரிவுரையாளர்) ச வாமதேவா (விரிவுரையாளர் இந்து நாகரிகத்துறை)

க கமலாசனி (உதவி விரிவுரையாளர்) அ சிறீசந்திரராஜா (உதவி விரிவுரையாளர்), திருமதி கோ நாகேந்திரம். (உதவி விரிவுரையாளர்) து. கணேசிங்கம் (உதவி விரிவுரையாளர்), திருமதி கணேசமூர்த்தி (விரிவுரையாளர்)

பா கந்தசாமி (விரிவுரையாளர்) ந நித்தியானந்தன் உதவி விரிவுரையாளர் நுண்கலை) மல்லிகா ராஜரத்தினம் (விரிவுரையாளர்), சி பத்மநாதன் (பேராசிரியர், வரலாற்றுத்துறை), இ. சோமேச சுந்தரி (உதவி விரிவுரையாளர்) [illegible] (உதவி விரிவுரையாளர், வரலாற்றுத்துறை) சி. சிவபாதம் (ஆங்கிலத்துறை)

# கருத்துக் கலசம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாக நடத்தப்பட வேண்டும்.

கருத்தரங்குகளோடு நிற்காமல், கால்நடை வளர்ப்போருக்கு உதவும் வகையில் கிராமந்தோறும் கால்நடை சிகிச்சை முகாம்கள் முதலானவையும் நடத்தப்படவேண்டும்.

கால்நடை வளர்ப்போருக்குத் தேவையான கால்நடைத் தீன்கள், சத்துணவுகள், மருந்துகள் என்பனவும் இலகுவில் கிடைக்க வகைசெய்யப்படவேண்டும்.

கால்நடை வளர்ப்பை சிறு தொழிலாகக்கருதி வளர்க்க வேண்டும். அது வீட்டுத் தொழிலாக இருப்பினும் உரிய முறையில் செய்தால் பெரிய பயன்தரும். இதனை மனதிற் கொண்டு கால்நடை வளர்ப்பில் கவனம் செலுத்துவோமாக.

இன்று நடப்பவை

### அச்சுவேலியில் வெள்ளைப் பிரம்பு தினம்

யாழ்ப்பாணம், அக். 25

யாழ் விழிப்புலனற்ரோர் சங்கம் அச்சுவேலி லயன்ஸ் கழக ஆதரவுடன் நடத்தும் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின விழா இன்று அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

லயன் என். பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வெள்ளைப்பிரம்பு ஊர்வலமும்; வெள்ளைப் பிரம்பு வழங்கும் வைபவமும், வெள்ளைப் பிரம்பு பற்றிய விளக்கவுரைகளும், விழிப்புலனற்ரோர் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும் (உ-5)

### அதிசயம்!

லண்டன், அக். 24

அலுமாரியில் முட்டி மோதினார்; 15 ஆண்டுகளுக்கு முன்னர் போன கண் பார்வையை 39 வயது குடும்பப் பெண் மீண்டும் பெற்றார்.

இந்த அதிசயம் லண்டனில் இடம்பெற்றது.

### விஜேயின்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துலத்முதலி: நிபந்தனையின்றி சிப்பாய்களை விடுவிக்கத்தான் விஜயகுமாரணதுங்காவை யாழ் நகருக்கு அனுப்பினேம்; யுத்தக் கைதிகளை பரிமாறுவதற்கு அல்ல. (அ-எ)

### நடவடிக்கை

ஷெல் தாக்குதலில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்காகப் 'புளொட்' போராளிகளினால் அமைக்கப்பட்ட மண் மூடை பாதுகாப்பு அறைகளை சில விஷமிகள் அசுத்தப்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மண்மூடை அரண்களைச் சில விஷமிகள் துஷ்பிரயோகம் செய்வதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது என்றும்—

இது தொடர்பாகக் கைது செய்யப்படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் புளொட்' போராளிகள், சார்பில் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (உ-10)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 25- 10 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org